மோகினி
1-9-49
ஜகன்மோகினி
யந்தி நினைவு இதழ்

..தமாஜி சேவா சங்கம்

ஜூலை மாதம் 2-ந்தேதி சங்கத்தின்
தச சிறுமிகளுக்கு வேஷப்பொருத்தப் பே
மான சிறுமிகள் பலபல வேஷங்களை அணிந்த
மும் விளாவித்துப் பரிசுகள் பெற்றார்கள். மிஸஸ் V.
ஜானம்மாள், ஸ்ரீமதி வஸுமதிராமஸ்வாமி மூவரும் நீதிப
சிறந்த வேஷத்திற்குப் பரிசளித்தார்கள். பரிசுகளை மோகினி,
மாக வாங்கி வழங்கினள்.

ஜூலை மாதம் 3-ந்தேதியன்று நமது சங்கத்தின் வெளியூர் அங்க
தினரும் பெங்களூர் வாஸியும் மைஸூர் ஆகாசவாணியில் பாடி ப்ரஸித்த
பெற்றவருமான ஸ்ரீமதி வேங்கடம்மாள் உயர்ந்த வித்வத்லக்ஷணத்துடன்
பாடினர். 10 வயது பாலனை சந்திரசேகரன் என்னும் அந்தச்சிறுவ
அபூர்வமாக பிடில் வாசித்து சபையோரைப் பரவசமுறவும் ஆ
கண்ணீர் பெருகவும் செய்தான். மிருதங்கவித்வான் M. O. பார்த்தஸ
யின் ம்ருதங்கம் அபாரமான மேன்மையுடன் ப்ரகாசித்தது. இ
க்ச்சேரியைக் கேட்டவர்கள் பூரித்துப்பேசினர்கள்.

ஜூலை மாதம் 7-ந்தேதி ஏழைச் சிறுவர்களுக்கு தர்மகைங்கர்யம
உபநயனம் வானமாமலைமடத்தில் செய்துவைத்த கமிட்டியாரிடம் ஸேவ
சங்கத்தின் அங்கத்தினர்களிடமும் இதரர்களிடமும்வசூல்செய்த தொகை
122-3-0 சங்கம் கொடுத்தது.

ஜூலை மாதம் 14ந்தேதியன்று ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் சடகோபாசாரி
ஸ்வாமி பரமபக்தனும் வீரனும்ஆசார்யனுமான ஆஞ்சநேயரைப்ப
ஹனுமத் ப்ரபாவம். வெகு அத்புதமாக உபன்யாஸம் செய்தார்.

ஆடி வெள்ளிக்கிழமை ஸ்ரீமகாலக்ஷ்மியின் மஹோத்ஸவம் ஜ
15-ம் தேதி ஆரம்பித்தது. அன்று ஸ்ரீமதி R.ஜானகியம்மாள் பக்கவா
களுடன் அருமையாகப் பாடினர். அன்றைய உத்ஸவ கைங்கர்ய
J. P. ருக்மணியம்மாள் நடத்திவைத்தார்.

ஜூலை 22-ம் தேதியன்று பாலிகா கழகத்தின் சிறுமிகளால்
அத்புதமான சதம்ப கேளிக்கைகள் நடந்தன. அதில் முக்யமாக ஸ்ரீ
நீலா பாலஸுப்ரமண்யம் அவர்கள் வெகு உத்ஸாகத்துடன் பலவித
காட்சிகளை பாலிகா கழகத்துச் சிறுமிகளுக்குத் தயார் செய்த
மது குறிப்பிடத்தக்கது. குழந்தைகள் மிகமிக அழகாக ஆடியும்
யும் சபையை மகிழ்வித்தார்கள். பாலிகா கழகத்துச் சிறுமிகள் ஸ்ரீ
பத்மினி ஸ்ரீனிவாஸன் எழுதிய ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம் என்கிற கதை
ஹாஸ்யச் சித்திரமாக நடித்தார்கள். வை. மு. கோ. எழுதிய பூட்
கடி என்கிற ஹாஸ்ய நாடகத்தையும் பாலிகா கழகத்துச் சிறுமிக
ளுக நடித்தார்கள். ஸ்ரீமதி. N. ராஜியும் N. சக்ரவர்த்தியும் மகாத்ம
சரித்திரப் பாடலை இந்தியில் அத்புதமாகப் பாடினர்கள். ஸ்ரீமதி
வீணைவாசித்துப் பாடினர். சதம்ப நிகழ்ச்சி முற்றிலும் வெகு
நடந்தது. ஒலிபெருக்கியும் ஒளிபெருக்கியும் M. O. ஜானகியம்மா
உபயமாகச் செய்துகொடுத்துச் சிறப்பித்தார்கள். இன்றைய உத்ஸ
கைங்கர்யத்தை ஸ்ரீமதி R. கண்ணம்மாள் அவர்கள் நடத்தினர்கள்.

ஜூலை மாதம் 29 தேதியன்று ஸ்ரீமதி. V. நீலாம்பாள் பக்கவாத்யத்
துடன் பாடினர். இன்றைய உபயத்தை ஸ்ரீமதி R. A. ஜானகியம்மாள்
நடத்தினர்கள்.

நமது சங்கத்தின் உபதலைவியான ஸ்ரீமதி வேதம்மாள்
வனைந்த பல்களாவை ஷை நிகழ்ச்சிகளுக்கு உதவியதற்கு காரியதரி
சிந்தனமளித்தார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
SEP 1949

ஜகன்மோகினி

[illegible] வெய்தியக் கல்லூம்
பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
—திருவள்ளுவர்

[illegible] ஜகன்மோகினி [illegible]
[illegible] கையைக் காக்க
ஜகன்மோகினி!
மனத்தைச் சார்ந்து.
— வீராகவகவி

ol. 26. விரோதி ஸு, சுதந்தர சகாப்தம் September
o. 9. ஆவணி மீ 26-ம் திங்கள். 1949.

# சதுர் ஜயந்தி

ஸ்வதந்தர ஜயந்தி ★ ★ ஸ்ரீக்ருஷ்ண ஜயந்தி
ணேச ஜயந்தி ★ ★ மோகினிஜயந்தி

## ஒரே குதூகலம்!

(வை. மு. ஸ்ரீ.)

●

இரண்டு வாரங்களுக்குள் நான்கு ஜயந்தி விழாக்களும், அதி ஒரு தினத்திலேயே இரண்டு ஜயந்தி கொண்டாட்டங்களும் கழ்ந்தபோது ஏற்பட்ட மனதின் குதூகலமும் ஆத்மானந்தமும் ழுத்தால் வர்ணிக்கக்கூடியவையா? அனுபவ விஷயமான ஆனந்த ரத்தை ஓரளவே பேனாமுனையில் காட்டமுடியும்.

ஜயந்திகள் நான்காயினும், ஒவ்வொன்றிலும் தோன்றிய அடிப் ட சிந்தனை ஒன்றே! ஜகத்காரணனான ஸ்ரீ பகவானின் நினைவே ன்கு விழாக்களின்போதும் முதன்முதலில் தோன்றியது. அவ ன்றி ஓரணுவும் அசையாது என்பதை உணர்ந்த ஆஸ்திகர் நக்கு இது இயற்கையே!

சென்ற 15உ நாடெங்கும் ஸ்வதந்தர ஜயந்தியைக் கொண் டினோம். சுதந்தரத்திற்குப் பிரத்யக்ஷ காரணமாயிருந்த மனித ஷ்டரான மகாத்மாஜியை நினைத்து வணங்கினோம்; அவருக்கு தேஜஸ்ஸை அளித்த தேவதேவனை அடிபணிந்தோம்.

ஸ்ரீமத் பகவத்கீதையில் பகவானே விளக்கியிருக்கிறார்: "தேஜஸ் உள்ளவர்களுக்கு நான் தேஜஸ்; பலமுள்ளவர்களுக்கு நான் காமராகமற்ற பலம், அதாவது தர்மத்துக்கு விரோதமில்லாத ஆசையாயு மிருக்கிறேன்."

இதன்படியே மஹாத்மாஜியின் நிகரற்ற தேஜஸ்ஸும், தர்ம ராக்ரமும், ஆண்மையும், தபமும் யாவும் ஸ்ரீ கீதாசார்யனின் நள் அம்சமே என்பதை உணரும்போது நமது சிந்தனை சுதந்த தையோ சுதந்தரச் சிற்பியையோ நினைக்கும்போது ஆதிமூலத் தயே நினைப்பது பொருத்தமே! சூர்ய சந்திரர்களுக்கு ஒளியை

யும் ஜலத்திற்கு ருசியையும் அளிக்கும் பகவான்தான் நம் பாரத நாட்டிற்கும் சுதந்திரத்தை—வாழ்வில் ஒளியையும் ரஸத்தையும்—அளித்துள்ளான்.

சென்ற 18உ அகில பாரதீயப் பெருவிழாவாக ஸ்ரீஜயந்தியைக் கொண்டாடினோம். கீழுள்ளோர் உயரும்பொருட்டு பகவான் மேலிருந்து இழிந்து வந்த நீர்மையையும், மனுஷ்யரூபத்திலும் தனது பரத்வத்தை வெளியிட்ட பெருமையையும் ஆழ்வார்களும் நவயுகக் கவிகளும் பாடியதை அவரவர் தெரிந்த அளவில் அனுஸந்தித்தோம். தனது அவதார ரஹஸ்யத்தைப்பற்றி ஸ்ரீ பகவானே கீதையில் தெளிவாக்கியுள்ள விசேஷ அம்சங்களைப் பாராயணம் செய்து தன்யரானோம்.

"அர்ஜுன! எனக்கும் பல ஜன்மங்கள் கழிந்தன, உனக்கும் அப்படியே. ஆனால், அவை யாவும் எனக்குத் தெரியும்; உனக்குத் தெரியாது...நான் என் இச்சையினால் அவ்வப்போது அவதரிக்கிறேன்; அவ்வாறு அவதரிக்கும்போது ஸர்வேச்வரத்வம் என்கிற என்னுடைய ஸ்வபாவத்தை விடாமலேயே, என் ஸங்கல்பத்தால் என் ஸ்வரூபத்தை தேவாதிரூபமாகச் செய்துகொள்கிறேன். நான் அவதரிப்பதற்கு ஒரு காலநியமமில்லை; அதர்மத்துக்குக் கிளர்ச்சியுண்டாகும்போதெல்லாம், தர்மத்தை ஸ்தாபிக்கவும், துஷ்கர்மாக்களை நாசம் செய்யவும், ஸாதுக்களை ரக்ஷிக்கவும் நான் அவதரிக்கிறேன். இவ்விதமாக என் திவ்யமான ஜன்மத்தையும் அதன் பிரயோஜனத்தையும் எவன் உள்ளபடி அறிகிறானோ அவன், அப்பொழுதுண்டான தேகத்தை விட்டவுடன் மறுபடியும் ஜன்மமெடுக்காமல் என்னையே அடைகிறான்."

பகவான் இப்படி விளக்கியிருந்தும் புத்திமான்களுக்குள் சிறந்தவர்களே அவனுடைய ஜன்ம ப்ரகாரத்தை அறிகிறார்கள். காம-க்ரோத-பயங்களை யொழித்து, அவனை ஆச்ரயித்து அவனே கதி யென்றிருந்து, அவதார ரஹஸ்யத்தை அறிவதென்கிற பெரும் தவத்தால் பரிசுத்தர்களாகி, அவனது ஸ்வபாவத்தை, (அவன் மயமாய்க்கொண்டு) ஸாயுஜ்யத்தை அடைவதையே வேதமும் சொல்லுகிறது. இத்தகைய உன்னத ஞானத்தை நம்போல்வார்க்கும் அருளும்படி ப்ரார்த்திப்பதே ஸ்ரீஜயந்தி சிந்தனை.

சென்ற 27உ இமயம் முதல் குமரிவரையிலும், இந்நாட்டிற்கு வெளியிலும் கணேசஜயந்தி கொண்டாடப்பட்டது. ஸ்ரீ விநாயகர், 'கப்பலேறிய' பெருமானாக தூரக் கிழக்காசியாவிலும் பல மதஸ்தர்களால் வணங்கப்படுபவராக விளங்குகிறார். நம்நாட்டிலோ கோயிலில்லா ஊரில்லை: பிள்ளையாரில்லாக் கோயிலில்லை! விஷ்ணு ஆலயங்களிலும் கணபதிக்குப் பிரதான இடமுண்டு. அனேகமாக, த்வஜஸ்தம்பத்திற்கு அருகில் இருந்துகொண்டு, கொடியேற்றி நடத்தப்படும் உத்ஸவங்கள் நிர்விக்னமாக நடைபெறும்படிப் பார்த்துவரும் விஷ்வக்ஸேனர் (ஸேனை முதலியார்) அம்சமாக விநாயகர் விளங்குகிறார். எல்லா வஸ்துக்களிலும் எல்லா நிலைகளிலும் அந்தராத்மாவாயுள்ள ஸ்ரீ பகவானோடு கூடியேயிருப்பதால், விநாயகரை வழிபடுவதும் ஜகத்காரணனான ஸர்வேச்வரனை வழிபடுவதேயாகும்.

183153

கீதையில் ஸ்ரீ பகவான் இதைப் பலவிடங்களில் விளக்கியிருக்கிறார்: "ஸகலபூதங்களுக்கும் உத்பத்திக்காரணம் நான்; அந்தராத்மாவாகிய என்னை யொழிய ஒன்றுமிலும் தரித்திருப்பது கிடையாது. சோபையும் பலமும் உள்ள எந்த ஸத்துவமும் என்னுடைய தேஜஸ்ஸினுலுண்டாகி எனது ஆளுகைக்கு உட்பட்டதே...என்னைவிட்டு, இதர தேவதைகளை ஆராதிப்பவர்களுக்கும் அந்தந்த தேவதை மூலமாகவே அவர்கள் கோரும்பலனை நான் அளிக்கிறேன். என்னை உள்ளபடி அறிந்து அர்ச்சிக்காமல் இதர தேவர்களை அர்ச்சிப்பவர்களுக்கு நான் என்ன செய்கிறேனெனில், முதலில், அவனவனுக்கு அவ்வவ்விதமான சிரத்தையைத் திடப்படுத்துகிறேன்; இரண்டாவதாக, அவரவர் கோரிக்கையையும் நானே நிறைவேற்றுகிறேன். ஏனெனில், இதர தேவர்களெல்லாம் எனக்குச் சரீரமே—என் சரீரத்தைத்தானே அவர்கள் அர்ச்சிக்கிறார்கள்! இதை அவர்கள் அறியாமலே செய்தாலும் உள்ளபடியே அது என் ஆராதனம் தானே?....எல்லாம் என் ஆளுகைக்குட்பட்டது: எல்லாவற்றுள்ளும் நானே ஆத்மா.... நான்முகனும், சங்கரனும், கந்தனும், பிரணவமும்,....எல்லாம் நானே."

ஆக, விநாயகரையே ப்ரணவஸ்வரூபியாயும் பரம்பொருளாயும் வழிபடுவதானது உண்மையில் ஸ்ரீ பகவானையே அர்ச்சிப்பதாகும். இவ்விடத்தில் ஒரு லௌகிக அரசியல் த்ருஷ்டாந்தத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்: சாஸ்திர ரீதியாக ஸ்ரீ பகவான் இருக்கும் ஸ்தானத்தில் சட்ட பூர்வமாக ராஜ்யாதிபதி இருக்கிறார். பகவானுடைய ஆளுகைக்குட்பட்டு, அவரிடமிருந்தே தமது ஸ்தானத்தைப்பெற்று, பல தேவதைகளும் பூதகணங்களுமிருப்பதே போல், ராஜ்யாதிபதியின் அதிகாரத்திற்குட்பட்டு, அவரது நியமனத்தாலேயே தமது ஸ்தானத்தைப்பெற்று, ராஜ்ய பாரத்தைப் பல அதிகாரிகள் கவனித்துவருகிறார்களல்லவா? கந்தன் ஸ்தானத்தில் ஸேனாதிபதியும், விநாயகர் ஸ்தானத்தில் பிரதம நீதிபதியும் என்று ஓரளவில் ஒற்றுமை சொல்லலாம். ஒருவன் தனக்கு இடர் நேரிடுமென்று தோன்றும்போதெல்லாம் நீதி இலாகாவின் உதவியையே நாடுகின்றான்; அதேபோல் இடர்களைக் களைந்தெறியும்படி விநாயகரை வேண்டுகிறான். ராஜ்யாதிபதியின் பெயரால் நீதிபதி காப்பாற்றுகிறான்; பகவான் பெயரால் கணபதி காப்பாற்றுகிறார். ஆக, ராஜ்யாதிபதியிடம் ராஜ்யபாரம் முழுதும் அடங்கியிருப்பதே போல், ஸ்ரீ பகவானிடம் விநாயகவைபவமும் அடங்கியிருக்கிறது.

26 வருடங்களுக்கு முன்பு விநாயக சதுர்த்தியன்று மோகினிச் செல்வி அவதரித்தாள். அவரது அருளாலும், அவருள் அந்தர்யாமியான ஸ்ரீ பகவானருளாலும் மோகினி வெற்றிகரமாக தனது லட்சியப் பாதையில் முன்னேறி வருகிறாள். இவ்வருட விநாயக ஜயந்தியன்று, சென்ற வருடத்தைப்போலவே, மோகினியின் அன்பர்களுள் முக்யஸ்தர்கள் கூடி மோகினி ஜயந்தியையும் கணேச ஜயந்தியையும் ஒன்றாய்க் கொண்டாடினார்கள். உள்ளபடி ஸ்ரீ பகவானின் கருணையைப்பாராட்டினார்கள். சதுர்ஜயந்தியைக் குறிப்பிட்டு சதுர்முகனைப்படைத்த நாரணனைப் போற்றினார்கள்.

மோகினிக்கும் மோகினி அன்பர்களுக்கும், கலைக்கும் கலாபிமானிகளுக்கும் வாழ்த்துக் கூறினார்கள்.

இதுவரை மூன்று ஜயந்திகள் விஷயமாயும் கீதையைக் குறிப்பிட்டதேபோல், நான்காவது ஜயந்தி விஷயமாயும் கீதார்த்தத்தை வெளியிட்டு இக்கட்டுரையை முடிப்போம்: "நம்மை அடையக் கோரி எவர்கள் எங்கப் பிரகாரம் தம் இச்சைக்குத் தக்கபடி நம்மை நினைத்து வழிபடுகிறார்களோ, அவர்களுக்கு அவர்களிஷ்டப்படியே நாம் தர்சனம் கொடுக்கிறோம். யோகிகளுடைய வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத என் ஸ்வபாவமெல்லாவற்றையும் கண் முதலிய இந்திரியங்களால் அநுபவிக்கும்படி நான் அவர்களை அடைகிறேன். நம்மை ஆச்ரயிக்க வேண்டுமென்கிற அபேக்ஷையுள்ளவர்களை நாம் கேவலம் தேவ மநுஷ்யாதி ரூபமாய் மாத்திரம் அவதரித்துப் பரிபாலிக்கிறோமில்லை."...."பெண்களுள் நான் கீர்த்தியாயும் லக்ஷ்மியாயும் வாக்காகவும், ஸ்ம்ருதியாகவும், மேதையாகவும், தைரியமாகவும், க்ஷமையாகவும் இருக்கிறேன்"..."புலன்களுக்குள் மனம் ஆகிறேன்; பூதங்களுக்கு அறிவு ஆகிறேன்"

இதன்படியே, நாம் ஆச்ரயித்தபோதெல்லாம் மோகினியின் பேனாமுனையிலும் ஓவியச் சோலையிலும் ப்ரத்யக்ஷமாகி அவளது பக்கங்களில் துள்ளிவிளையாடி நம்மையும் உலகையும் வாழ்வித்தருளுகிறான் ஸ்ரீ கீதாசார்யன். அன்று ஜகன்மோகினியாய்த் தேவர்க்கு அமுதமளித்தான்: இன்று ஜகன்மோகினியாய்த் தமிழர்க்குக் கலையமுதமளிக்கிறான், அறிவை வளர்க்கிறான்.

கதை மூலமாயும் கட்டுரைமூலமாயும் ஓவிய மூலமாயும் எல்லா மார்க்கங்களாலும் அவனடியையே காட்டும் கைங்கர்ய குதூகலத்தில் ஆழ்ந்திருக்கும் நம் மோகினியைக் கண்டு அந்த மோகனன் பூரித்து ஆத்ம த்ருப்தியுடன் ஆசீர்வதிக்கிறான், மேதையையும் கீர்த்தியையும் அளிக்கிறான்—என்ற நம்பிக்கையில்தான் வாழ்க்கை வண்டியை ஓட்டுகிறோம்.

நல்ல சிந்தனையோ, நல்ல சக்தியோ எதுவும் அவன் கொடுக்க, நாம் பெறுபவர்களாயிருக்கிறோம். மோகினிக்கு வழிகாட்டுபவனும் துணை நிற்பவனும் வெற்றி அளிப்பவனும் அவனே: மனிதர் சூட்டும் புகழ்மாலையும் அவனையே சார்ந்தது: அவன் தன் காரியத்தை மோகினிமூலம் நிறைவேற்றிக்கொள்கிறான்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

> மோகினி ஜயந்தியையும் இதர ஜயந்திகளையும் முன்னிட்டு இவ்விதழை ஒரு விசேஷமலராக வெளியிடவேண்டுமென்ற எண்ணத்துடன் வேலையைத்தொடங்கியும், எதிர்பாராத பல அசௌகர்யங்களால் அவ்வாறு நிறைவேற்ற முடியாதுபோயிற்று. வழக்கமான அம்சங்களுடன் விசேஷ ஜயந்தி—கட்டுரைகளைமட்டும் சேர்த்து, மேலட்டையில் சதுர்—ஜயந்தி ஓவியத்துடன் வெளியிட்டிருக்கிறோம். இந்த மாதமே மலரை எதிர்பார்த்த அன்பர்கள் தயவுசெய்து மன்னிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

பி. ஸ்ரீ.

# கண்ணனையும் காந்தியையும் நினைப்போம்

★

சுதந்திரஜயந்தியும் ஸ்ரீஜயந்தியும் எவ்வளவு நெருக்கமாக வந்து போயின! கண்ணன் பிறந்தநாளில் இந்தியா—நேப்பாளம், காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிவரை— கண்ணனை நினைத்துப் பார்த்தது. சுதந்திரம் பிறந்தநாளில் காந்தியை முக்கியமாக நினைத்துப்பார்த்தது. உலகமெல்லாம் உலகசிரேஷ்டரை நினைத்துப் பார்த்திருக்கவேண்டும்.

கண்ணன் சிறையிலே பிறந்தான். காந்தி சிறையிலே தவங்கிடந்தார். தன் தாய் தந்தையர் சுதந்திரம் பெறவும், கம்ஸன்தந்தையும் விடுதலை பெறவும், கம்ஸனும் கதிபெறவும், உலகம் அசுரசக்திகளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறவும், கண்ணன் தோன்றினான். காந்தியடிகளின் தோற்றமும் சிறைவாசங்களும் இந்தியாவின் விடுதலைக்கும், பிரிட்டனின் நன்மைக்கும், இந்தியா—பிரிட்டனின் நல்லுறவுக்குமாகத் தானே?—ஏன் உலக நன்மைக்குத்தானே! காந்தி-ஜோதியின் மறைவும் ஸ்ரீ கிருஷ்ண ஜோதியின் மறைவை ஒருவாறு நினைப்பூட்டுகிறதல்லவா?

## நிறைந்த ஜோதியும் மறைந்தஜோதியும்

'அருள்கொண்டாடும் அடியவர்இன்புற'—'மண் உய்ய மண்ணுலகில் மனிசர் உய்ய'— அவதரித்தருளிய அந்த ஸ்ரீ ஜயந்தி வைபவத்தைப் பெரியாழ்வாரும் பாடியிருக்கிறார்; தேசபக்தகவி பாரதியாரும் பாடியிருக்கிறார். 'தந்தை காலில் பெருவிலங்கு தாளவிழ', 'தாயைக் குடல் விளக்கம் செய்ய', 'ஆயர்பாடிக்கு அணிவிளக்காய்', 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்திமகனாய் ஒளித்து வளர்'ந்தான் என்றெல்லாம் பாடி ஆழ்வார்கள் தங்கள் சித்தம்உருகிய பக்திவெள்ளத்திலே குழந்தைக் கண்ணனைப் பாலாழி 'கால் அலைப்ப'க் கண்வளரும் பரமனாகவே,—உலகமெங்கும் நிறைந்தஜோதியாகவே காட்டிவிடுகிறார்கள். பாரதியாரும்,

தேவர் தலைவன்
புவிமிசைத் தோன்றினன்

என்றும்,

பாரினர் கண்முன்பு
வானத்தி லேநின்று
கண்ணன் பிறந்தான்

என்றும் இன்றைய உலகத்திற்கும் கண்முன்பு கண்ணனைக் காட்ட முயன்றிருக்கிறார். மறைந்தஜோதி மறந்தஜோதியாகிவிடாமல் நிலைத்தஜோதியாகக்காட்டுமாறு காந்தியடிகளின் திவ்ய சரித்திரத்தையும் பாடும் நாள் எந்நாளோ? இப்படிப் பாடப்போகும் பக்த மணிதான் யாரோ?

## வாழ்க்கையே காந்தியம்

பாரதியார் காந்தியடிகளையும் பாடியிருக்கிறார். இடிக்குக் குடை பிடித்தவராகப் பாடியிருக்கிறார். கோவர்த்தனக் குன்றைக் குடையாகப் பிடித்து இடி மழைகளிலிருந்து பசுக்களையும் பசு பாலர்களையும் காப்பாற்றினானல்லவா கோபாலன்? அத்தகைய மகாகைங்கரியமொன்றை இந்தியாவுக்காகவும் உலகத்திற்காகவும் காந்தியடிகளும் அத்தகைய அற்

புத சக்திகொண்டு நிறைவேற்றினர் என்பது பாரதியாரின் குறிப்பு நமது ஆஸ்தானகவி, நாமக்கல் ராமலிங்கம்பிள்ளையும் 'காந்தியம்' என்ற அற்புத சக்தியைப் பாடியிருக்கிறார். காந்தியடிகளின் வாழ்க்கையை வேறு சிலரும் பாடியிருக்கிறார்கள் எனினும் கண்ணனுடைய லீலைகளை ஆழ்வார்கள் பாடியிருப்பதுபோல்—அத்தகைய தெய்வ வாழ்க்கையாக அல்ல, ஆனால் அவ்வளவு பக்தியுடன், காந்தியடிகளின் வாழ்க்கையை 'வாழ்க்கையின் பரிபூர்ணமாகக் காட்டுமாறு பாடுவது' எந்நாளோ? பாடுவோர் யாரோ?—என்று என் உள்ளம் தவிக்கிறது. தவம்கிடந்து எந்த கவியுள்ளம் தமிழ் செய்யுமோ காந்தியத்தை, வேதம் தமிழ்செய்த கீதம் போலே!

'காந்தியம்' என்றால், காந்தியடிகளின் வாழ்க்கை. இதுவும் அசுரசக்திகளோடு இடைவிடாத போராட்டம்தானே, கண்ணன் வாழ்க்கைபோல்? ஆம், லட்சியங்களை நோக்கி இடைவிடாத போராட்டம்தான் காந்தியடிகளின் வாழ்க்கையென்பது.

சத்தியமும் அஹிம்ஸையும் அரசியலில் செல்லுமா?—என்று சந்தேகப்பட்டார்கள் ராஜ தந்திரிகள். சத்தியமும் அஹிம்ஸையும் இந்த உலகவாழ்க்கையில்தான் பலிக்குமா?—என்று சந்தேகப்பட்டார்கள் லௌகிக புத்திசாலிகள். மந்திரத்தில் மாங்காய், அதிலும் அரசியல்-மாங்காய், விழுமா?—என்று சிரித்தார்கள். அந்த நிலையில் அந்தச் சத்தியத்தையும் அஹிம்ஸையையும் ஆயுதமாகக் கொண்டே அரசியல்-போர்க்களத்தில்தேரோட்டினர்காந்தியடிகள். கீதாசாஸ்திரத்தில்கண்ணன்—நிராயுதபாணியான பார்த்தஸாரதி—காட்டிய வழிதான் ஸாராம்சத்தில் காந்தியடிகள் அரசியலில் காட்டிய வழியும். அரசியல்-மாங்காய் விழுந்துவிட்டது; வெம்பி உதிர்ந்து விடவில்லை; கனிந்து விழுந்தது; வாய்க்கு நேராக வந்துவிழுந்துவிட்டது! காந்தியம் தந்த வெற்றி—கைபிலே கொணர்ந்துதந்த வெற்றி—வாயிலே கொண்டுவந்து ஊட்டிய வெற்றி! காந்தியத்தைக் காந்திபோல் நாமெல்லாம் வாழ்ந்திருந்தால்?...

## இல்லையே!

நாம் மாங்காயையோ மாம்பழத்தையோ பறித்துக்கொள்ளவில்லை. மகாத்மாவின் பகீரத முயற்சிகளும், சர்வதேசச் சிக்கல்களும் மாங்காயைக் கொம்பிலே கனியச்செய்து வாயை நோக்கி விழச்செய்துவிட்டன. சுருங்கச் சொன்னால், சுதந்திரம் நம்மை அடைந்துவிட்டது என்பதுதான் உண்மை; நாம் சுதந்திரத்தை அடைந்துவிட்டோம் என்பது உபசாரம்.

போகட்டும்; அதிர்ஷ்டம்தான். ஆனால் சுதந்திரத்தைக் காந்தியடிகள் வாங்கிக்கொடுத்துவிட்டார் என்றுதான் சொல்லமுடியுமா? அவரே இப்படி வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்ததில்லையே! தகுதிப்படுத்திக்கொள்ளவே வழிகாட்டினர். பிச்சைபோல் கொடுக்கப் பெறுவது சுதந்திரமன்று என்பதைக் காந்தியடிகளைப்போல் அறிந்தவர் யார்? அடுத்துமுயன்று எடுத்துக்கொள்வது சுதந்திரம் என்றுதான் நம்பினர். கடவுளும் சுயராஜ்யப் பிச்சை கொடுக்கமுடியாது என்பதுதான் காந்தியடிகளின் நம்பிக்கை.

## தியாகத்தின் தெய்வத் தன்மை

எனினும், காந்தியடிகளின் கால் நூற்றாண்டுப்பணி, சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குமேலாக நமக்கிடையே வேரூன்றியிருந்த ஆதிக்க மகாவிருட்சத்தையும் சுமார் மூன்று நூற்றாண்டுகளாக ஊன்றியிருந்த அடிமைப் புத்தியையும் ஒருங்கே அசைத்துவிட்டது. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட உலகப் பெருஞ்

சிக்கல்கள் அன்னிய ஆதிக்கத்தின் சல்லிவேரையும் அசைக்க ஆரம்பித்து விட்டன. ஆகவே நமது தியாகம் சிறிதாக இருந்தும் கிடைத்த சுதந்திரம் எவ்வளவு பெரிது!

ஆழ்ந்த புனிதமான தியாகம் சிறிதாக இருந்தாலும் சக்திவாய்ந்தது தான். இப்படி இந்தியாவின் தியாகத்தைப் புனிதப்படுத்தியதும் புனித மூர்த்தியான காந்தியடிகளே—இவர் தனிப்பெருந் தியாகமே. இவருடைய ஆத்ம சக்தியைப் பண் பாடிப் புகழவேண்டியதுதான். கண்ணனைப் போன்ற அவதாரமூர்த்தியாகக் காந்தியடிகளை உயர்த்திப்பேசுவதிலும் தவறில்லை. ஏன்,

> நானெனும் ஆணவம் தள்ளலும்,— இந்த
> ஞாலத்தைத் தான்எனக் கொள்ளலும்—பர
> மோன நிலையில் நடத்தலும்—ஒரு
> மூவகைக் காலங் கடத்தலும்—நடு
> வான கருமங்கள் செய்தலும்—உயிர்
> யாவிற்கும் நல்லருள் பெய்தலும்,—பிறர்
> ஊனைச் சிதைத்திடும் போதிலும்,—தனது
> உள்ளம் அருளில் நெகுதலும்—

என்றெல்லாம் கண்ணனுடைய தியாக குணநிசயத்தைப் பாரதியார் பாடியிருப்பது காந்தியடிகளுக்கும் பொருந்துகிறதல்லவா? காந்தியடிகள் ஆயிரம் தவங்களால் பெற்றதைப் பெற்றதாயின் வயிற்றில் பிறந்த அன்று தொடங்கிப் பெற்றிருந்தான் கண்ணன்—அவ்வளவு தானே வித்தியாசம்? ஆகவே 'அருளிச்செயல்-பாகவதம்' போல் காந்தி பாகவதமும் தோன்றலாம்—நல்லதுதான்.

ஆனால், அவதாரபுருஷராக இவரை மேலே தூக்கிவைத்துவிட்டு 'நான் கீழேதான் இருப்பேன்!' என்று ஆணவம் பேசலாமா? இவருடைய அமரவாக்கும் ஒரு நவீன 'திவ்யப் பிரபந்தம்' ஆகத் தகுதி வாய்ந்தவை என்றெல்லாம் போற்றுவது எளிது, பின்பற்றுவது கடினம்—'ஐயா, மெத்தக் கடினம்!'

பகவந்நாமஸ்மரணை செய்வதுபோல் காந்தி நாமத்தையும் திரும்பத் திரும்ப உச்சரித்துப்பார்த்தால் போதுமா? கண்ணன் கோயிலில் தூப தீபம் காட்டுவதுபோல் காந்தியடிகளின் திருவுருவப் படத்திற்கும் தூப தீபம் காட்டினால் போதுமா? பூமாலைகள் போதுமா? இன்றைய ஆஸ்தானகவியும், இராமராஜ்ய ஆஸ்தானகவியும் பராசக்தியின் ஆஸ்தான கவியும் சூட்டிய பூமாலைகளே போதுமா? நமது அரசியல் வாழ்க்கையிலும் அன்றாட வாழ்க்கையிலும் காந்தியடிகளைக் காணவேண்டாமா? இதற்காகத்தான் காந்தியடிகளின் வாழ்க்கையை மனித வாழ்க்கையின் பூர்ணமாகவே பாடவேண்டும். "நந்தன் சரித்திரம்போல் பாடவேண்டும்; ஆழ்வார்—நாயன்மார் அருளிச் செயல்கள்போல் இந்த உலகின் இருள் நீக்கப் பாடவேண்டும்.

"மோகனகிருஷ்ணன் வெண்ணெய்திருடினன்; மோகனதாஸ் காந்தி உப்பைத்திருடினர்!' என்று பாடினல் போதாது. 'படைதொடேன் என்று சபதம் செய்திருந்தும் ஒருதரம் படைதொட்டான் மோகன கிருஷ்ணன்; மோகன காந்தியோ ஒருதடவையும் படைதொடாது பாரதப்போர் வென்றார்' என்று, தெய்வத்திற்கும் மேலே தூக்கிவைத்துப் பாடினலும் போதாது. காந்தியடிகளின் தெய்வவாழ்க்கை மனிதவாழ்க்கையின் தியாக

சிகரம் என்று பாடுவதே இனிமேல் பாடவேண்டிய காந்திபாட்டு; காந்தி பிரபந்தம்,—புதியவியாசர் பாடத்தக்க காந்தி-பாரதம், காந்தி-பாகவதம்.

சுதந்திரம் ஒருவாறு கிடைத்துவிட்டதால் இதை நன்கு பாதுகாத்துப் போஷித்து வளர்த்து உலகம் மதிக்கும் சுபிட்ச இந்தியாவாகவும், உலகம் போற்றும் ஞான இந்தியாவாகவும் நமது தேசத்தைச் செய்துகொள்ள வேண்டிய பொறுப்பு இன்று நமக்கு அதிகமாயிருக்கிறது. இந்தப் பொறுப்பைத் தூண்டும் முறையில் இன்று காந்தியடிகளைப் பாடுவோர் பாடவேண்டும். இன்றைய பாடல்கள் நாளைவரும் காந்தி பாகவதத்திற்கோ, காந்தி இதிகாசத்திற்கோ உரமாகிவிட்டாலும் போதும்.

1933-ம் வருஷம் ஆகஸ்டு 23-ம்தேதி நிபந்தனையின்றி மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலைபெற்றபின் அதே ஆண்டில் நவம்பர் 7-ம் தேதிமுதல் ஹரிஜனமுன்னேற்றத்தை முன்னிட்டுத் தேசமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டார். அப்போது ஆந்திர கேரளப் பிரதேசங்களுக்கும் வந்தார். திருவாங்கூரிலிருந்து நாகர்கோயில் வழியாகப் போய்க் கன்னியாகுமரியில் நீராடி மாலைவேளையில் அந்திக் கடற்கரையில் உலாவிவிட்டுத் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, மதுரை, செட்டிநாடு, திருப்பத்தூர், நீலகிரி, கோயமுத்தூர் முதலான தமிழகவூர்கள் பலவற்றிலும் ஹரிஜனநிதிக்குப் பணம் சேர்த்தார். தமது ஞானமொழிகளைப் பொழிந்து தமிழர்களின் உள்ளத்திற்கு ஆறுதல் அளித்தார். அப்போது தமக்கு அணிந்த பூமாலைகளையும் வரவேற்புப் பத்திரங்களையும் ஏலம் போட்டுக் காசக்கித் தமது கைங்கரிய நிதிக்கு உபயோகித்துக் கொண்டார் என்பது பலருக்கும் ஞாபகம் இருக்கலாம். இத்தகைய மகாத்மாவின் திருவுருவத்திற்குப் பூமாலைகள் அணிந்து வழிபாடு செய்வதும் போதாது; அவதாரமூர்த்தியாக்கிப் பாமாலைகள் சூட்டிப் பரவசமாவதும்போதாது. வாழ்க்கையின் பரிபூர்ணமே—வாழ்க்கைக்கலையே—காந்தியடிகளின் உண்மையான வாழ்க்கை என்பதை இனிது விளக்கும் பிரபந்தமாக இருக்கவேண்டும் காந்தி - பிரபந்தம்—காந்தி - பாகவதம்—காந்தி - இதிகாசம்.

---

## மோகினி வாழ்க!

ஸ்ரீ—கண—மோகினி—ஸ்வதந்த்ர ஜயந்திகள் சேர்ந்துவருவது ஒரு சிறப்பாகும். இந்த ஜயந்திநாளில் நாம் புதிய பிறவியும் புதிய இன்பமும் அடைய இறைவனை வணங்குவோம்.

### புதிய வாழ்வு

கருணை யான கடவுள்—நம்மைக்
காத்து நன்மை தருமே—
அருணப் புன்னகையால்—நம்
அன்பு பொங்கி வருமே.
கனவு பூத்த கவிபோல்—தெய்வக்
காதல் பூத்த சுகம்போல்
மனது பூத்த வாழ்க்கை—கலை
மணங் கமழ்வ தாமே
நள்ளிரவின் உள்ளம்—ஒரு
நாதமாகப் பெருகிப்

புள்ளிசையில் வளரும்—போது
புதிய வாழ்வு கிளரும்.
நாமேநம்மை யறிந்து—நாமே
ஞாலமென்றறிந்தால்,
தீமையில்லை உலகில்—செய்யும்
செய்கை யெல்லாந் தவமே.
மதிமயக்க மின்றி—உயிர்
மகிழ, உலகு மகிழ
புதிய வாழ்வு வாழ்வோம்—பரி
பூரணன் அருளால்.

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

# கணேச ஜயந்தியும் மோகினி ஜயந்தியும்

(ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்)

மிகப் புனிதமான இந்த விநாயகசதுர்த்தி தினத்தில் எல்லோரும் இகபரசுகங்களை எல்லையின்றி அளிக்கும் விநாயகப் பெருமானை நினைத்து அடிபணிந்து வணங்குவது கடமையாகும். இடையூறுகளை வென்று சுகவாழ்வாக வாழும்படி அருள்செய்வது அவர் கொடுக்கும் வரனுகும். முப்புரங்கள் எரித்த பரமசிவமே முதலில் பிள்ளையாரை பூஜித்துத் துதிசெய்யாததால் தோல்வி அடைந்ததாகவும் பிறகு அப்படிச்செய்ததால் வெற்றியடைந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. தேவியும் சண்ட முண்டாசுரர்கள் போரில் பிள்ளையாரை வணங்கியதால் அசுரர்களால் உண்டாக்கப்பட்ட விக்கின யந்திரத்தை அவர் அழித்து தேவிக்கு வெற்றி யளித்தார் என்றும் நாம் அறிகின்றோம். இதை லலிதா ஸஹஸ்ரநாமமும் கூறுகின்றது.

கணேசருடைய அருள் இடையூறுகளை நீக்கி உலக இன்பங்களை அளிப்பதற்குமட்டும் அல்ல. அவரே பரம்பொருள். அவருடைய உருவம் பிரணவவடிவேயாகும். கணேச கீதை என்ற மிக அரிய நூலில் அவருடைய முக்கிய உபதேசம் பேரின்பமடைவதற்காக என்று நாம் அறிகின்றோம். அதில் யோகவழியை அறிவித்து கணேசர் கூறுகின்றார்:

"அரசியல் புரிவதோ புரவியானைகளுடன் பெருமையாக வாழ்வதோ யோகமாகாது, இந்திரலோக ஆட்சிகூட யோகமாகாது, பேரின்பமான பரம்பொருளை வெளிக்கண்களை மூடி உட்கண்களால்கண்டு களித்தால்தான் பிறவிப்பயனை அடையமுடியும்; கடவுளை இதயத்தில் தியானித்து எல்லாஉயிர்களையும் சமமாக நினைத்து வாழ்வதே உண்மையான யோகமாகும்."

"அன்பு நிறைந்த மனமுள்ளவர்கள் தம் சினத்தை வென்று பொறிகளை அடக்கி யோகிகள் உலகத்தில் உலகநன்மைக்காகவே வாழ்வார்கள். உடலில் இருந்தாலும் உடலில் பற்றற்றவர்கள். தங்கத்தையும் மண்ணையும் ஒன்றாகவேகருதுந் தன்மைஉள்ளவர்கள். அளவற்ற ஆன்மீக ஐச்வர்யம் உள்ளவர்கள். அத்தகைய பெரியார்களை நீ இப்பொழும் காணக்கூடும்."

'ஜகன்மோகினி' ஜயந்திக்கும் க ணச ஜயந்திக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கணேசனுடைய அருளை அடைந்து, கண்ணனுடைய அருளும் நிறைந்து 'ஜகன்மோகினி.' திருவவதாரம் செய்து கண்களையும் உள்ளங்களையும் களிக்கச்செய்த திருவிழாவை 23—1—1949 அன்று பொதுஜனங்கள் ராஜாஜி மண்டபத்தில் பெருங்கூட்டமாக வந்திருந்து கொண்டாடினர்கள். அன்றைய தினம் தலைமைவகித்து நான் கூறின தலைமை சொற்பொழிவில் "கோதை நாயகியின் கலைச்செல்வமும் அருட்செல்வமும்" என்ற தலையங்கத்தின்கீழ் என்னுடைய உண்மையான உள்ளுணர்ச்சிகளை நான் வெளியிட்டிருக்கின்றேன்.

மிகவும் சிறந்த கவித்திறமையும் கலையுணர்ச்சியும் தெய்வீகம் நிறைந்த ஞானமும் பக்தியும் லோகானுபவமும் கூடிய யோகி சுத்தானந்த பாரதியார் அன்றைய தினத்திற்காக எழுதியனுப்பிய சில வசனங்களையும் செய்யுட்களையும் குறிப்பாகக்கூறலதே இவ்வருஷ ஜயந்தியன்று நான் செய்யும் சிறந்த பணியாகும் என்பது என் எண்ணம்.

"அம்மையாரின் அன்பும், மட்டுமரியாதையும், பெண்மைக் குணமும், தெய்வபக்தியும், தேசபக்தியும், காந்திபக்தியும், எனது கவிகளை வரவேற்கும் வசீகரமும் என் உள்ளத்தை அள்ளின"

"இப்படியே ஜகன்மோகினி என் பேனுவை வசீகரித்தாள். மோகினியில் நான் என் கட்டுரைகளைப் படிப்பதற்கு முன்பே, வை. மு. கோவின் கதையைப் படிப்பேன்".

"நமது தமிழுலகில் அனுபவக்கற்பனை நாவல்கள் சிலரே எழுதி இருக்கிறார்கள். அவருள் நமது வை. மு. கோவுக்குச் சிறந்த முன்னணி இடம் தரவேண்டும். ஊற்றிலிருந்து அருவி பொங்கி ஓடுவதுபோலத்தான் கவிதை.தகவியின் உள்ளக்கனவிலிருந்து பொங்கி ஓடுகிறது. அதேமாதிரியே கதையும் மனத்தில் கனவுப்படலமாக ஓடிவிளையாடுகிறது. வை. மு. கோவின் நாவல்களிலெல்லாம் ஆண் பெண்களின் வக்ர விநோதங்களையும், குடும்பவாழ்க்கையின் சுகதுக்கங்களையும் விதியின் சக்கரவட்டத்தையும். சதிபதிகளின் குலதர்மத்தையும், சனாதன தர்ம அனுஷ்டானங்களையும் காணலாம். வை. மு. கோ. நாவல்கள் அம்மையாரின் இதயத்துடிப்புகளின் படப்பிடிப்பாகவே காண்கின்றன. அதனாலேதான் அவை அப்படி வாசகரை வசீகரிக்கின்றன."

வை. மு. கோ தமிழ் அன்னை பெற்ற மாணிக்கம்; எழுத்தும் சொல்லும் வல்ல கலாரதனம், அனுபவக் கதையரசி.

"இக் கதையரசியின் நிர்வாகத் திறமையோ அபாரம். ஒரு குடும்பம் முழுதும் ஒருமித்து ஜகன்மோகினியை நடத்துகிறது. இது பத்திரிகை யுலகில் ஓர் அற்புதமே! வை.மு.கோவின் குலமோ பாரம்பரையாகப் புலவர் மணிகளை ஈன்ற கற்பகம் போன்றது. குலகலத்தாலேதான் இந்த அம்மையாருக்கு இயற்கையான சொல் திறமையும், கற்பனைத் திறமையும் உண்டாயிருக்கின்றன.

"கண் குளிர வருகிறாள்
கலை குலுங்கும் கற்பகம்
பெண்ணமுத சக்தியைப்
பெருமைசெய்ய வாருங்கள்.

உரிமை கொண்ட நாட்டிலே
உண்மை யின்ப மோங்கவே
பெரிய பெரிய கனவுடன்
பிரிய மாக வருகிறாள்.

சமதை யான ஒற்றுமையும்
சண்டை யற்ற வாழ்க்கையும்
அமைதி யாக நாட்டவே
அமர சக்தி வருகிறாள்."

யோகி சுத்தானந்தபாரதியார் தெய்வீக உணர்ச்சியும் மங்கள மான ஆசிகூறும் ஆற்றலுமுள்ள தீர்க்கதரிசியானபடியினாலே, அவருடைய உணர்ச்சி வெள்ளிவிழாவன்று தங்கவிழாவில் பாய்ந்தது.

எனக்கும் தங்கவிழாவையும் அதுமட்டுமல்ல வைரவிழாவையும் காணவேண்டும் என்ற பேரவா. அந்த ஆசைகள் நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் ஆசிரியை அந்த விழாக்களில் கூடி கலந்து கொண்டு போற்றப்படவேண்டுமென்று ஆசிகூற என்னைப் போன்ற முதுமைப்பருவத்திலுள்ளவர்களுக்கு அதிகாரம் உண்டு. வெள்ளியைவிடத் தங்கத்திற்கு மாசற்ற ஒளி அதிகம், தங்கத்தை விட வைரத்திற்கு கண்ணைப் பறித்து மனத்தை வசீகரிக்கும் சோதி மயமான ஒளி அதிகம்.

கலை என்பது நந்தாவிளக்கு. ஜயதேவகவி கூறுவதுபோல் அது மணிமயமங்கள தீபம். தூயகவியின் மனதில் கற்பனை என்ற மந்தர மலையை மத்தாக்கி மதுரவாணி என்ற வாசுகியைக் கயிறாக்கி நவ ரசங்கள் ஆகிற தேவாசுர்கள் கடைந்து கண்ணனுடைய அருளை அடைந்தால் எழும் அமுதமே கலையாகும். ஜகன்மோகனான கண்ணனுடைய கட்டைவிரலிலிருந்து கங்கை வருவதுபோல் ஜகன்மோகினி என்ற வாங்மயமான கங்கை ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியின் பேனாமுனையிலிருந்து அமோக அமுதப்பிரவாக மாகப் பெருகக் கண்ணனை இறைஞ்சுகின்றேன்.

தெய்வச்சுவை நிறைந்தாய்—தங்கமே தங்கம்
தேசபக்தி சிறந்தாய்—தங்கமே தங்கம்
வையத்தில் அறம் பொருள் இன்பம் வளர
வைத்தமா நிதியானாய்—தங்கமே தங்கம்.

உண்மை பெருமை பெற—தங்கமே தங்கம்
உலகு திருந்திவரத்—தங்கமே தங்கம்
பெண்மை பெருமைபெறத்—தங்கமே தங்கம்
பெருகிச் செழித்திடுவாய்—தங்கமே தங்கம்.

வஸுமதி ராமஸ்வாமி

## மஞ்சள் குங்குமம்

"வாருங்கள் கமலா, கலா, பார்வதி! என்ன இன்று த்ரிதேவிகளும் ஒன்ருக வந்துவிட்டீர்கள். வரும்பொழுதே ஒரே குதூஹலத்துடன் வருகிறீர்கள்! உட்காருங்கள்."

"ஆமாம் மாமி! நாங்கள் உற்சாகமாகத்தான் வந்திருக்கிறோம். வரும்பொழுது கலா பிரசங்கத்திற்கு ஆரம்பித்தாள்; கமலா அவளைப் பரிகசித்துக் கொண்டுவந்தாள்: எல்லோரும் சேர்ந்து சிரித்தோம்."

"போனதடவைதான் கலா நகைப்பைப்பற்றிச் சொன்னளே. இப்பொழுது எதைப்பற்றி பேச்சு?"

"இந்தமாதமே வேலை அதிகம் மாமி! வரலக்ஷ்மி விரதம், ஆவணி அவிட்டம், சுதந்தரதினம், ஸ்ரீஜயந்தி, விநாயகசதுர்த்தி—கேட்பானேன்; மனதிற்கு ஆனந்தம், பணத்திற்குச் செலவு, வாய்க்குஇனிய தின்பண்டம், நல்ல பொழுதுபோக்கு எல்லாத்தைப்பற்றியும் பேச்சு."

"சுதந்திர தினத்தன்று நீ என்ன செய்தாய் கலா? நான் புதுமாதிரி பர்பி செய்தேன். நன்ருக இருந்தது."

"நான் தேசியக்கொடி போட்டு புடவை ஒன்று வாங்கி அன்றைய தினம் உடுத்திக்கொண்டேன்." என்ருள் பார்வதி.

"உண்பதும், உடுப்பதும் மட்டும்தானு சுதந்தரதினம் கொண்டாடும் முறை? தேசியக்கொடிபோட்ட படவையை உடுத்திக்கொண்டேனென்று சொல்லுகிருயே. சுதந்தரமும், தேசியக்கொடியும்கூட சினிமாமோஸ்தரா? இதுஎன்ன அவிவேகம். கொடியை எப்படி உபயோகிப்பது? மரியாதை செலுத்துவது? என்றெல்லாம் அதற்கு சட்டதிட்டங்கள் மற்ற நாடுகளில் வழங்கப்படுகின்றன. கேவலம் நாம் உடுத்திக்கிழித்தெரியும் துணியிலா மூவர்ணக்கொடி?"

"அடாடா! கலா! ஊருக்கு ஒருவழி என்ருல் உனக்கொரு வழி. உன்னுடைய குருட்டுயோசனை தனியாக இருக்கிறது. கொடியை புடைவையின் கரையில்போட்டால் எவ்வளவு அழகாக இருக்கிறது!"

"இருக்கலாம் பார்வதி! ஆனல், எவ்வளவோ வருஷங்கள் போராடி, எவ்வளவோ தியாகங்களைச்செய்து கஷ்டப்பட்டுக் கிடைத்த அரிய பெரிய சுதந்திரத்தை நாம் புனிதமான முறையில் கொண்டாடவேண்டாமா? ஒரு நாட்டின் கொடிக்கு எப்படிப்பட்ட கௌரவம் கொடுக்கப்பட்டிருக்கிறது! வானளாவிக் கம்பீரமாகப்பறக்கும் கொடியைப்பார்த்தால் நமக்கே சிறுமை அகன்று விரிவான மனப்பான்மை ஏற்படுமே. மூவர்ணங்களும் மகத்தான அர்த்தத்தை விளக்குகின்றனவே! நாட்டின் பசுமை குன்ருமல் காப்போம் என்று சொல்லுகிறது பச்சைவர்ணம். பற்றுதல் இல்லாத தியாகவாழ்வுவாழ்வோமென்று (சந்நியாசத்துக்குரிய) சுத்தமான ஆரஞ்சுவர்ணம் சொல்லுகிறது. சுத்தமான மனதுடன் தர்மசக்கரத்தில் சுழலுவோம் என்கிறது வெள்ளைநிறம். அப்படிப்பட்ட புனிதமான

பொருளை நம்முடைய தித்ய உபயோகமான பொருள்களில் சித்தரிப்பது தவறு. தேசியக்கொடி வளை, ரிப்பன், ப்ரூச், கால்சோடு, சீப்பு இவைக ளெல்லாம் அற்பமான பொருள்கள்...இவைகளிலா சாச்வதமான நாட்டின் கௌரவச்சின்னமிருக்கும்? நம் குடும்பங்களில் பெரியவர்களின்பெயரை குழந்தைகளுக்கு வைத்தாலும் அதைச்சொல்லி அழைக்கமாட்டார்கள்; வேறு செல்லப்பெயர் அநேகமாக இருக்கும். ஏன்? குழந்தைகளை நாம் கடிந்துகொள்ளுகிறோம். — பெரியவர்களுடைய பெயரால் அழைத்து கோபிப்பது மரியாதைக்குறைவாக மதிக்கிறோம். கொடியைக்கண்டபடி உபயோகிப்பது கொடிக்கு நாம் அவமரியாதை செய்ததாகும். பாரதியார் "தாயின் மணிக்கொடி பாரீர், அதை தாழ்ந்து வணங்கிட வாரீர்" என்ற எவ்வளவு எளிமையான வாக்யங்களில் என்ன உயர்வான மரியாதையைக் காட்டியிருக்கிறார்!"

"என்னவோ கலா! உனக்குப் பிரசங்கத்திற்கு அகப்பட்டுவிட்டது. முன்காலத்தில் கொடிக்கு இவ்வளவு மரியாதை ஒன்றுமில்லை. தற்காலத்தில் தான் தேசியக்கொடி என்று தடபுடல் செய்கிறீர்கள்."

"நன்றாக சொன்னாயே! எக்காலத்திலும் எந்த சமயத்திலும் அசாத்ய மதிப்பு. கிராமங்களில், ஸ்தலங்களில் கோவில் உற்சவத்திற்கு கொடியேற் றம் செய்வார்கள். அதன்பிறகு உற்சவம் முடியும்வரை ஊரார் யாரும் வெளியூர் செல்லமாட்டார்கள். கட்டுப்பாடுடன் இருப்பார்கள். ஸ்ரீ ராமா யணம் யுத்தகாண்டத்தில் கொடியின் மகத்துவத்தைப்பற்றி வால்மீகியே வர்ணித்திருக்கிறார். சரித்திரத்தில் கொடியின் மதிப்பு அளவிலாதது. சாதா ரணமாக கொஞ்சம் செல்வாக்குடன் வாழ்பவர்களைக்கண்டு "அவர்களுக் கென்ன! கொடிகட்டிப் பறக்கிறது" என்று சொல்லுவார்களே. ஒருநாட் டின் சின்னமான கொடியைப்பற்றிக் கேட்க வேண்டுமா? சுதந்தரதினம் பெரிய பண்டிகை, அதில் உயர்தர லக்ஷியங்கள், பிரதிக்ஞைகள் செய்து கொள்ளவேண்டாமா?

"ஆமாம் கலா! சுதந்தரதினம் ஒரு பண்டிகைதான். பஞ்சாங்கத்தில் கூட சுதந்தரத்திருநாள் என்று போட்டிருக்கிறார்கள். எங்காத்து குழந்தை களுங்கூட "சுதந்தரதினம் நாங்கள் சுயேச்சையாக இருப்போம்; கோபிக்கக் கூடாது, கண்டிக்கக்கூடாது" என்று அமர்க்களம் செய்தார்கள்."

"நன்னடக்கையும், சுயநம்பிக்கையும் உழைப்பும், எல்லாரிடமும் அன்பு காட்டுதலும் இருந்தால்தான் சுதந்தரம் நமக்குக்கிட்டும். உயர்தரகுணங் களுடையவர்களை யாரும் அடிமையாக்குதல் சாத்தியமில்லை. நாம் ஒவ் வொருவரும் பரிபூரணனுக்கு அடிமையேதவிர பரஸ்பர அடிமை இல்லை. நான் சுதந்தரதினத்தன்று இனிமேல் கோபத்தை அடக்குவது என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டேன்."

"கலா பேச்சைக்கேட்காதே. நடவாத வேலைதான் அவன் சொல்வது. காலையிலிருந்து இரவிற்குள் எவ்வளவோ விஷயங்கள் கோபத்தைத் தூண்டுகின்றன. நாம் பூமிதேவியாக இருந்தாலும், இருக்கிறவர்கள் காளி தேவியாக மாற்றிவிடுகிறார்களே! எப்படி கோபிக்காமல் இருக்கமுடியும்? எங்காத்து வெங்கிட்டுவை ஐந்து நிமிஷம் வைத்துக்கொண்டால் போதும், கோபிக்காமல் இருக்கவேமுடியாது"

"வெங்கிட்டுவைச் சொல்லுகிறாயே. எங்கள்பாட்டி தொணதொணப்பு வென்னென்று விழச்சொல்லும்; வேலைக்காரி ஒரு நிர்மூடம்; இவர்களோடு குடும்பம் நடத்தினால் கோபம் வராமலிருக்குமா?"

"அதெல்லாம் சரிதான். கோபித்துக்கொள்ள ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. ஆனாலும், ஒரே நாளில் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு

ஆகஸ்ட் 16-ம் தேதி காலையிலிருந்து சாந்த ஸ்வரூபியாக ஆய்விடமுடியுமா? ஏதோ கொஞ்சக்கொஞ்சமாகக் கோபத்தை வென்றுவரவேணும். அநேக வருஷ அப்யாஸத்தால் அனாவச்யமாக துர்வாஸர்மாதிரி இல்லாமல் பல தடவைக்கு ஒரு தடவை குறைந்தாலே எவ்வளவோ சாதகம்."

"கமலா! நீ கலா சொல்வதைக் கேட்காதே. காலம் கெட்டிருக்கிறது. கோபிக்காமல் மக்குமாதிரி இருந்தால் எல்லாரும் ஏமாற்றிவிடுவார்கள். அப்பாவி என்று வேறு பரிகசிப்பார்கள். ஒன்றுமே நடக்காது." என்றாள் பார்வதி.

"பார்வதி! மக்காய் மாறிவிடணுமென்று நான் சொல்லவில்லை. நயம், பயம் இரண்டும் தேவைதான். இவைகளால் எல்லாவற்றையும் நடத்தவேணும்; கண்டிப்பு அவச்யம்தான். ஆனால், எப்பொழுதும் சிடுமூஞ்சியாகவும், கோபமாகவும் இருந்தால்மட்டும் ஒரு வேலையும் நடக்காது மதிப்பும் இராது. இவ்வளவுக்குமேல் கோபிப்பது ஆத்மஹத்தி?

"என்ன சொன்னாய்? ஆத்மஹத்தியா? நீ பேசுவது உனக்காவது புரிகிறதா?"

"நன்றாகப்புரிகிறது கமலா! ஒவ்வொரு தடவை நாம் வாஸ்தவமாக கோபிக்கும்பொழுது இரண்டுவயதை இழக்கிறோம். நம்முடைய ரத்தம் கொதிப்படைகிறது. மூளையில் உஷ்ணம் ஏறுகிறது. பின்னால் ரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதனால் நாம் நோய்க்கு ஆளாகிறோம். கோபத்தில் தாறுமாறாகப் பேசிவிட்டு பின்னால் பச்சாத்தாபப் படுகிறோம். அதனால் மனத்திற்கு அல்லல். கோபம் பாபம் சண்டாளம்—என்று மகான்கள் கோபத்தைக்கண்டு அஞ்சி நடுங்கினார்கள், தியாகய்யர் 'சாந்தமுலேக, ஸௌக்கியமுலேது' என்று பாடினார். அதனால் கோபம் பிறரை ஒன்றுமே செய்யாது, நம்மைத்தான் அழிக்கும்."

"அப்படியானால் உனக்கு இனிமேல் கோபமே வராது. உன்னை கோபிக்கும்படி நான் செய்துவிடுகிறேன் பார்."

"அப்படியா சொன்னேன்? அன்றாட வாழ்க்கையில் கோபிப்பதும் கண்டிப்பதும் இல்லாமல் நடக்காது. ஆனால், கட்டுக்கடங்காக் கோபம், உடல்நலனை பாதிக்கும்படியான மூர்க்கம், இவைகள்தான் கூடாது. நானும் அப்யாஸித்துதான் கோபத்தை அடக்குவேனென்று சொன்னேனே தவிர இனி கோபமே வராதென்று சொல்லவில்லை."

"மாமி! கலாவின் சாந்தப் பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தால் என் கணவருக்குப் பலகாரம், காப்பி கொடுக்க வரவில்லையென்று கோபம் வந்துவிடும்; போய்வருகிறோம் மாமி!

"இருங்கள்! மஞ்சள் குங்குமம் தருகிறேன்"

---


## இதுவும் ஒரு காந்தி ஸேவையாகும்

திருவல்லிக்கேணி மஹாத்மாஜி ஸேவா சங்கத்தின்
மாணவர் இலவசச் சம்பள நிதிக்கு நன்கொடையளிக்க
யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய

## காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3-8-0. உயரிய கிளேஸ் பதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
ஷை பதிப்பின் லாபம் சங்க இலவசச்சம்பள நிதிக்கே!

## புத்துவியாதி (Cancer)—நமது பிரதம வைரி.

(டாக்டர். V. C. அங்குளி)

புத்துநோய் என்ற புதுநோய் மனித சமுதாயத்தையே பயமுறுத்தி வருவதைப்பற்றி பொதுஜன விழிப்பு இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. மருத்துவ நிபுணர்களிடையேயும் இதைப் பற்றின ஆராய்ச்சிகள் இன்னும் பூர்ணத்வம் அடையவில்லை. இக்கொடிய வியாதியினால் பலியாகும் நம் மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே நமது தேசீய கடமையாகும்.

சாதாரணமாக இந்த நோய் 40-வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் பிடிக்கிறது. விசித்திரமான இந்த நோய் ஒருவித நோவுமில்லாமல், உள்ளே பிடிப்பது தெரியாமல் பிடித்து புத்து வைக்கிறது. வாழ்வில் ஒரு நிம்மதியான அந்தஸ்தை—அதாவது, குடும்பத்தில், தொழிலில், சமுதாயத்தில் ஒரு திட்டத்தை—அடைந்துள்ள தருணத்தில், சுமார் 40 வயதுக்கு மேலாகி, வீட்டுக்கும் நாட்டுக்கும் முக்கியமாக வேண்டியிருக்கும் நிலையில் துரதிர்ஷ்டவசமாக இந்த நோய் சிலரை அனாயாஸமாகப் பிடிக்கிறது.

இதைப்பற்றின சில விவரங்களைக் கவனிப்போம். நம் ரத்தத்திலுள்ள 'ஸெல்' என்னும் அணு அம்சங்கள் தமக்கு இயற்கையாகவுள்ள தன்மைகள் மாறி, அவையே புதிய உருவில் பெருகுகின்றன. ஸாதாரண ஸெல் வளர்ச்சிக்கும் இந்தப் புத்துவைத்தலுக்கும் மிக வித்யாசமுண்டு. புத்துவைத்தல் நமக்குச் சிறிதும் உணர்ச்சியின்றி, அளவில்லாமலும், அனாயாசமாகவும் பல பங்காகிறது: சரீரத்தின் எந்த பாகத்திலும் இது திடீரென ஏற்படலாம். இது தோன்றும்போது சாதாரண ஸெல்லே பெரிதாகி, பெருகி, இதர நரம்புகளையும் சதையையும் தாக்கவாரம்பிக்கிறது.

சாதாரணமாக, ஒருவருக்கு அடிபட்ட இடத்தில், ரணத்தின்மீது ஒருவித வளர்ச்சி ஏற்படுவதைக் காண்கிறோமே, அல்லது, தாயின் கருவினுள் சிசு வளர்ந்துவருவதைக் காண்கிறோமே,—இதுபோன்ற ஸெல் வளர்ச்சிகளில் ஒருவிசேஷ அம்சம் யாதெனில், வளர்ச்சியின் எல்லை அறிந்து, குறிப்பிட்ட அளவு வளர்ந்ததும், அவை மேற்கொண்டு வளராது நின்றுவிடுகின்றன. ஆனால், புத்து நோயால் பிடிக்கப்பட்டு வளர்ச்சிபெறும் ஸெல்களோவெனில் அகாரணமாயும் அளவுக்கு மீறியும் கட்டுக்கடங்காது வளர்ந்து கொண்டே போகின்றன. இவைகளிடையே நரம்போட்டம் இல்லாததனால் வீக்கமாகவும் வெளிக்குப் புலப்படுவதில்லை. பெருவாரியான சந்தர்ப்பங்களில் உள்ளே புத்துவைத்துள்ளதென்பதற்கு ஒருவித அறிகுறியும் தோன்றுவதில்லை. வலியும் ஏற்படுவதில்லை.

இந்த வியாதிக்குச் சிகிச்சை செய்வதில் பல அம்சங்களைக் கவனிக்கவேண்டும். அதில் முக்கியமானது, வியாதி தோன்றியதற்கும் அது கண்டுபிடிக்கப்பட்டதற்கும் இடையே கழிந்துள்ள காலம் எவ்வளவு என்பதே. அனேகமாக நாள் கழித்தே இது கண்டுபிடிக்கப்படுகிறது—இதற்காக வியாதியஸ்தரின் அசிரத்தையைப்

பற்றிடாக்டர் குறைகூறுவது சகஜம். இந்தவியாதி உள்ளே தோன்றி யுள்ளதோ என்று சந்தேகத்தை எழுப்பக்கூடிய சில அறிகுறிகளைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். யுத்த களத்தில் திடீர் தாக்குதல்கள் நடக்கக்கூடிய பனியும் நிழலும் கலந்த இருள்பிரியும் காலத்தில் எதிரியைப் பற்றின சந்தேகத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் அருப்புகள் இருப்பதேபோல் காமும் இந்த மனித வைரியான புத்து நோயின் திடீர் தாக்குதலைப்பற்றி சர்வ ஜாக்ரதை யுடனிருக்கவேண்டும்.

நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒருவரிடம் அசாதாரணமான அசதியோ, முகவெளுப்போ, எடைக்குறைவோ, உணவில் அருசி, விருப்பு வெறுப்போ தோன்றினல் தொண்டை—அன்னவாகியில் ஏதேனும் புத்து கோளாறு உள்ளதா என்று சந்தேகிக்கவேண்டும். காரணமின்றி உணவு, கழிவு வழக்கங்கள் மாறுபடுவதில்லை. வழக்கத்திற்கு விரோதமான நடத்தையையோ பாவனைகளையோ காணும் நெருங்கிய பந்துக்கள் சிறிது முன்யோசனையுடன் நடக்கவேண்டும். தேர்ச்சிபெற்ற வைத்தியரைக்கொண்டுபரிசோதித்தறியவேண்டும்.

புத்துநோயை ஒருதனிப்பட்ட நோய் என்பதைவிட ஒரு நோய்க்கூட்டம் என்று வர்ணிக்கலாம். இது கொடிய நோயா யிருந்தாலும் தொத்து நோயல்லவென்பது ஒரு பெரிய விஷயம்.

இது பீடிக்கப்பட்டோரைபரிசோதிக்கும்போது அவர்களுக்கு, அதற்கு முன்னதாக, இவ்வியாதிக்கு அனுஸரணையாக என்ன விருந்தது என்பதைக் கவனிக்கிறோம். உதாரணமாக, நாக்கிலும் கன்னத்திலும் புத்துநோய் கண்டவர்கள் ஏற்கெனவே அமிதமாகப் புகையிலை போட்டு அதற்கு அனுகூலமான நிலையிலிருந்திருக்கிறார் களென்பதைக் காண்கிறோம். இது மலையாளிகளிடம் பிரத்யட்சம். அதேபோல், குளிர்காலத்தில் காஷ்மீரிகள் வயிற்றின்மேல் சூடாக்கின செங்கலை வைத்துக் குளிர்காய்வது வழக்கம்; அவர்களிடையே தோன்றும் புத்துநோய் வயிற்று பாகத்தில் தென்படுகிறது. இதுபோல், முன்னதாக உள்ள, இவ்வியாதிக்கு அனுஸரணையான அம்சங்களை அறிந்தால் சிகிச்சை செய்வது சௌகர்யம்.

புத்துநோயைப்பற்றின தகவல்களை மக்கள் அதிகம் அறியும் படிச்செய்தால், சிறிது சந்தேகம்தட்டினலும் உடனே முன்னெச்சரிக்கையோடிருப்பார்கள் ; இதன் பலியும் குறையும்.

ஒவ்வொரு பெரிய ஆஸ்பத்திரியிலும் பிரத்யேகமாக புத்து நோய்ப் பகுதி, தேர்ச்சிபெற்ற வைத்தியர்களின் மேற்பார்வையில் நிறுவப்படவேண்டும். சஸ்திர சிகிச்சை, மின்சார சிகிச்சை, ஔஷத சிகிச்சை ஆகிய பலதுறைகளில் ஈடுபடும் வைத்தியர்கள் இந்த வியாதி விஷயமாயும் நன்கு அனுபவபூர்வமாகக் கற்று அறிய சந்தர்ப்பம் ஏற்படும். இவ்வாறு புத்துநோய்ப் பகுதிகள் நாடெங்கும் பெரிய ஆஸ்பத்திரிகளில் ஏற்படுவதானது அவ்வியாதியால் பீடிக்கப் பட்டவர்களுக்கு நன்மை விளைவிப்பது மட்டுமின்றி, இதைப்பற்றின மருத்துவ சாஸ்திரத்திற்கே அபிவிருத்தி ஆராய்ச்சிக் களமாகவும், வைத்திய நிபுணர்களுக்கு அனுபவசாலைகளாகவும், மனித சமுதாயத்திற்கே பெரிய தொண்டாகவுமிருக்கும்.

# ஆத்ம சோதனை

★

கவியோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

## 17. சாமிவிளையாட்டு

மூன்றுவயதில் நான் விளையாடத் தொடங்கினேன். என் அக்காள் செப்புவைத்து பொம்மைவீடுகட்டித் திண்ணையில் விளையாடுவாள். அவள் தோழிகள் கலியாணம் கார்த்திகை நடத்துவார்கள். நலங்கு பத்யம் பாடுவார்கள். சிலசமயம் என்னை மாப்பிள்ளையாகவும் உட்காரவைப்பார்கள். நான் அவர்கள் சமைக்கும் மணற்சோற்றை, எங்கள் வீட்டுப் பூஜாமூர்த்திக்கு நிவேதித்துக் கொண்டு வருவேன். பிறகு கோவில் கட்டுவேன். இரண்டு செங்கல்களைக்கோணமாக வைத்தால் எனது கோயில் கட்டியாயிற்று. அதில் ஒரு கூழாங்கல்லை லிங்கமாகவைப்பேன்; அல்லது பூஜைப் பெட்டியிலிருந்து ஒருவிக்ரகத்தை எடுத்துவந்து திருவிழாநடத்துவேன். பூவரசங்காய்களைக்கொண்டு ஈர்க்குச்சிகளில் இணைத்துத் தேர்கட்டியாகும். அதில் சாமியைவைத்துத் தூக்கிச்செல்வோம். பூவரசம் இலைக்குழல் அல்லது பரங்கித்தண்டால் குழல் செய்து மேளவாத்தியம் நடக்கும். தகரத் தவுல் ஜமாய்க்கும். எங்கள் தேரும் சப்பரமும் தெருவழியே சென்று, கோயில் நடராஜா சந்நிதிமுன் நிற்கும். "நடராஜா நடராஜா நர்த்தனசுந்தர நடராஜா! சிவசிவ சிவசிவ வந்தருளே சிந்தையில் இன்பம்தந்தருளே" என்று நான் பாடி ஆடுவேன். எல்லாத்தோழரும் என்னுடன் பாடுவர், ஆடுவர். கணபதிக்குருக்கள் சந்தோஷமாகத் திருநீறு தருவார். சிலசமயம் தேங்காய்மூடியும் கிடைக்கும்...'பாருங்கோ, சாமிவைத்து விளையாடினால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது." என்பேன். கோவிலில் என்னென்ன செய்கிறார்களோ அதெல்லாம் விளையாட்டாகச் செய்து, சாமிவைத்து விளையாடுதலே என் இன்ப ஆடல். வேறு விளையாட்டு எனக்குப் பிடிப்பதில்லை. இந்த ஆடல்களுக்கிடையே சுயமாகப் பாடல்களும் கிளம்பும்.

* * * * * * *

தேவாராதனையில் எனக்குள்ள காதல் இவ்வளவு அவ்வளவில்லை. அப்பா சாம்பமூர்த்திபூஜையும் பெருமாள்பூஜையும்

செய்வார். இந்திராக்ஷி சிவகவசம், ஸஹஸ்ரநாமம் புருஷசூக்தம் சொல்வார். நானும் ஏதேதோ உளறிக்கொட்டிக்கொண்டு திருவாராதனத்தைப் பார்த்துக்கொண்டிருப்பேன். அப்போது வேறெந்தச் சேட்டையும் இராது. அப்பா பூஜைமுடிந்ததும் என்பூஜை தொடங்கும்...நாளெல்லாம் பூஜைதான். பூஜைப்பெட்டி திறக்கமுடியுமானால் அதிலுள்ள பெருமாள்களெல்லாம் திண்ணைக்கு வந்துவிடும். பூட்டியிருந்தால் அம்மிக்குழவி கல்வம் திருப்பதிபொம்மை எல்லாம் எனது பூஜாமூர்த்திகளாகும். அண்டா ஜலத்தை எடுத்து எடுத்து ஊற்றி, கிழிந்த துண்டுகளை உடுத்தி, அப்பா பூஜையின் நிர்மால்யங்களையெல்லாம் வாரிக்கட்டிவந்து 'ஓம் அப்பா ஓம் அம்மா' என்று ஏதாவது சொல்லிக்கொண்டே அர்ச்சிப்பேன். எனக்குத்தரும் சீடைமுறுக்கெல்லாம் நிவேதிப்பேன். தோழருக்கும் பிரசாதம் தருவேன். என் பிரசாதத்தை விரும்பிவாங்கும் பெரியவர் என் பாட்டியே. நான் சீடை தந்தால், அதைப் பொடிபண்ணியாவது அவள் சாப்பிடுவாள்.

*          *          *          *          *

சிலவேளை எனக்கு உலகமே பிடிக்காது. குடும்பக்காட்சிகளும் தெருக்காட்சிகளும் உலகவெறுப்பைத் தரும். பேசாமல் மௌனமாகக் கோயிலுக்கு ஓடிப்போய், நடராஜா சந்நிதியில் அமர்வேன். அல்லது விசாலாக்ஷி சந்நிதியில் யானைவாகனங்களுக்கு அடியில் ஒளிந்துகொண்டு, உள்ளே லயித்திருப்பேன். என் மூத்தண்ணா வந்து "தவசு பண்ணுகிறாயோ" என்று காதைப்பிடித்து இழுத்துவருவான்.

## 18. கோபுரவஸ்து

ஆறுவயதிற்குப்பிறகு நான் தனியாகக் கோயில் கோபுரத்தில் ஏறி, அங்கே உட்கார்ந்துகொள்வதுண்டு. அதுதான் எனது சாந்திநிகேதனம். அங்கிருந்து சிவசந்நிதிவிளக்கு தெரியும். சூரியோதயம், அஸ்தமனம் இரண்டும் காணலாம். கோவில் நடப்புகளையும் காணலாம். என்னையே கோபுரவஸ்து என்று தோழர் கேலி செய்ததையும் மதியாது, நான் கோபுரவாசியானேன்.

சிவன்கோயிலில் எப்போதும் ஹர ஹர ஹர ஹர மகாதேவ சிவபார்வதிரமணா சதாசிவா" என்ற மந்திரநாதம் ஒலிக்கும். அதை ஒலிப்பவன் ஒரு குருடன், பரமபக்தன். அவனுக்குப் படிப்பில்லை. கண்தெரியாவிட்டாலும் அழகான மாலைகள் தொடுப்பான். கோயில் தோட்டத்தில் வேலைசெய்வான். மணியடிப்பான். கோயிலில் மேளதாளங்கள் முழங்கும்; தேவாரதிருவாசகங்கள் முழங்கும். அனைத்திற்கும்மேல் அவனுடைய ஹரஹர மகாதேவ மந்திரம் விறுவிறுப்பாக முழங்கும். படித்தசிலர், கேலிசெய்வர். "நியூஸன்ஸ்" என்பர். 'இதனால் உனக்குக்கண் வருமா?' என்பர். "ஐயா மானிடப் பிறவியின் பயன் சிவபக்திதான். எம்பெருமானைக் கும்பிட்டு, அவன் திருநாமத்தொண்டுசெய்து அவனடி சேர்கிறேன். அவன் கண்கொடுத்தால் உலகைக்காண்பேன். இன்றேல் உள்ளே அவனைக் காண்பேன்"...என்பான் அந்த பக்தன். ஆச்சரியம்! ஒருநாள் அவனுக்கு ஒருகண் நன்றாகத்தெரிந்தது. பிறகு இரண்டுகண்களும் தெரிந்தன. ஊரார் அவனை ஹரஹர மகாதேவா என்றழைப்பர்,

தான் கண்ணப்பரே என்று அழைப்பதுண்டு. அவன் கண் தெரிந்த பிறகு தெருத்தெருவாக வந்து, பிரதோஷம் ரதசப்தமி முதலிய புண்ணியநாட்களில் கோயில் கைங்கரியத்திற்காக அரிசி வசூலிப்பான். நான் கை நிரம்ப அள்ளிப்போடுவேன். எனது தோழர்களையும் அப்படியே அரிசி போடச் செய்வேன். கடவுளை நம்பின கண்ணப்பனுக்கு வெளிக்கண் திறந்தது. எனக்கு சிவபக்தியால் உட்கண் திறக்கும் என்று நம்பினேன்.

வீட்டில் அப்பா அம்மா அண்ணு பாடும் தோத்திரங்களில் எனக்கு வந்ததெல்லாம் பாடிக்கொண்டு, சும்மா கோவிலை வலம் வந்து தொழுவது, தனியே பேசாமல் அமர்ந்திருப்பது, யாராவது தேவாரதிருவாசகங்கள் பாடினால் கேட்பது— இவை எனக்கு இன்ப மளித்தன.

இப்படியே பெருமாள்கோவிலுக்கும் சென்றேன். அங்கே சாதாரணநாட்களில் கூட்டமிராது. தனிமை கிடைக்கும். பிரசாதம் நிரம்பக்கிடைக்கும். மார்கழிமாதம் அங்கே சென்று திருவாய்மொழிகேட்பது பிரசாதம் சாப்பிடுவது தனியே உட்காருவது—இவை எனது வேலை. சிவன்கோயில் கோபுரத்திலிருந்து பெருமாள்கோயில் கோபுரத்தைப் பார்ப்பேன். அதுவும் பெருமாளாகவே தோன்றும்.

## 19. பாரத விளையாட்டு

நான் பயன்பெற்ற மற்றொரு கோயில் திரௌபதியம்மன் கோயில். எந்தை அந்தக்காலம் திருச்சுழி தி. அ. சு. அண்ணுமலை செட்டியார் காரியமாக அலுவல் செய்தார். அவர் அலுவற்கூடம் இந்தக்கோயிலுக்கு எதிரேதான் இருந்தது. நான் செட்டியார் விடுதி மாடியில் ஏறிச் சுற்றிப் பார்ப்பேன். ஒருநாள் வீதிக்கு எதிரே பார்த்தேன். கொத்தர்கள் தரையில் ஒரு பெரிய மண்சிலையைச் செய்துகொண்டிருந்தனர்—சுமார் நாற்பதடி நீளம் பதினைத்தடி அகலம் ஐந்தடி உயரத்தில் உருவம் அமைந்துகொண்டிருந்தது. அப்பாவைக்கேட்டேன். அப்பா பாரதக்கதையைத் தொடங்கினர். "கண்ணன் கருணையால் பாண்டவர் கௌரவக்கொடியரை வென்றார்கள். திரௌபதி துரியோதனன் தொடை ரத்தத்தைத் தடவிக் கூந்தல் முடித்துத் தனது சபதத்தை நிறைவேற்றினள். அந்தச் சம்பவத்தையே திரௌபதியம்மன்கோயிலில் திருநாளாக நடத்துவார்கள். கடைசிநாள் தீக்குழி இறங்குவார்கள். அந்தப்பெரிய உருதான் அரவான். துரியோதனன் உருவும் வரும். கோயில் முன்னே பாரதம் சொல்வார்கள்; நீயும் கேட்கலாம்" என்றதும் எனக்கு உற்சாகம் தாங்கவில்லை.

திருநாள் முழுதும் அம்மன்கோயிலிலேதான் வாசம். அங்கே பாண்டவர் பாஞ்சாலி, கண்ணன் உருக்கள் அழகாக அலங்கரித்திருக்கும். அவற்றை விழுந்துவிழுந்து கும்பிடுவேன். பிறகு வேடம் கட்டும் இடத்திற்குச் செல்வேன். அங்கே வில்லும் ஈட்டியும் விளரிக்கம்பும் வாளும் கதையும் இருக்கும்; பாரதம் முழுதும் பதினெட்டுநாளும் வேடம்கட்டி நடிக்கும் ஆட்களைப் பார்ப்பேன். "மாமா எனக்கும் வேஷம்போடுங்கோ" என்பேன். "போடிப் பயலே! அந்த வர்ணம் குழை, இந்த வில்லைப்பிடி......அங்கே போ

இங்கே வா" என்று காத்தமுத்து எவும் வேலையெல்லாம் ஊக்கமாகச் செய்வேன். பிற்பகல் இரண்டுமணிக்கு பாரதம்பிள்ளையின் டமாரக் குரல் கேட்கும்.."பூம் பூம் பூம் என்று கண்ணன் சங்கொலித்தான்; டாண் டாண் டாண் என்று விஜயன் வில்லை நாணேற்றி டங்காரம் செய்து விர் விர் விர் என்று அம்புவிட்டான். தடதடதடவென்று சேனைகள் நடந்தன. கடகடகடவென்று தேர்கள் பறந்தன. சாசா சாவென்று அம்புகள் பொருதின. மடமட்மடவென்று எதிரிகள் வீழ்ந்தனர்."அடடடடடா துரியோதனா இந்த அக்ரமம் ஆகாதடா!" என்று விதுரன் சொன்னான்; "போடா போடா வேதாந்தப் பூச்சியே! போ காசியாத்திரை" என்று விதுரனைத் துரத்திவிட்டு, போர்க்களத்தில் பாய்ந்தானையா துரியோதனன்." இவ்வாறு போர் முரசுகொட்டும் அடுக்குத்தமிழை அள்ளிப்பருகினேன். பாரதம் பிள்ளை நடைதான் எனக்கு உண்மையான தமிழாகத்தோன்றும். அவர் சொல்லும் பாரதத்தைக் கேட்டுவந்து, நான் என் அம்மாளுக் கும் நண்பருக்கும் அதே ராகநடையில், பாரதம் சொல்லுவேன். அந்த இளம்வயதில் எதைக்கேட்டாலும் மனதில் அரக்குமுத்திரை போல் ஒட்டிக்கொள்ளும். என்மனம் ஒலிப்பதிவுச் சுருள்போல் வேலைசெய்யும். பாரதக்கதைமுடிந்ததும், திரௌபதியம்மன்கோயில் பூசாரிகளும் அன்பரும், அன்று நடந்தகதையை வேடம்போட்டு நடிப்பார்கள். வேடம்கட்டும்போது, நானும் கூட இருப்பேன். நானும் பாண்டவசேனையில் ஒரு வீரனாக நிற்பேன். வேடம்கட்டிக் கொண்டு, பதினெட்டுவகை வாத்தியங்களும் முழங்க, வில் கதை வாள் ஈட்டி ஏந்தி, எல்லாரும் ஊரைச்சுற்றிக்கொண்டு, பெரிய அரண்மனைக்குச் செல்வார்கள்.

[நான்மட்டும் எங்கள் வீட்டுப்பக்கம் எட்டிப்பாராமல், சிவன் கோயிலுக்குள் விருட்டென்று பாய்ந்து ஓடி, கௌரிப்பிள்ளையார் கோயிலுக்கருகில் கூட்டத்துடன் சேர்ந்துகொண்டு, அரண்மனைக் குள் புகுவேன். முத்தண்ணாகண்டால் காதைப்பிடித்துத்திருகி, தவ டையில் இரண்டு தந்து, வீட்டிற்கு இழுத்துச்சென்று வாய்ப்பாடு மொங்தையுருப்போடச் சொல்லுவான். ஆதலால் வீட்டைத்தப்பி வீதிசுற்றுவேன்.]

அரண்மனையில் டில்லிபாசாதுரை எல்லாரையும் அழைத்து, மைதானத்தில் வீரவிளையாட்டுக் காண்பார். குஸ்தி சிலம்பம் வாள் வீச்சு, வில், ஈட்டி, பாலா, ஸிந்துலா கதை விளையாட்டுகள் நடக்கும்; மால்கம்பமும் நடக்கும். பிறகு அரண்மனையைச் சுற்றிக்கொண்டு, எல்லாரும் கோயிலுக்குவருவார்கள். உடனே அங்கே பாரதப்போர்ப் படலங்களை அப்படியே நடித்துக்காட்டுவார்கள். விஜயன் பாசு பதாஸ்திரம்பெறத் தவம்புரிந்த காட்சி வெகு நன்றாயிருக்கும். மால் கம்பம் நாட்டி உச்சியில் தவபீடம் அமைத்து அங்கே அர்ஜுனன் யோகம் செய்வதும், கம்பத்தில் ஏறி துஷ்டர்கள் தவத்தைக்கலைக்க முயல்வதும் அவர்களை விஜயன் கீழே வீழ்த்துவதும், சிவபார்வதி வேடர்வந்து பக்தனைச் சோதிப்பதும், வில்லடி வாங்குவதும் முடி வில் பாசுபதம் தருவதும் கண்ணுக்கு மெய்யாகக் காட்டப்படும். மாடுபிடி சண்டை விராடபருவம் இரண்டும் அரியகாட்சிகள். அப்

போது பாண்டவர் வனவாசநாடகம் நடந்தது. அதில் பீமசேன னுக நடித்த கொட்டாப்புளிபைல்வானை மறக்கவேமுடியாது. அவன் என்னை "அம்பிப்பயலே! இதோபார்" என்று காலைவாரி எடுத்து கர்லாக்கட்டை சுற்றுவான். கக்கத்தில் இடுக்கிக்கொண்டு ஓடுவான். திரௌபதை வேடம்கட்டும் பஞ்சாட்சரம் பெண் போலவே பேசுவான். நானும் "வாடியம்மா ஐவர் நாயகி" என் பேன். ஆடல்பாடல் நடிப்பெல்லாம் அணுவிடாமல் கவனித்து, நான் எனது தோழருடன் சேர்ந்து பாரதநாடகம் நடத்தி, தெருவை இரண்டாக்குவேன். பாரதவிளையாட்டே சாமிவிளையாட்டுக்குப் பிறகு எனது வேலை. பாரதத்தைப்போல் வேறெந்தக்கதையும் எனக்கு அப்படி மனதிற் பதியவில்லை. பிற்காலம் பாரதநாடகம் எழுதியதற்குச் சிறுவயதிற்கண்டவை துணைநின்றன. உலகில் அண்ணன் - தம்பி வாழ்வும் பாரதப்போராகவே இருக்கக்கண் டேன். எங்கள் தெருவிலேயே பாகச்சண்டைகளைக் கண்டேன். குண்டுணிகள் மூட்டும் குட்டிக்கலகங்களையும் பெரிய கலகங்களை யும் கண்டேன். உலகம் இவ்வளவுதான் என்று எனக்குத் தெரிந் தது. துறவிற்கும் கலைக்கும் பாரதம் எனக்கு வழிகாட்டிற்று.

அம்மன்கோயிலில் அந்தக்காலம் பொம்மலாட்டங்களும் நாட கங்களும் நடந்தன. எல்லாம் தவருமல் பார்த்தேன். என்னை மிகவும் கவர்ந்தது அரிச்சந்திரநாடகம். அரிச்சந்திரனை நட்சத்ரேயன் கிட்டிபோடும்போது "அம்மா" என்று அலறிவிட்டேன். மயான காண்டக்காட்சியில் லோகிதாஸன் பாம்புகடித்து இறப்பதும், சந்திரமதி அழுவதும், அரிச்சந்திரத்தோட்டி பிணக்கூலி கேட்பதும் என் உள்ளத்தை உருக்கின. உண்மைக்காகத் தியாகம் செய்யும் உணர்ச்சி எனக்கு அதனுல் உண்டானது. மனச்சாட்சி ஒப்பியதை நான் தைரியமாகச் செய்ய அரிச்சந்திர நாடகம் ஒரு தூண்டு கோலாயிருந்தது. நல்லதங்காள், நளதமயந்தி, ரதிமன்மதன், பிர கலாதன், லங்காதகனம், சூரசம்ஹாரம் முதலிய பல நாடகங்களை நான் கோயில்களில் தக்க பெரியார் நடிக்கக்கண்டேன். முதன்மை யாக அந்தக்காலம் சிவசாமி என்ற நாடகப்புலவர் இருந்தார்— கலாநிபுணர், சிவபக்தர், எந்தவேடம்போட்டாலும் பொருத்த மாக நடிப்பவர், இனிய பாடகர்—அவரே எனக்கு நாடகாவேசந் தூண்டினுர். நாடகக்கதை பிறகு.

## 20. பஜனை மோகம்

கோயில்களால் எனக்கு ஏற்பட்ட பக்தி, பஜனைகளால் அமோகமாக வளர்ந்தது. இந்தக்காலமெல்லாம் நான் ஏராளமான பாடல்களைக் கேட்டு சுயமாகக்கூடப் பாட்டுக்கட்டிவந்தேன். எங்கள் தெருவில் முதன்முதல் பொன்வேலி ராமலிங்கையர் பஜனைக் கூடம் இருந்தது. வீடு கூரைவீடு; உள்ளே புகுந்தால் நரசிம்ம படம், ராமபடம்; தம்பூரா மிருதங்கம் பிடில் ஜாலராக்கள் காணும். பெண்கள் நிவேதனம் தயாரிப்பதில் சுறுசுறுப்பாயிருப்பார்கள். ஐயருக்கு இரண்டு குமாரர்கள்-மூத்தவர் நரசிம்மபாகவதர், பாட்டு கதைகளில் நிபுணர்—எனது ஆப்தநண்பர். இளையவர் இராமசந்தி

ரன் நந்திவாத்திய நிபுணர். சாயங்காலமானால் குடும்பம் பஜனையில் ஈடுபட்டு, திவ்யநாம சங்கீர்த்தனம் செய்யும். எங்கள் வீட்டுக்கு அருகேதான்; ஆகலால் கிணுகிணு ஜல்ஜல் என்று ஜாலரா கேட்டதுமே நான் ஓடிப்போவேன். எங்கேடா பயலே ஓடுகிறாய் என்று யாராவது வழிமறித்தால், 'ஹே ராம் ராம்'' என்று ஆவேசமாகக் கூவிக் கொண்டே ஓடுவேன். பஜனையை இறுதிமட்டும் ரசிப்பேன். ஜயஜானகீரமண ஜயவிபீஷணசரண' முதல் ''நீநாம ரூபமுலகு' வரையில் கவனமாகக்கேட்பேன்.

''ராமா க்ருஷ்ணா கோவிந்தா'' என்று தீபப்ரதட்சிணம் தொடங்கும். என்கால் நிற்காது. நானும் கூத்தாடத்தொடங்குவேன். ஐயர் என்னை நடுவில் கூத்தாடவிட்டு, சுற்றிலும் பக்தர்களுடன் நடனமாடுவார். எனக்கு இயற்கையாகத் தாளஞானம் ஏற்பட்டது. வாய்த்தாளம் போடுவேன். ஜாலரா போடுவேன். சும்மா இருக்க மாட்டேன். பஜனைதான் எனது இசையறிவைத் தூண்டியது. ஏராளமான தியாகராஜ, ராமதாஸ, புரந்தர, தீட்சித, சாமா கீர்த்தனங்களை பஜனைகளில் கேட்டிருக்கிறேன். ஐயர் ஒருநாள் விஷம் தீண்டி மயங்கி விழுந்தார். அவர் தமயனார்—வைத்தியம் ராமுடு ஐயர்—எவ்வளவோ முயன்றும், எனது தந்தைமுயன்றும், விதி மூய்த்தது. அவர் பெரிய பஜனை மடத்திற்கு அஸ்திவாரம் போட்டு, பேஸ்மட்டம் எழுந்தது. அதற்கு ஏராளமாகக்கடன் வாங்கினார். அத்தனை கடனையும் நரசிம்மபாகவதர் நிலத்தைவிற்று அடைத்தார். வீட்டையும் விற்றார். அந்த இடத்தில் சிறுவர்களைக் கூட்டிக் கொண்டு, நான் பஜனை நடத்திவந்தேன். அந்த இடத்தை ஒருவர் வாங்கி ஏகாதசிக்கட்டளை வைத்தார். அங்கும் நான் ஓராண்டு நிம்மதியாக வசித்தேன்.

நரசிம்மபாகவதர் உள்ளூர் பண்டாபீஸில் குமாஸ்தாவாக இருந்துகொண்டு, பஜனை புராணகாலக்ஷேபம், கதாகாலக்ஷேபம் எல்லாம் நடத்திவந்தார். அவர் சிவகடாக்ஷம்பாகவதர் வீட்டிலேதான் குடியிருந்தார். அங்கும் ஸ்ரீராமநவமி சிவராத்ரி நாட்களில் பஜனை கதை கச்சேரி நடக்கும். நான் போவேன். பிற்காலம் எங்கள் தெருக்கோடியில் திருவாவடுதுறை மடம் ஏற்பட்டது. சிவன் கோவிலைக் கட்டிமுடித்த கோவிலம்மா குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் வீடு அது. அங்கே கொஞ்சநாள் பட்சணக் கடை இருந்தது. பிறகு அதைத் திருவாவடுதுறை மடம் வாங்கியது. வாங்கினவரும் எனக்கு மிகவும் வேண்டியவரே. அங்கே இராமகிருஷ்ண விவேகானந்த சங்கம் ஏற்பட்டது. ஒரு நல்ல வேதாந்த புத்தகசாலையும் உண்டு. அங்கே நாங்கள் அமோகமாக பஜனை நடத்தினோம். இந்த பஜனைக்கு உயிராயிருந்தவர்கள் இரண்டு பாகவதர்கள்—சுந்தரமூர்த்தி பாகவதரும், நரசிம்ம பாகவதருமே. பஜனையில் நானும் என் தமயனார்களுடன் தீவிரமாகப்பங்குகொண்டேன். இந்த மடமே எனது தவநிலையமானது. விபரம் பிறகுவரும்.

சிறுவயதில் என்னை வசீகரித்த மற்றொரு பஜனை மடம் கிருஷ்ணமராஜ மடம். இது எங்கள் தெருக்கோடியில் ராஜாத் தெருவில் உள்ளது. தினம் கிருஷ்ணபஜனையுடன் சனிக்கிழமைகளில் தீபப்

பிரதட்சிணம் நடக்கும். இங்கேதான் பிடில்வித்வான் ராமசாமிராஜு இருந்தார். ராமசாமிராஜு "பாடு பாடு" என்று ஊக்குவார். அவர் ஏராளமான கீர்த்தனங்கள் வாசித்துக் கேட்டிருக்கிறேன். அந்த மடத்துப் பிரசாதத்தை நான் சாப்பிடுவேன்; ஒருநாள் வீட்டில் கொண்டுவந்து "பெருமாள் பிரசாதம்" என்று பாட்டிக்குக் கொடுத்தேன். பாட்டி விழுங்கிவிட்டாள். பிறகு 'எந்தப்பெருமாள் பிரசாதம்" என்று கேட்டாள். பாட்டி கிருஷ்ணமராஜு மடத்து பிரசாதம் என்றதும்.."அட ஐயையோ...மடையா....அதை பிராம்மணன் சாப்பிடலாமா?" என்று சினந்தாள். பிறகு வாயை அலம்பிக் கொண்டே என்னை உர் என்று பார்த்தாள். "என் பாட்டி கண்ணப்பன் எச்சிலைச் சிவபெருமான் தின்றாரே, உனக்கென்ன வந்தது! பரமபக்தர் பிரசாதத்திற்கு என்ன குறை? தொண்டைக்குள் போனால் செறிக்காதா?" என்று கேட்டேன். அன்றுதான் நமது நாட்டைப் பிடித்த சாதிவேறுபாடு எனக்குப் புலனானது. அதை ஒழிக்க உறுதி பூண்டேன்.

பெருமாள்கோயில் தெரு ராமதாஸ்மடம் எனது குரு பீடம்போலும். ஒருநாள் ராமதாஸ் பாகவதர் நந்தனார் சரித்திரம் பண்ணக்கேட்டேன். அவர் கோபாலகிருஷ்ண பாரதியாரை நேரே பார்த்தவர். சரித்திரம் என் உள்ளத்தைத் தொட்டது. மறுநாள் அவரிடம்சென்று நமஸ்கரித்து "குருப்யோ நம: எனக்கு ஒரு மந்திரம் உபதேசிக்கவேண்டும்." என்று நயந்தேன்: அவர் மிகவும் அன்புடன் மறுநாட் காலை ஐந்துமணிக்கு வரச்சொன்னார். நான் நான்குமணிக்கே உடையார் ஊருணியில் குளித்து, கரையிலிருந்த தோட்டத்தில் பவழமல்லிகைப்பூ பறித்தேன். அப்போது நான் கால்தவறி ஒருபாம்பை மிதித்துவிட்டேன். பாம்புஎன்காலில் சுற்றிக்கொண்டது. "ஓம் சுத்தசக்தி! என்னைக் காப்பாற்று ஓம் சுத்தசக்தி" என்று ஜபித்தேன்...ஆச்சரியம்! பாம்பு காலைவிட்டுக் கழன்று புதருள் ஓடிமறைந்தது. 'பகவான் நம்மை ஏதோ ஒரு காரியத்திற்கே காப்பாற்றினார்' என்று நினைத்தேன். கொஞ்சம் சமிதும் பொருக்கிக்கொண்டு ஸ்ரீராமதாஸிடம் வணக்கமாக வந்து நின்றேன். அவரும்குளித்து பட்டணிந்து, ஸ்ரீ கோதண்டராமபடத்தின்முன் அமர்ந்து "வா அம்பி' என்றார். நான் பவழமல்லிகை மலரை அவர் 'காலில் அர்ச்சித்து சமிதை காணிக்கையாக வைத்து, நமஸ்கரித்து "மந்திரசித்தி, அனுக்ரகிக்க வேண்டும். குருப்யோ நம:" என்று வணங்கினேன். பாகவதர் "எல்லாம் சித்தியாகும்; பக்குவமிருக்கிறது. ஸ்ரீ ராமகிருபை உண்டாகும். உனக்குப் பூணூல் போட்டாயிற்று"என்று கேட்டார். 'இல்லை: ஆனால் மந்திரங்களெல்லாம் பாடம். அண்ணா சந்திபண்ணும்போது நான் கவனித்துப்பாடம்பண்ணினேன். மேலும் எனக்குள் ஓம் சுத்தசக்தி என்ற மந்திரம் உதித்தது. அதையே ஜபித்து வருகிறேன்"...என்று விபரங்களைச் சொன்னேன். பாகவதர் 'நல்லதுதான். ஸ்ரீ ராம மகிமையைக்கேள்' என்று பத்ராசலம் ராமதாஸ் கதையை உருக்கமாகச்சொன்னார். நான் "அந்தா ராமமயம்" என்ற தன்யாசிராக கீர்த்தனத்தைப் பரடினேன். அம்மாள் பாடு

வதைக்கேட்டு எனக்கு ராமதாஸ் கீர்த்தனம் முழுதும் பாடமாயிருந்தது. பாகவதர் மிகவும் மெச்சி "ஓம் சுத்தசக்திஓம் என்று காலைமாலை 108 ஜபித்துவா. ராமஜபம் செய். கோயில்களில் அமர்ந்து சூரியோதயத்தின்முன் ஜபிப்பது நல்லது. ஜபத்தின்போது வேறு பேச்சுப் பேசாதே இவ்வாறு சொல்லி

"ஆபதாம் அபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம்"

என்ற பாசுரத்தையும் "ஓம் ராம்" என்ற மந்திரத்தையும் சொல்லிவைத்தார். அவர் கையால் ஒரு ஜபமாலை பெற்று நான் ஹனுமார்கோயிலில் அமர்ந்து பதினாயிரக்கணக்காக சுத்தசக்தி ஜபத்துடன் பிரணவராமஜபமும் உருவேற்றினேன். மந்திரசக்தி எனக்கு ஏகாக்ரமும் கவலையற்ற நிம்மதியும் தந்தது. ராமதாஸ் மடத்தில் பிரபல பாகவதர்கள் வந்து கதை செய்வார்கள்—மதுரை சேஷபாகவதர், முத்தையாபாகவதர், பஞ்சாபிகேசபாகவதர், லக்ஷ்மணாசாரியார், சூலமங்கலம் வைத்திநாதபாகவதர், நரசிம்மபாகவதர் ஆகியோர் கதைகள் வெகு இனிமையாயிருக்கும். பாகவதர் பிள்ளை தசரதராமபாகவதரின் ராமாயணக்கதைகள் அமுதமாயிருக்கும்—அனைத்தையும் கேட்டுக்கேட்டு எனக்குப்பல நிரூபணங்கள் பாடமானதுடன் கதைசெய்யும் பந்தாவும் தெரிந்தது. என்னையும் ஒரு பாகவதராக மதித்து, எனது சகாக்களுக்குமுன், அல்லது தனிமையில் கதைசெய்வேன்...பக்திப்பரவசமே முதன்மை...

இந்தக்கதைகளுக்கு உதவியாக கொட்டகுடியில் தேசிகாசாரியார் வாசித்துவந்த ராமாயணமும், எங்கள் தெருவில் சுந்தர சிரௌதிகள் முழங்கும் பாரதபாகவத ஸ்காந்த புராணங்களும் உதவின. நான் கண்டது கேட்டதெல்லாம் இரவில் அமைதியாகச் சிந்திப்பது வழக்கம். இவ்வாறே எனக்கென்று ஒரு கல்வியறிவு உள்ளே வளர்ந்துவந்தது.

---

ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் (மே இதழ் தொடர்ச்சி)

# பகவத்கீதா ஸாரம்

## பதினெட்டாவது அத்தியாயம்

### மோக்ஷ ஸந்நியாஸ யோகம்

19. சத்துவ வீடுடை நற்கருமம் தான் உகந்தமையும்
சத்துவம் உள்ளது தான் குறிக்கோள்வகை செய்தனவும்
சத்துவ நற்கிரிசைப் பயனும் சரணாகதியும்
சத்துவமே தருவான் உரைத்தான் தனிப் பார்த்தனுக்கே.

[சத்துவ வீடுடை - ஸாத்விகத் தியாகத்துடன் கூடிய, நற்கருமம் - சாஸ்திரத்தில் கூறப்பட்ட காரியங்களை, தான் உகந்தமையும் - தான் பிரீதியுடன் அங்கீகரித்திருப்பதையும், சத்துவம் உள்ளதுதான்-ஸத்வகுணம் உடைய வஸ்துக்களையே, குறிக்கொள்வகை - சாவதானமாக அங்கீகரிக்கும்படி, செய்தனவும்-செய்ததையும், சத்துவ நற்கிரிசைப் பயனும் - ஸத்வ குணத்தினால் செய்யப்படுகிற வைதிக கருமங்களின் பிரயோஜனங்களையும், சரணாகதியை

யும்- பிரபத்தியையும், சத்துவமே தருவான் - ஸத்வகுணத்தையே தரும்இயல்புகொண்ட கண்ணன், தனிப்பார்த்தனுக்கு - ஒப்பற்ற வீரனான அர்ஜுநனுக்கு, உரைத்தான் - சொன்னான்.]

## சன்யாஸமும் தியாகமும்

அர்ஜுனன் பின்வருமாறு கேட்டான்:—"கேசியைக் கொன்ற கண்ணா! சன்னியாஸம் தியாகம் இவைகளின் உண்மையைத் தனித்தனியாக அறியவிரும்புகிறேன்; அதை நன்றாகச் சொல்லவேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணன் பின்வருமாறு கூறினர்:—சிலர் காம்யகருமங்களை விட்டுவிடுவதே சன்னியாஸம் என்றும், சிலர் எல்லாக் கருமங்களின் பலத்தை விட்டுவிடுவதே தியாகம் என்றும், சிலர் தோஷமுள்ள கருமங்களை விட்டுவிடவேண்டும் என்றும், வேறு சிலர் யாகம் தானம் தபசு முதலிய கருமங்களை விடக்கூடாது என்றும் கூறுகிறார்கள். ஆனல், நிச்சயமான எனது அபிப்ராயம் என்னவென்றால் யாகம் தானம் தபசு முதலிய கருமங்களை பலத்தில் ஆசையில்லாமலும் பற்று இல்லாமலும் செய்யவேண்டும். பஞ்சமஹா யஜ்ஞம் முதலிய நித்ய கருமங்களைவிடுவது தாமஸத் தியாகமாகும். கஷ்டம் என ஒரு கருமத்தை விடுவது ராஜஸமாகும். அதனல் பயனில்லை. அவசியம் செய்யவேண்டும் என்னும் நித்யகருமங்களைப் பற்றையும் பலத்தையும் விட்டுவிட்டுச் செய்வதுதான் ஸாத்விகத்தியாகம் எனப்படும். இதுவே சன்னியாஸம். இப்படிச் செய்பவனுடைய மனம் தெளிந்து சாந்திபெறுகிறது. இவனை ஒரு பலனும் கட்டுப்படுத்தாது.

## ஜீவாத்மா கர்த்தா இல்லை.

ஒருகாரியம் சித்திப்பதற்கு சரீரம் ஜீவாத்மா புலன்கள் வெவ்வேறு தொழில்கள் செய்யும் பிராணவாயு பரமாத்மா என ஐந்து காரணங்கள் இருக்கின்றன. ஜீவாத்மாமட்டும் கர்த்தா ஆவதில்லை. பரமாத்மாவின் அனுமதியினலேயே ஜீவாத்மா செய்கிறான். இப்படி அறிபவன் ஒருகருமத்தாலும் கட்டுப்படுவதில்லை.

## மூன்றுவித ஞானங்கள்

எல்லா பிராணிகளிடத்திலும் ஒரே ஆத்மாவைக் காணும் அறிவு ஸத்வகுணத்தினல் உண்டாகிய ஞானம். எல்லா பிராணிகளிடத்திலும் ஆத்மாவை வெவ்வேறாகக் காண்பது ராஜஸஞானம். ஒரு காரியத்தில் பற்றுதல் உடையதும் அல்பமான பலத்தை உடையதுமான அறிவு தாமஸம்.

## மூன்றுவித கருமங்கள்

அவசியம் செய்யவேண்டியதாயும், ஆசை பற்று த்வேஷம் இவையின்றியும், பயனைக்கோராமலும் செய்யப்படும் கருமம் ஸாத்விகமாகும். ஆசை அஹங்காரம் சிரமம் இவைகளுடன் செய்யப்படுவது ராஜஸமாகும். வரப்போகும் கஷ்டத்தை ஆராயாமல் மோஹத்துடன் ஆரம்பிப்பது தாமஸமாகும்.



1—9—1919
12153

## மூன்றுவித கர்த்தாக்கள்.

பற்று அஹங்காரமின்றியும், வெற்றி தோல்விகளில் மாறுதல் அடையாமலும், தைரியம் ஊக்கம் இவைகளுடன் காரியம் செய்பவன் ஸத்வகுணம் மேலிட்ட கர்த்தா ஆவான். பயனில் ஆசையுடன் சந்தோஷம் துக்கம் இவைகளுடன் கூடியவன் ராஜஸ கர்த்தா. சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கருமங்களைச் செய்யாமல் விரோதமாகச் செய்பவனும் துக்கம் நிறைந்தவனுமாகிற கர்த்தா தாமஸ கர்த்தா ஆவான்.

## மூன்றுவித புத்தி

மோக்ஷத்தை அடைவதற்கு உபயோகமான தருமத்தை அறியும் புத்தி ஸத்வகுணம் மேலிட்ட புத்தியாகும். தருமம் அதருமம் இவைகளை உள்ளபடி அறியாதபுத்தி ராஜஸமாகும். அதருமத்தை தருமமாக அறியும்புத்தி தாமஸமாகும்.

## மூன்றுவித தைரியம்

பக்தி செய்வதற்காக மனத்தையும் புலன்களையும் நிலையாகத் தரிப்பது ஸாத்விக தைரியம் எனப்படும். பலத்தில் ஆசைகொண்டு அறம்பொருள் இன்பங்களை தரிப்பது ராஜஸ தைரியம். தூக்கம் விசனம் கொழுப்பு முதலியவைகளை விடாது இருப்பது தாமஸ தைரியமாகும்.

## மூன்றுவித சுகம்

முதலில் விஷத்தைப்போலவும் கடைசியில் அமுதம்போலவும் இருப்பதும், ஜீவாத்மாவைப்பற்றிய ஞானத்தினால் உண்டானதுமான சுகம் ஸாத்விக சுகம். முதலில் அமுதம்போலவும் கடைசியில் விஷம்போலவும் இருப்பது ராஜஸ சுகம். தூக்கம் சோம்பல் அஜாக்கிரதை இவைகளால் உண்டான சுகம் தாமஸம் ஆகும்.

## பகவானை அடையும் வழி

பிராம்மணர்கள் சாந்தி தபஸ்ஸு முதலியவைகளாலும், க்ஷத்திரியன் வீரம் ஆட்சி முதலியவைகளாலும், வைச்யன் விவசாயம் வாணிபம் முதலியவைகளாலும், சூத்திரன் மூன்று ஜாதிகளுக்கும் பணிவிடை செய்வதாலும் பகவானை அடைகிறார்கள். இவ்விதம் ஒவ்வொருவரும் அவர் ஜாதிக்குத் தகுந்த கருமங்களைச் செய்வதால் பரம்பொருளை எளிதில் அடைகின்றனர்.

## பிரம்மமாக ஆகும் வழி

தினந்தோறும் சுத்தமான மனத்துடன் கர்மயோகம் செய்துகொண்டு, தனிமையில் தியானம் செய்பவனும், காமம் கோபம் முதலியகெட்ட குணங்களை விட்டவனும், புலன்களை அடக்கியவனும், சாந்தியுள்ளவனும், பிரம்மம் ஆகிறான்; அதாவது பரிசுத்தமான ஆத்மாவை அடைவதற்கு யோக்கியதையைப் பெறுகிறான். இப்படிப்பட்டவன் மேலான ஸ்ரீகிருஷ்ணபக்தியை அடைகிறான்.

## பக்தியின் பலன்

பக்தியினால் பகவானுடைய சொரூபம் சுபாவம் குணம் இவைகளை உள்ளபடியே அறிந்துகொண்டு, பகவானை அடைகிறான்.

## மாயையைக் கடக்கும் வழி

எல்லோருடைய ஹ்ருதயத்திலும் பகவான் வீற்றிருந்து முக்குணங்களாகிற மாயையினால் அவரவர்களின் கருமங்களுக்குத் தகுந்தபடி சுழற்றுகிறான். மாயையைக் கடந்தால்தான் சாந்தியும் மோக்ஷமும் கிட்டும். அதற்காக பகவானையே சரணாகதி செய்ய வேண்டும். எப்பொழுதும் பகவானிடத்திலேயே பக்தி செய்பவனும், அவனையே நினைத்துக்கொண்டிருப்பவனும், அவனுக்கு ஆராதனமும் நமஸ்காரமும் செய்பவன் அவனையே அடைகிறான்.

"அர்ஜுனா! எல்லாயோகங்களையும் விட்டுவிட்டு என்னையே சரணம் அடை; நான் உன்னை எல்லா பாபத்திலிருந்தும் விடுவிப்பேன். கவலைப்படாதே. ஆகவே நீயுத்தம் செய்வதுதான் நியாயம். என்ன, உனக்கு அஞ்ஞானத்தினால் உண்டான மயக்கம் நீங்கிற்றா?"

அர்ஜுனன் பின் வருமாறு கூறினான்:—"ஸ்ரீகிருஷ்ணா! உன் தயவினால் எனது அஞ்ஞானம் நீங்கிற்று. அறிவு வந்தது. இனி ஐயமின்றி உன் கட்டளையைச் செய்வேன்!!"

இந்த அத்தியாயத்தின் கருத்து:— ஸ்ரீகிருஷ்ணனை மட்டும் அடைக்கலமாக அடைவது அவசியம்.

## கீதா பாராயணத்தின் பலன்.

20. வன் பற்று அறுக்கும் மருந்தென்று மாயவன் தான் உரைத்த
இபக் கடல்அமு தாம்என்ன நின்றஇக் கீதைதன்னை
அன்பர்க்கு உரைப்பவர் கேட்பவர் ஆதரித்து ஓதுமவர்
துன்பக் கடலில் துளங்குதை நீங்கித் துலங்குவரே.

[வன்பற்று-கெட்டியான ஸம்ஸாரக்கட்டை, அறுக்கும் மருந்தென்று - அறுக்கக் கூடிய மருந்து என எண்ணி, மாயவன் தானுரைத்த-ஸ்ரீகிருஷ்ணன் தானே உபதேசித்த, இன்பக்கடல் அமுதாமென-இன்பத்தை தரும் ஸமுத்திரத்திலுண்டான அம்ருதம் போன்ற, இக்கீதை தன்னை - இந்த கீதையை, அன்பர்க்கு உரைப்பவர் - பக்தர்களுக்குக் கூறுபவரும், கேட்பவர் ஆதரித்து ஓதுமவர்-இதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களும், பிரீதியுடன் அத்தியயனம் செய்பவரும், துன்பக்கடலில் - துக்கம் நிறைந்த ஸம்ஸாரத்தில், துளங்குகை நீங்கி-உழன்று கஷ்டப்படுவது இல்லாமல், துலங்குவரே-பிரகாசிப்பார்கள்]

ஸ்ரீபகவத்கீதையின் பதினெட்டு அத்தியாயங்களையும் பக்தியுடன் படிப்பவர்களும், உபதேசிப்பவர்களும், கேட்டுக்கொண்டு இருப்பவர்களும், ஸ்ரீகிருஷ்ணனுடைய அனுக்கிரஹத்தினால் ஸம்ஸார பந்தம் நீங்கி பரமபதத்தில் சுகமாக விளங்குவார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம் அஸ்து.




# 7. எது விருந்து, எது மருந்து?

## (ஒரு சரித்திரப் புதையல்)

ஒரு விருந்து-வைபவத்திற்குச்சென்ற ஓர் அறிஞரை விருந்து-மண்டபத்திற்குள்ளே வேலைக்காரன் விடவில்லை. காரணம், மற்றவர்களைப் போல் இவர் ஆடம்பர உடை தரித்துவராததுதான். இந்த நிலையில் பொதுவாக அறிஞர்கள் படாடோப உடைதரித்து விருந்திற்குப் போவதைக் காட்டிலும் போகாமல் இருந்துவிடுவதே சிறந்ததென்று நினைத்துவிடுவார்கள். ஆனால், இந்த அறிஞரோ அப்படிச் செய்யாமல் ஆடம்பரமாக ஒரு பட்டு மேற்சொக்காயும் சரிகைத் தலைப்பாகையும் அணிந்துகொண்டு புறப்பட்டார்.

## சட்டைக்கு விருந்தா?

வேலைக்காரன் சலாமிட்டு வரவேற்று விருந்து-மண்டபத்தில் பலவகையான தின்பண்டங்கள் நிறைந்த பிளேட்டுக்களுக்கெதிரே போட்டிருந்த ஒரு நாற்காலிக்கருகே அழைத்துச்சென்றான். விருந்தளிக்கும் முதலாளியும் 'வாருங்கள், வாருங்கள்' என்று நாற்காலியில் அமருமாறு சைகை காட்டினார். நமது அறிஞரோ தமது தலைப்பாகையையும் பட்டு மேற்சொக்காயையும் நாற்காலிமீதுவைத்து, 'உண்ணுங்கள், உண்ணுங்கள்' என்று உபசரித்தார். அங்கிருந்த விருந்தினர்களெல்லாம் 'பித்தனோ இவன்?' என்று பிரமிக்க, அறிஞர், 'இந்த இரண்டுக்கும்தான் இந்த மண்டபப்பிரவேசம்; இந்த விருந்து; எனக்காக இல்லையே!' என்று சொல்லி, நடந்ததை விவரமாய்த் தெரிவித்தார். நவநாகரிகத்திற்கு ஒரு நல்லபாடம்!

## சொக்காய்-நாகரிகமும் மேலாடை-நாகரிகமும்

இன்றைய நாகரிகம் சொக்காய்-நாகரிகம். பழைய காலத்திலும் மேலாடை-நாகரிகம் உண்டு. அந்தக் காலத்தில் சட்டைக்காரனை வேலைக்காரன் என்று கருதுவர். எஜமானன் கம்பீரமாக மேலாடை அணிந்திருப்பான். அடிமையோ,

மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கம்கீழ் அடியார்க்(கு) இல்லை

என்று பாரதியார் சொல்லுகிறமாதிரி ஒரே இடுப்புத்துணியுடன் இருப்பான். மேலாடை இல்லாதவர்களுக்குச் சபைகளிலோ மண்டபங்களிலோ பிரவேசம் கிடைப்பது அரிது.

## பண்டித-பாமர மனோபாவம்

இதை வைத்துக்கொண்டு புலவர் ஒருவர் ஒரு கற்பனை செய்திருக்கிறார். தோலாடையுடன் வந்த சிவபெருமானைப் பாற்கடல், விருந்தாளியாக ஏற்று உபசரிக்கவில்லையாம். 'விஷத்தைச் சாப்பிடு' என்று சொல்லிவிட்டதாம். இடுப்பிலும் தோளிலும் பீதாம்பரம் தரித்து அலங்கார புருஷராக வந்த மகாவிஷ்ணுவை விருந்தாளியாக ஏற்று உபசரித்து அமிர்தம் அளித்ததுடன், அந்த விருந்தாளியை மாப்பிள்ளையாகவும் செய்துகொண்டதாம்.

இந்தச் சம்பவத்திலிருந்து சிவபெருமானும் ஒருபாடம் கற்றுக்கொண்டதாகக் காளமேகப்புலவர் அபிப்பிராயப்படுகிறார். 'இரக்கப்போனாலும் சிறக்கப் போகவேணும்' என்ற பாடம்தான். பிக்ஷாடன மூர்த்தியாகிப் 'பிச்சையெடுத்துண்ணப் புறப்பட்டும்' மேளதாளங்களோடு ராஜாங்கமாய்க் கிளம்பிவிட்டாராம். அந்த நிலையிலும் சிவபெருமான் மேலாடை-நாகரிகத்தையாவது சொக்காய்-நாகரிகத்தையாவது ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், இவர்தான் விருந்துக்குப் போகவில்லையே? என்ன தாளம் போட்டாலும் கிடைத்தது பிச்சைதான்,

இச்சைக் கினியதோழில் எங்கும் இருக்கப்
பிச்சை வாங்கித் தின்றாரேடி உங்கள் சிவனார்!

என்று லட்சுமி வாயிலிருந்து பார்வதிக்கு ஏச்சுக் கிடைக்கும்படி! ஆனால், பளிச்சென்று பார்வதியாள் வாயிலிருந்தும்,

தந்திரமாய்ப் பால் தயிர் வெண்ணெய் திருடிக்
குந்திக் குந்தித் தின்றாரேடி உங்கள் பெருமாள்!

என்று பதில்-ஏச்சும் கிடைத்துவிட்டது.

'கண்ணன் வெண்ணெய் உண்டான்' என்று சிறுபிள்ளைகளும் கற்றுக்கொள்ளும் அந்த வெண்ணெய்—விருந்தெல்லாம் விருந்தல்ல, திருட்டே யென்பது சிறுபிள்ளைகளுக்கும் வெளிப்பட்ட செய்தி தானே?

போகட்டும். இந்தியா மேலாடை-நாகரிகத்தைக் கூடப் பிரமாதமாக எந்தக் காலத்திலும் மதித்ததில்லை. வேதகாலம் தொடங்கி, இந்தச் சொக்காய் - நாகரிகத்திலும் அரைநிர்வாணப் பக்கிரியாகத் திரியத் துணிந்த காந்தியடிகள் காலம் வரையிலும் இந்தியா பொதுவாக மேலாடைக்கோ சொக்காய்க்கோ அஞ்சியோ பிரமித்தோ விருந்து செய்ததில்லை. தோலாடையையோ மரவுரியாடையையோ இகழாது போற்றியது முண்டு. எனினும், சொக்காய் - நாகரிகத்தைப் பகைத்துத் துரத்தியதும் இல்லை.

## அன்னிய விருந்தினர்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வந்த கிரேக்க யவனர்களையும்—சமாதானமாக வந்தவர்களை—இந்தியா விருந்தாளிகளாக வரவேற்றது. அந்நாளில் சந்திரகுப்த சக்ரவர்த்தியின் கிரேக்க தூதன் இந்தியாவைக் குறித்து எழுதியுள்ள குறிப்பு ஒன்றில், 'இந்த மக்களின் வீட்டுக்கதவுகளுக்குப் பூட்டே இல்லை--அவ்வளவு ஒழுக்கமும் உண்மையும் உள்ளவர்கள்' என்கிறான்.

அடையா நெடுங்கதவும்
அஞ்சலென்ற சொல்லும்

உடைய ஊர் சடையப்பனின் ஊர் என்று கவி பாடியிருக்கிறாரே, அது கற்பனையல்ல என்று கருதும்படியிருக்கிறது மேலே சொன்ன கிரேக்க தூதரின் இந்திய வர்ணனை.

அந்த நாள்முதல்—அதற்கும் முன்பே என்றும் ஊகிக்கலாம்—இந்தியா வந்தவர்களையெல்லாம் விருந்தினர்களாக வரவேற்று வந்திருக்கிறது. 'இங்கே வந்தால் காலை முறித்துப்போடுவேன்; அல்லது அடிமையாக்கி விடுவேன்; அல்லது துரத்திவிடுவேன்' என்று பயமுறுத்தியதில்லை, கதவடைத்ததில்லை. விருந்தினரைக் குடும்பம் வரவேற்று உபசரித்தது போல் அன்னியர்களையும் வரவேற்ற தேசம் விருந்தாளிகளுக்கு விடை கொடுக்க மறந்துவிட்டது!

'ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம், நால்வர் நெருங்கிக் கொள்ளலாம், எனினும் மோதிக்கொள்ள வேண்டியதில்லை!' என்ற ஆழ்வார்களின் ஆழ்ந்த தத்துவம் இந்திய சரித்திரத்திற்கு என்றும் தோன்றாத் துணையாகிவிட்டதுபோலத் தோன்றுகிறது. அன்னியர்களுக்கு மட்டுமா இப்படி இடங்கொடுத்தது? அன்னிய தத்துவங்களையும்தான், கருத்துவேற்றுமைகளையும்தான் இந்தியஉள்ளம் எப்படித் தக்கவழி விரிந்து 'விருந்தாளிகளாக' வரவேற்றிருக்கிறது!

அந்தக் காலத்தில் வந்தவர்களையெல்லாம் ஊட்டிவளர்த்தும் இந்தியாவில் உணவுப்பஞ்சம் கிடையாது. அன்னியர்களுக்கு ஞானஉணவும் அளிக்க முயன்றது நமது நாடு. பழைய உலகில் பல நாடுகளுக்கும் உடையும் அளித்து மானம்காத்துவந்தது.

## ஞானவிருந்தே விருந்து.

சுதந்திர இந்தியாவும் சுபிட்ச இந்தியாவாகி உலகத்திற்கு ஞான விருந்து அளிக்கவேண்டும். பழைய இந்தியாவின் ஞானவிருந்தைச் சுவைத்துப் பார்த்தவர்களே கிரேக்க முனிவர்களான ப்ளேட்டோவும், பிதாகரஸும், கன்ப்யூஸியஸ் என்ற சீன முனிவரும்—என்று கூறுவோருண்டு. கிறிஸ்துவேதத்திலே மத்தேயு-சுவிசேஷத்தில் 'கிழக்கேயிருந்து ஞானபுருஷர்கள்' என்ற ஒரு சொற்றொடர் காணப்படுகிறதல்லவா?—அந்தக் 'கிழக்கு' இந்தியாவாக இருக்கக்கூடும் என்று ஊகிப்பவரும் உண்டு.

## விருந்தே மருந்து!

சமீபகாலத்திலும் எமர்ஸன், வால்ட்விட்மன், ஷோப்பனேர் முதலான அமரிக்க, ஐரோப்பிய ஞானிகள் இந்திய சிந்தனையுலகிலே விருந்துண்டவர்களே. பகவத்கீதையைத் தமது சொக்காய்ப் பையில் எமர்ஸன் எடுத்துச் செல்வதுண்டு என்பர். ஷோப்பனேரோ உபநிஷதங்களைக் குறித்துப் பேசும்போது, 'இவையே என் வாழ்க்கையில் ஆறுதலளித்திருக்கின்றன; இவையே என் சாவிலும் சாந்தியளிக்கும் என்பது என் நம்பிக்கை' என்றார். இத்தகைய இந்திய ஞானத்தை,இந்தியா உலகத்திற்கே அளிக்கத்தக்க 'சாவா மருந்து—அமிர்தசஞ்சீவி'—என்று சொல்லலாம்.

நமது நீண்டகாலச் சரித்திரத்தைக் கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவடையும்போது, 'விருந்து எது, மருந்து எது?' என்ற பிரசினைக்குத் தக்கதொரு விடை கிடைக்குமென்பது திண்ணம்.

ஆனால், இன்றைய புதிய சூழலில் நாம் நமது பாரம்பரிய தருமத்தை ஒட்டி உலகத்திற்கு விருந்தளிக்கவேண்டுமென்றால், உலகநோய்க்கு, நாகரிக நோய்க்கு மருந்தும் அளிக்கவென்றால், நாம் முதன்முதல் காலத்தால் மாசுபடர்ந்த இந்தியாவின் சீலத்தைத் துடைத்துத் துப்புரவாக்கிக்கொள்ள வேண்டும். காலத்திற்கேற்ற கோலம்பூண்டு இந்தியா என்ற மூலகுரு 'அநாதாச்ரமம்' போலாகிவிட்ட உலகத்திற்கெல்லாம் விருந்தும் மருந்தும் ஒருங்கே அளிக்கமுடியும்.

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

## ஐஸ்ஹவுஸ் புனிதமடைந்தது.

அவ்வப்பொழுது அந்தக்கட்டிடத்தின் அழகையும் கடற்கரையின் அருகில் இருக்கும் அந்தத்தையும் பார்த்துவிட்டு ராஜாக்கள் மகாராஜாக்கள் பிரபுக்கள் யாராவது வந்து ஒன்றிரண்டு மாதம் தங்குவது வழக்கம்.

ஒருசமயம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச்சேர்ந்த பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணானந்த மகாராஜ் அவர்கள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐந்தாறு வருஷங்கள் ஐஸ்ஹவுஸிலும் அதைச்சேர்ந்த வெளிக்கட்டிடங்களிலுமாக இருந்து அவரது தபோமகிமையினால் அதைப் புனிதமாக்கினார். இத்தனை கீர்த்திவாய்ந்த சரித்திர மகிமை பொருந்திய அரண்மனை எங்கள் ஆச்ரமத்துக்குக் கிடைத்தது ஒரு பெரிய பாக்யமேயல்லவா?

ஐஸ்ஹௌஸுக்குக் குடிபோகிறோம் என்று தெரிந்தவுடன் திருவல்லிக்கேணி பெரியோர்கள் பலர் சற்று பயந்தார்கள். ஸர். சிவஸ்வாமி அய்யர் அவர்களது சகோதரர் டாக்டர் சந்திரசேகரய்யர் அப்போது திருவல்லிக்கேணியிலிருந்தார். அவர் மனைவி கேசியம்மாள் அடிக்கடி வந்து ஆச்ரம மாணவிகளின் சௌகரியத்தைக் கவனிப்பது வழக்கம். அவர் வந்து நாங்கள் அங்கு போகக்கூடாது என்று தடுத்தார். புருஷத்துணையுமில்லாமல் 30 இளம் பெண்களுடன் அக்கம்பக்கத்தார் ஆதரவுமில்லாமல் தனிக்காட்டில் இருப்பதுபோன்ற அந்த இடத்துக்குப் போவது சுத்த பைத்தியக்காரத்தனமென்றும், மேலும் அங்கு தற்கொலை செய்துகொண்ட ஒருவரது பேய் உலவுகிறதென்றும் நாங்கள் எந்த தைரியத்தில் அங்கு போயிருப்பதற்குத் துணிந்தோமென்றும் கேட்டாள். "மிஸ் லிஞ்சும், மிஸ் பிரேஜரும் வெள்ளைக்காரிகள்: அவர்களுக்கு இந்த விஷயங்கள் யாவும் லக்ஷியமில்லை, அவர்களது வெள்ளைத் தோலைக்கண்டாலே நம்மவர்கள் பயந்து அவர்களிடம் மரியாதையாயிருப்பார்கள். அவர்கள் பேச்சைக்கேட்டுக்கொண்டு நீங்கள் அங்கு போயிருக்க ஒப்புக்கொண்டது முட்டாள்தனம். "நான் அங்குபோய் இந்தப் பெண்களைவைத்துக்கொண்டு தனியாய்இருக்கமாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிடு. வேண்டுமானால் அவர்கள் போய் அங்கு அந்தப் பெண்களை வைத்துக்கொண்டிருக்கட்டும்" என்றெல்லாம் கேசியம்மாள் மாத்திரமல்ல, இன்னும் அநேகரும் எங்களை பயப்படுத்தினார்கள். மிஸ் பிரேஜரிடமும் மிஸ் லிஞ்சினிடமும் இதையெல்லாம் சொன்னால் அவர்கள் சிரித்துவிட்டு, 'ஒரு நல்ல காவல்காரனைப்போட்டுவிடுவோம்' என்றும், தாங்களே ஆரம்பத்தில் ஒன்றிரண்டு நாட்கள் இரவில் தங்குவதாயும் தைரியம் சொன்னார்கள்.

ஒருநாள் கடற்கரையில் ஸ்ரீமான் ஸர். மணி அய்யரின் பேத்தியை சந்தித்தேன். அவளிடம் நாங்கள் ஐஸ்ஹௌஸுக்குப் போகப்போவதைப்

பற்றி சொன்னபோது அவள் அதைப்பற்றி பயப்படவே வேண்டாமென்றும், அக்கம்பக்கத்திலிருக்கும் வலைஞர்கள் சூது கபடமில்லாத நல்ல பலசாலிகள் என்றும், அவர்கள் தகுந்த துணையாயிருப்பார்கள் என்றும், தங்கள் பங்களாவுக்குப் பக்கத்தில் வசிக்கும் வலைஞர்களிடம் அவர்களுக்குள்ள அனுபவத்தைச்சொல்லி தைரியப்படுத்தினாள். ஆக ஜனவரிமாதம் ஒரு நல்லநாள் பார்த்துக்கொண்டு ஐஸ்ஹவுஸுக்குக் குடிபோனோம். முதல் ஒருவாரம் மிஸ்பிரேஜர் எங்களுடன் இரவில்வந்து படுத்துக்கொண்டாள். என் சிற்றன்னை எங்களுக்கெல்லாம் ஒரு பெரிய பாதுகாப்பு. எப்படியோ ஒன்றிரண்டு வாரங்களிலேயே எங்களுக்கு அந்த இடம் பழகி பயமில்லாமல் ஆகிவிட்டது.

எனக்கு 1914 டிஸம்பரில் கிறிஸ்துமஸ் லீவில் புளூரஸி என்னும் நோய்வந்து மூச்சுவிடமுடியாமல் 15, 20 நாள் கஷ்டப்பட்டேன். டாக்டர் சந்திரசேகர அய்யர் பிரதிதினமும் வந்து antiphlogiston வைத்துக்கட்டி மருந்து கொடுத்துவந்தார். அதன் பிறகு ஒருமாதம் லீவு எடுத்துக்கொண்டு ஐஸ்ஹவுஸிலேயே ஓய்வு எடுத்துக்கொண்டேன். மாடி வராந்தாவில் ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டு கடலைப் பார்த்துக்கொண்டேயிருப்பேன். ஏதோ ஸ்டீமரில் போவதுபோலிருக்கும். காலைமாலைகளில் கடலிலிருந்து சூரியசந்திர உதயங்களும், மேற்கில் சூரிய அஸ்தமனமும் ஆகாயத்தில் பலவர்ணஜாலங்களும், கடலின் பல நிறங்களும், அமாவாசை இரவுகளில் சமுத்திர அலைகளில்உள்ள ஒருவித பாஸ்பரஸ் கிருமிகளில் ஏற்படும் தகதகவென்று வெள்ளிபோல பிரகாசிக்கும் அலைகளும் அலைகளின் ஓயாத இன்பமான ஓசையும் எல்லாம் மனதுக்கு மிகுந்த இன்பத்தைக்கொடுத்தன. பகல்வேளை முழுவதும் மாணவிகள் பாடசாலைக்குப் போய்விடுவார்கள். சித்தி கீழே இருப்பார். நான் தனிமையாக நல்ல வேதாந்தப்புத்தகங்கள் படித்துக்கொண்டு அந்த ஒருமாதம் கடல்காற்றின் மகிமையினாலும், ஓய்வினாலும், நல்ல தேகசுகத்தையடைந்து மறுபடி ஸ்கூல் வேலைக்குப்போக ஆரம்பித்தேன்.

அழகிய ஐஸ்ஹௌஸைப் பார்ப்பதற்கு அநேகர் வருவது வழக்கம். மிஸ் லிஞ்ச் அவாகளுக்கு ஆச்ரமத்தில் கிரம்ப அபிமானம். அடிக்கடி பெரியவர்கள் யாரையாவது அழைத்துவருவார். கவர்மெண்ட் ஹவுஸில் கவர்னர் பெருமாட்டியுடன் வந்து தங்கும் ஐரோப்பியர்கள் சிலரும் அவ்வப்போது வருவார்கள். கடல்கரை ரஸ்தாவில் போகும்போது "இது என்ன கட்டடம். (Wedding cake) விவாக கேக் மாதிரியிருக்கிறதே" யென்று கேட்பார்களாம். வருபவர்கள் அநேகர் நிலஅறையைப் பார்க்க விரும்புவார்கள். அதற்குள் இறங்குவதற்கு ஒரு மரப்படிக்கட்டு உண்டு. உள்ளே இருட்டாய் கொஞ்சம் ஈரடியாயுமிருக்கும், வௌவால்கள் வாசம். ஒரு வத்திவிளக்கும் நெருப்புப்பெட்டியும் தயாராயிருக்கும். அதை ஏற்றிக்கொண்டு கீழேஇறங்கிப் பார்ப்பார்கள். முக்கியமானவர்கள் வந்தால், மாணவிகள் கும்மி கோலாட்டம் சங்கீதம் சேர்ந்த ஒரு நிகழ்ச்சி தயாராயிருக்கவேண்டும்.

ஐஸ்ஹவுஸ் தோட்டத்தில் ஒரு காலத்தில் ஒரு குளம் இருந்ததாம். நாங்கள் போனபோது அது தூர்ந்துபோயிருந்தது. கிணற்று ஜலம் "அதனருகே சிற்றூரல் உண்ணீருமாகிவிடும்" என்றபடி குடிப்பதற்கு ருசியான ஜலம். நாங்கள் போனபோது குழாய் ஒன்றிரண்டுதானிருந்தன. கிணற்று ஜலந்தான் ஸ்நான பானத்துக்கெல்லாம். தோட்டத்தில் அடர்ந்த புதர்களும் பாம்புப் புற்றுக்களும் உண்டு. 2 தோட்டக்காரர்கள் போட்டு சித்தியும் மாணவிகளும் கூட இருந்து "காட்டை அழித்து நாட்டையுண்

டாக்குவது'' போல, புதர்களையெல்லாம் அழித்து, பாம்புகளையடித்து, நல்ல செடிகளை வைத்துப் பயிராக்கி, பார்ப்பதற்கு ஒரு அழகிய தோட்டமாகச் செய்வதற்கு ஒரு வருஷத்துக்குமேலாயிற்று.

## ஏச்சுபேச்சும் பரிகாசமும்

ஆச்ரமத்திலிருந்துகட்டுபுஸ்தகங்களைத்தூக்கிக்கொண்டு பாடசாலைக்கு தினம் காலை மாலைகளில் போய்வருவது மாணவிகளுக்குச் சற்று கஷ்டமாயிருந்தது. மேலும், சாத்தானி தெரு, T. P. கோயில் தெரு வழியாக வரும்போது இரண்டு பக்கத்திலும் குடியிருப்பவர்கள் உள்ளே இருப்பவர்களையும் கைகளைத்தட்டிக் கூப்பிட்டு, தெருவோடு போகும் மாணவிகளைச் சுட்டிக்காட்டி வேடிக்கை பார்ப்பார்கள். ''நாங்கள் என்ன, கண்காட்சி மிருகங்களா, எங்களைப் பார்ப்பதில் என்ன வேடிக்கை'' என்று மாணவிகளுக்கு கோபம் வந்து என்னிடம் முறையிடுவார்கள். ''இந்தமாதிரி ஆச்ரமமும், மாணவிகள் படிப்பதும் புதிது, அதனால் ஆச்சரியத்தினால் பார்க்கின்றார்களேயன்றி பரிகாசமாகப் பார்க்கவில்லை. அதுவும் பழகிப்போன பிறகு, நின்றுவிடும்'' என்று சமாதானப்படுத்துவேன். பாடசாலையிலும் சில உபாத்தினிகள் வகுப்பில், Widows என்று குறிப்பிட்டுப் பேசுவார்கள். மென்மையான உணர்ச்சி வாய்ந்த சிறு பெண்கள் அழுதேவிடுவார்கள், இந்த பட்டப்பெயரைக்கேட்டு. ''இனிமேல் Widows என்று குறிப்பிடாமல் ஐஸ்ஹௌஸ் மாணவிகள் என்று குறிப்பிடவேண்டும்'' என்று மிஸ் பிரேஜரைக்கொண்டு உபாத்தினிகளுக்கு ஒரு அறிக்கை அனுப்பச்செய்தேன். அதற்கெல்லாம் எத்தனையோ ஏச்சுபேச்சு பரிகாசம். எல்லாம் காலக்கிரமத்தில் கொஞ்சங்கொஞ்சமாக அடங்கிற்று.

## 1915-ல் ஆச்ரம அபிவிருத்தி

1915-இல் அநேகம் பெண்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வகுப்புக்குத் தகுதியாயில்லாமையால், ஆச்ரமத்திலேயே ஒரு Preparatory ஆயத்த வகுப்பு ஆரம்பித்து 6 மாதம் 1 வருடம் அதில் படித்து, பிறகு முதல் பாரத்திலாவது சேரும்படியான தகுதியை யுண்டாக்குவது. அந்த வகுப்புக்கு மிஸஸ் காட்ப்ரீ (Mrs. Godfrey) என்பவள் அநேகம் வருஷங்கள் பொறுப்பான உபாத்தினியாயிருந்தாள். வருஷம் முழுவதும் வந்து சேர்ந்துகொண்டேயிருப்பார்கள். படிப்பிலும் பல படிகளாயிருப்பார்கள். 20 பேருக்குக் குறையாமலிருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருத்தியையும் கவனித்து அவளவளுக்கு ஏற்ற பாடத்தைக்கொடுத்து, பொறுமையாக அவர்களை முன்னுக்குக்கொண்டுவருவதில் சாமர்த்தியசாலி.

மேலும், சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை முதலான விடுமுறைநாட்களுக்கு பிரத்தியேகமான கால அட்டவணையுண்டு. பகலில் 1 மணிநேரம் அவரவர்கள் அறைகள் பெட்டிகளையெல்லாம் சுத்தம்செய்து உடுப்புக்களையெல்லாம் மடித்துவைத்து வண்ணானுக்குப் போடவேண்டிய துணிகளை தனியாக அதற்குள்ள கூடையில் போடவேண்டியது. ஒவ்வொரு சிறிய வகுப்பு மாணவியும் ஒவ்வொரு பெரிய வகுப்பு மாணவியின் பொறுப்பிலிருக்கவேண்டும். ஒரு பெரிய பெண் (ஸீனியர்) அவளுடைய ஜூனியரின் பெட்டி, படுக்கை, உடுப்பு இவற்றைக் கவனிப்பதுடன், 1 மணிநேரம் அவளுக்குப் பாடம் கற்பிக்கவேண்டும். சகோதரிகளைப்போல ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். இப்படியாக கூடியமட்டும் உயர்ந்த லக்ஷியங்களுடன் ஆச்ரமம் அபிவிருத்தியாகி வந்தது. 1915-ல் கோடைவிடுமுறையில் ஆச்ரமத்தில் ஆயத்தவகுப்புவழக்கம்போல்நடந்தது. (தொடரும்)

# தெய்விக இசையின் அத்புத சக்தி

வை. மு. ஸ்ரீ.

●

'புஷ்பம் பரிமளத்தோடே யலருமாபோலே, இசையோடே கூடப்பாடின' தமிழன்றோ நமது ஆழ்வார்களின் கவிப்பாவமுதம்! நம்மாழ்வாரே ஓரிடத்தில் (பலஸ்துதியில்) பாடியிருப்பதை வ்யாக்க்யாதா விளக்குகிறார்: "கானரூபமான அருளிச்செயல்களை ப்ரீதி பூர்வகமாகப் பாடி, இருந்தவிடத்திலிராதே ஆடி (ஹர்ஷத்தாலே ஸஸம்ப்ரம ந்ருத்தம் பண்ணி) ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு, அந்த ஸுலபனை ஸர்வேச்வரனின் திருவடிகளை வணங்கி அனுபவிக்கும்படி பாருங்கோள்!" என்று. மலரும் மணமும்போல் பாட்டும் இசையும், கண்ணனுக்கு அமுதமும் கறியுமென உகக்குமாம் இசையோடுகூடின கவிப்பா. இசையற்ற பாடல் மணமற்ற மலரைப் போன்றதே. தெய்விக இசையுடன்கூடின பாடல் 'செவிப்பால் நுழைந்து புக்கு, உள்ளத்துளே நின்று தித்திக்கும்' அத்புத சக்திவாய்ந்தது.

தெய்விக இசையின் அத்புத சக்தியை மூன்று சரித்திர திருஷ்டாந்தங்களைக்கொண்டு இங்கு விளக்குவோம். ஒவ்வொன்றிலும் வெவ்வேறான அம்சங்கள் விலக்ஷணமாகத் தெளிவாவதைக் காணலாம். சாதாரண லௌகிக ஸங்கீதத்திற்கும் உன்னத தெய்விக ஸங்கீதத்திற்கும், பாடும் தன்மையில் மட்டுமின்றி, பலனிலும் வித்தியாஸமுண்டு.

## 1. சோழ ராஜ ஸபையில்.

ஒரு சமயம் சோழராஜ ஸபைக்கு இரு காயகிகள் வந்து, தத்தம் ஸங்கீதத்தைக்கேட்டு மதிப்பிடுமாறு விண்ணப்பித்துக்கொண்டனர். ஒருத்தி ஜனரஞ்சகமான லௌகிக ஸங்கீதத்திலும், மற்றொருத்தி உன்னதமான தெய்விக ஸங்கீதத்திலும் தேர்ச்சி பெற்று இருந்தவள். மன்னன் சமஸ்தான வித்வான்களைக்கூட்டி, அவர்களது முன்னிலையில் இரு காயகிகளையும் பாடச்சொன்னான். முறையே இருவரும் பாடினர். மத்தியஸ்தர்களான ஸபாபண்டிதர்கள் லௌகிக ஸங்கீதத்தையே ச்லாகித்துத் தீர்ப்புக்கூறினர்; அரசனும் அவளுக்கே விசேஷ பஹுமானமளித்து கௌரவித்தான்.

தனது உன்னத இசையை ரஸிக்க சக்தியற்றவர்களாய் வித்வான்களிருப்பதைக் கண்டு மனம் முறிந்த மற்ற காயகி தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள்: "உண்மையில், உன்னத தெய்விக

இசை சாதாரண மானிடர்க்குரியதன்று; அது தேவர்களின் இசையானதால் தைவிகபுருஷர்களே அதை ரஸிக்கத் தகுதிவாய்ந்தவர்கள். இனி நான் இம்மானிடர்முன் பாடி அவ்வரிய கலையையும், என்னையும் இழிவு செய்யேன்'' என்று.

இந்த ஸங்கல்பத்துடன் புண்ய க்ஷேத்திர யாத்திரை செய்ய முற்பட்டு, ஒவ்வொரு திவ்யதேசத்திலும் பகவத்ஸந்நிதியில் தனது உயரிய கானத்தை அர்ப்பணிக்கலானாள். யாத்ரா மார்க்கத்தில் வீரநாராயணபுரத்தை அடைந்தபோது அவளுக்கு ப்ரமிப்பும் பூரிப்பும் ஏற்பட்டன. தனது உன்னத கலையை ரஸிக்கக்கூடிய ஒரு மகான் —தனக்கே குருவாகவும் இருக்கத்தகுந்த நிபுணர்— அங்கிருக்கக் கண்டாள்.

திவ்யப்பிரபந்த கவிப்பாவமுதை தெய்விக இசையோடு அமைத்து அனைவருள்ளத்திலும் புகும்படிச்செய்த ஞானச்ரேஷ்டர் நாதமுனிகள் அந்த காயகியின் உன்னத இசையைக் கேட்டு மகிழ்ந்து, கோயில் மரியாதைகளை அவளுக்கு வழங்கும்படிச்செய்து, விசேஷமாய்க் கௌரவித்தார். இதைவிட உயரிய மரியாதை அவளுக்குக் கிடைக்குமா? நாதமுனிகளின் திருவடிகளில் தலைவைத்து வணங்கி, நேரே சோழராஜஸபைக்குச் சென்றாள்.

பெருமிதத்துடன் இந்த அனுபவத்தை அரசனிடம் சொன்னாள்: "இந்த உலகிலும் எனது தெய்விக இசையை உள்ளபடி ரஸிக்கும் மகான் ஒருவர் இருக்கின்றார்!'' என்று. விவரங்களைக் கேட்டறிந்த மன்னன் உடனே ஸ்ரீ நாதமுனிகளைத் தக்க மரியாதைகளுடன் தனது சபைக்கு அழைத்து வரவேற்றான்.

"ஸ்வாமி! இந்த காயகி, தான் 'தெய்விக இசை' என்ற ஒருவித இசையில் நிபுணத்வம் வாய்ந்தவளாகத் தன்னைக் கூறிக்கொள்கிறாளே, அது உண்மைதானா? அவள் பாடுவதெல்லாம் எங்கள் காதுக்கு ரம்யமற்ற இசைக்கேடாகவல்லவோ இருக்கிறது!'' என்றான் ராஜன்.

"மகாராஜா! ரம்யமற்ற இசைக்கேடு இல்லவே இல்லை இவளது கானத்தில். இதை ப்ரத்யக்ஷமாக நிரூபிக்கவும் முடியும்'' என்றார் முனிகள்.

இரண்டு காயகிகளையும் பாடச் செய்தான் மன்னன். முன்போலவே சபையோர் லௌகிக காயகியையே மெச்சினார்கள். தெய்விக இசையின் உன்னத சங்கதிகள் நாதமுனிகள் ஒருவருக்கே அருமை பெருமை தோற்ற உள்ளபடி விளங்கின. தாரதம்ய நிர்ணயம் தெரியாது குழம்பிய மன்னன், முனிகளை நோக்கி, "ஸ்வாமி! தாங்களும் அந்த காயகியும் 'தெய்விக இசை' என்று விசேஷித்துக்கூறும் இசையின் மேன்மையை அறியமுடியவில்லை; விளங்கும்படித் தெளிவாக்கவேண்டும்'' என்று கோரினான்.

அரசனுக்கு இது விஷயமாகக் குழப்பம் மட்டுமின்றி அவநம்பிக்கையுமிருப்பதை அறிந்துகொண்ட நாதமுனிகள், இரண்டை

யும் போக்க முன்வந்தார். நன்ருய் த்வனிக்கும் தாளம் ஒன்றைக் கொண்டுவரச்செய்து, அதை ஒரு கருங்கல் தூண்மீது வைத்து விட்டு, தெய்விக இசை காயகியைப் பாடச்சொன்னர். பாட்டு முடிந்தபிறகு அந்த தாளத்தைத் தூணிலிருந்து அசைத்தெடுக்க முடியாததைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

அவள் தெய்விக இசையைப் பொழிந்துகொண்டிருந்த சமயம் அந்தக் கருங்கல்லும் கரைந்திளகியது; இசைநின்றதும் இளகின கல் இறுகவே, தாளமும் அதனுடன் பாகமாகவே பதிந்துவிட்டது! முனிகள் அவளைத் திரும்பவும் பாடச்செய்தார். மறுபடியும் கல் இளகவே, தாளத்தை சுலபமாக எடுக்கமுடிந்தது! "இதுதான் தெய்விக இசையின் மகத்வம்!" என்று விளக்கினர் யோகி.

## 2. ஸ்ரீ காஞ்சி வரதர் ஸந்நிதியில்.

கோரின வரமருளும் க்ருபாநிதி ஸ்ரீ வரதராஜரென்பது பிர ஸித்தம். ஆனல், அவர்கூட ஸ்ரீ ரங்கநாதனுக்கு ஒருசமயம் 'இல்லை' சொன்னதுண்டு: அது ராமாநுஜரிடமிருந்த ப்ரேமாதிசயத்தால், ப்ரீதி விசேஷத்தால். ஆளவந்தாரின் சிஷ்ய கோஷ்டிகளின் பிரார்த் தனைக்கிணங்கி ஸ்ரீரங்கநாதர், ராமாநுஜரை ஸ்ரீரங்கத்திற்கு அனுப் பும்படி ஸ்ரீ வரதரைக் கோரினர். அதற்கு வரதர், "நாம் எம் மையே எப்பொழுது துறக்கத் தீர்மானிக்கிறேமோ, அப்போது ராமாநுஜனை விட்டுப் பிரிவதுபற்றி யோசிப்போம்" என்று பதி லனுப்பினர்.

இத்தகைய பதிலைச் சிறிதும் எதிர்பார்க்காத அந்த மகான்கள் எப்படியாவது பிரார்த்தனைமூலமாவது, கெஞ்சிக்கோரி விண்ணப் பித்தாவது, தங்கள் இஷ்ட ஸித்தியை நிறைவேற்றிக் கொள்ள வேணுமென்று தீர்மானித்தவர்களாய் வரரங்க காயகரை யணுகி, "உம்மொருவரிடமே இது விஷயமாய் நம்பிக்கைகொண்டிருக் கிறேம்; உம்மால்தான் எங்களது மனேரதம் நிறைவேரவேணும். ஸ்ரீவரதர், தன்னை வரமருளும் மூகோல்லாஸ நிலைக்குக் கொண்டு வந்த எவரையும் ஏமாற்றத்திற் காளாக்கினதில்லை யென்பது பிர ஸித்தம். அவருக்கு உன்னத ஸங்கீதத்தில் அளவற்ற ப்ரேமை யுண்டு; அந்தக் கலையில் நிபுணரான நீர் எப்படியாவது அவரைத் தன்னைத்தான் மறக்கும்படிச் செய்து, ஸ்ரீராமாநுஜரை உமக்களிப் பதாக வாக்குக்கொடுக்கும்படியாகச் செய்துவிடவேண்டியது உமது பொறுப்பு" என்று பிரார்த்தித்தனர்.

"என்னல் முடிந்ததை முயற்சிக்கத் தட்டில்லை" என்று அடக்க மாகச் சொல்லிவிட்டு, வரரங்கர் ஸ்ரீரங்கநாதனின் அனுமதி பெற்று காஞ்சிக்குப் பயணமானர். அவரது வரவையறிந்து அவரது உறவினரான காஞ்சி வரதகாயகர் அவரை வரவேற்று உபசரித்தார். திருக்கச்சிநம்பியும் பக்தியுடன் உபசரித்து குசல ப்ரச்னம் பண்ணினர்.

திருக்கச்சிநம்பி வராங்கரை ஸ்ரீவரதர் ஸந்நிதிக்கு அழைத்துச் சென்றபோது ஸ்ரீராமாநுஜர் அங்கு வரதராஜ அஷ்டகத்தை அநுஸந்தானம் பண்ணிக்கொண்டிருந்தார். வராங்கர் ஸாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுக் கைகூப்பி நின்றதும் ஸ்ரீ வரதராஜர் அவருக்கு கோயில் மரியாதைகள் வழங்கப்படட்டுமென ஆக்ஞாபித்தார். அவ்வாறே நடக்க, அவர் அவைகளை ஏற்றதும், ஸ்ரீவரதர் மொழிந்தார்: "வராங்க! உம்மை இசையிலும் ந்ருத்யத்திலும் வல்லவரென்று சொல்கிறார்களே, நாம் கேட்டு மகிழக் கொஞ்சம் பாடுமே!" என்று.

"ப்ரபோ! தேவரீர் இங்ஙனம் மொழியும்படி அடியேன் என்ன பாக்யம் செய்தேனோ! இதோ பாடியாடி க்ருதார்த்தனாவேன்!" என்று அடிபணிந்து, வராங்கர் உடனே உள்ளமுருகப் பாடலானார். "என்னெஞ்சமேயான்" என்றாரம்பிக்கும் பாசுரத் தொகுதியைப்பாடவாரம்பித்து உணர்ச்சிக்கும் கருத்துக்கும் தக்கவாறு அபிநயித்து ந்ருத்யமும் செய்யலானார். ஸந்நிதியில் அனைவரும் மெய்ம்மறந்து, ஸ்ரீ வைகுந்தத்திலேயே நித்தியமுக்தர்களோடு பரமபதநாதன் முன்னிலையில் நிற்பதாகவே எண்ணினர்.

ஆனந்தபூரிதரான வரதபகவான், வராங்கருக்குத் தனது முத்துமாலையும், சரிகை உத்தரீயமும், வெண்குடை, இரு சாமரம் இத்யாதி பிருதுகளும் எல்லாம் அளிக்கப்படட்டும் என்று ஆக்ஞாபித்தார். எந்த மனிதச்ரேஷ்டனுக்கும் இப்பேர்ப்பட்ட மரியாதை ஆக்ஞாபிக்கப்பட்டதேயில்லை. எனினும் வராங்கர் இவையொன்றும் வேண்டாமென்று தலையசைத்து,

"அடிமையை ரொம்பவும் கௌரவிக்கிறீர், ப்ரபோ! இவ்வடிமைக்கு இவை யொன்றும் தேவையில்லை. கோரியவரத்தை அருள்வதில் நிகரற்ற தேவரீர் இவ்வடிமை ரொம்பவும் ஆசைப்படும் ஒரே வரத்தை அளித்தாதரிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு, மேலும் அதி ரஸமாய், உள்ளம் உருகப் பாடலானார்.

"வராங்க! என்னையும் எனது மஹிஷிகளையும் தவிர எதை வேணுமானாலும் கேட்கலாம்" என்று கோஷித்தார் பிரபு. உடனே வராங்கர் ராமாநுஜரைக் காண்பித்து, "ப்ரபோ! இவரை என்னுடன் அழைத்துச்செல்ல அனுமதிக்கும்படிப் பிரார்த்திக்கிறேன்" என்று வணக்கத்துடன் விண்ணப்பித்துக்கொண்டார்.

"நான் சற்றும் எதிர்பாராதபடி என்னைக் கட்டுப்படுத்தி விட்டாயே! இதுபற்றி நான் முன்பே யோசித்திருக்கவேணும்; இது தவிர வேறெதாவது கேள்!"

"சொன்ன சொல் தவறியதாக தேவரைப்பற்றி ஒருபோதும் சொல்ல நேரிடலாகாது. தேவரீர் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியாகத் திருவவதரித்தபோதும் இதுதானே தேவரது கொள்கையாயிருந்தது!"

"எனது வரம்தானிருக்கிறதே, அதன்படி ஏன் இன்னும் ராமாநுஜரை அழைத்துச்செல்லாது தாமதிக்கிறீர்?" என்றார் ஸ்ரீ

பகவான்! இதுதான் சரியான தருணம், நழுவவிடலாகாது என்று உணர்ந்த வாரங்கர் ஸ்ரீராமாநுஜரைத் தன்னுடன் அழைத்துச் சென்று எல்லோரது மனோரதத்தையும் பூர்த்திசெய்தார். தெய்வங்களுக்குள் பரதெய்வமாகிய ஸ்ரீபகவானையே கட்டுப்படுத்தின தெய்விக இசையின் அத்புத சக்தியை என்னென்பது! உன்னத இசைக்கு மகோன்னத பலனே கிடைத்தது; 'இல்லை' என்றது 'உண்டு' ஆயிற்று!

## 3. விண்ணோர் தொழும் வேங்கடத்தில்.

வெங்கடேசப்பெருமான் தனது பக்தனை தொண்டமான் சக்கரவர்த்திக்குத் தனது திவ்யாயுதங்களான சங்கசக்கரங்களை யளித்திருந்ததும், ஸ்ரீராமாநுஜர் காலத்தில் தான் மீண்டும் அவைகளை ஸ்வீகரித்தாரென்பதும் பிரஸித்தம். அதேபோல் ராமாநுஜர், ஸ்ரீ வெங்கடேசனின் திருமார்பில் ஸ்ரீமஹாலக்ஷ்மியைச் சாற்றினதால் அவருக்கு "பகவானின் மாமனார்" என்ற பெயரேற்பட்டதும் எல்லோருமறிந்ததே.

உடையவர், அர்ச்சகரை ஸ்ரீவெங்கடேசனைக்கேட்டுத்தனக்குத் தனது களிமண்கூடு பொடியானதும் அவனது அருகில் இடம் உண்டா என்று விசாரித்துச் செல்லும்படிப் பிரார்த்தித்தார்.

"கட்டாயம் உண்டு; என்னுடன்கூட பரமபதத்தில் உட்காருவார்; அதைப்பற்றி நான் மகிழ்வேன்" என்று பதிலுரைத்தார் பகவான், அர்ச்சகமுகேன.

"என்னைவிட அருகிலில்லையே? எனக்குத் தானே உமக்குப் பக்கத்தில் இடம்! என் கைங்கர்யத்தால் உமக்கடுத்தபடியான இடம் எனக்கு உரித்தாகிவிட்டதல்லவா?" என்று வினவினன் தாழப்பாக்கம் சின்னையா என்ற பக்தன். அவன் தினமும் ஸதா ஸர்வதா பகவத்புகழைப் பாடுவதிலேயே ஈடுபட்ட காயகன், ஸந்நிதியில் பாடிக்கொண்டேயிருப்பான்; பகவானும் உபசரணையாக ஆடிக்கொண்டே யிருப்பார். அவனது தெய்விக இசைக்கு தேவதேவனே அநுசரணையாக் ஆடிவருவதால் அவன் தனக்கு வைகுந்தத்தில் பகவானுக்குப் பக்கத்திலேயே இடமுண்டென்றே திண்ணமாயிருந்தான்.

அவனது கேள்வியைக்கேட்ட பகவான், "ஹூம்! உனக்கா?... யாரோ உன்னை மந்திரித்து விடுகிறுப்போல் தெரிகிறது. அட மந்த புத்தியே! நான் உனக்குக் கடமைப்பட்டவனில்லை. அவ்வப்போது நமது கணக்கை நான் சரித்தட்டிக்கொண்டு வந்திருக்கிறேனே மிகஜாக்கிரதையாக, நீ கவனிக்கவில்லையா? பாக்கி எதுவுமேயில்லை, நான் செலுத்தவேண்டிய தொன்றுமில்லை" என்றார்.

உள்ளம் முறிந்த சின்னையா, பேசுவதென்னவென்றறியாது விம்மியவாறு, "பிரபோ! தயாநிதே! நான் இரவு பகலாய் அநுதினமும் இத்தனை வருடங்கள் பாடி உமக்குக் கைங்கர்யம் செய்யவில்லையா?" என்று வினவினன்.

"மைந்தா! உண்மை,; ஆனால், நான் அவ்வப்போது ஆடினேனே, மறந்துவிட்டாயா?" என்றார் பகவான்.

"துக்கம் தாங்கவில்லையே! நான் அழிந்தேன், ஒழிந்தேன்" என்று கதறினன்.

"அப்படி இல்லை, குழந்தாய்! இதோ இந்த சந்நியாசியால் தான் உன் கண்திறந்தது; அவரது திருவடிகளில் ஆச்ரயி. அவரிடம் முடியாததென்பதெதுவுமில்லை" என்று தேற்றினர் லோக பிதா.

## பண்ணிசையும் பண்பாடும்

ஆக இம்மூன்று சரித்திரங்களிலும் பண்ணிசை பாடுபவர்களின் இதயப் பண்பாட்டிற்கு எவ்வளவு பிராதான்யம் உண்டென்பது தெளிவாயிற்று. கர்வமும் சுயநலமுமற்ற காயகியின் தெய்விகஇசை கல்லையும் உருக்கிற்று, முனியையும் மகிழ்வித்தது. அதேபோல் தன்னலங்கருதாது ஸ்ரீவைஷ்ணவ உலகுக்காகவே வரம் கோரிய ஸ்ரீவாரங்க காயகரின் தெய்விகஇசை ஸ்ரீவரதராஜரையே கட்டுப்படுத்தியது. தாழப்பாக்கம் சின்னையாவின் பக்தி பூர்வகமான தெய்விகஇசை பகவானை அதையநுசரித்து ஆடச்செய்தது; ஆனால் பலனில் இச்சையோடு செய்யப்பட்ட கான கைங்கர்யமானதால் மோக்ஷ ஹேதுவாக அது அமையாதென்பதை பகவானே எடுத்துக்காட்டி, உடையவரை ஆச்ரயிக்கச்சொன்னர்.

பாடும் தன்மைக்கும், பாடுபவரின் பண்புக்கும் தகுந்தவாறே பலனும் அமையும். அதேபோல், ஸங்கீதத்தின் தன்மைக்குத் தகுந்தவாறே அதன் விஷயம் அமையும். தெய்விக இசையில்தான் உன்னத, புனித விஷயங்களை நன்கு வெளியிட்டமைக்கமுடியுமென்றுணர்ந்தே நாதமுனிகள் நாலாயிரத்தையும் தெய்வப் பண்—இசையாக அமைத்தருளினர். பகவத் ஆக்ஞையால், பகவத் கைங்கர்யரூபமாகச் செய்யப்பட்ட இவ்விசையமைப்பு நாடெங்கும் நாள்தோறும் ஒலித்து பகவானுக்கு அளவற்ற ஆனந்தத்தையளிக்கின்றது. பகவானது முகமலர்த்தியே நமக்கு முக்யம்; அதற்கு தெய்விகஇசையே ஸாதனம்.

●

---

சிதறிய பழமொழி — வை. மு. கோ.

## 3. "மருமகனுக்கு என்று செய்ததை மகனுக்கிட்டு வயிறெரிந்தாளாம்!"

லக்ஷ்மி:—பார்வதி! என்னம்மா அத்தனை வியப்புடன் அந்தம்மாளைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாயே! என்ன விசேஷம்?

பார்வதி:—விசேஷமில்லாமல் நிற்பேனா! இன்று என் ஆப்த சினேகிதையை சாப்பிடக்கூப்பிட்டிருந்தேன். இன்னும் சிலரையும் அழைத்திருந்தேன். முக்யமாய் நான் எதிர்பார்த்த சிநேகிதைக்கு திடீரென்று ஜுரம் வந்துவிட்டதால் அவள் வரவில்லை. மற்றவர்கள் வந்து நன்றாகத்தான் சாப்பிட்டார்கள். ஆனால், அது என் மனதிற்கு த்ருப்தியே உண்டாகவில்லை. ஏதோ பழமொழி சொல்வா

பாரு, "மருமகனுக்குசெய்த பண்டத்தை மகனுக்குஇட்டு வயிறெரிந்தாளாம்" என்று, அதேபோலத்தான் இன்று என் கதியாகிவிட்டது. அதோ போகும் மனுஷி, தான் சாப்பிட்டதுடன் நிற்காமல் வீட்டுக்குவேறு கட்டிக்கொண்டுபோனுள். அதைத்தான் நான் இன்னும் வியப்புடன் பார்க்கிறேன்.

லக்ஷ்மி:—(கடகடவென்று சிரித்தபடியே) ஸரஸ்வதி! மருமகனுக்கு என்று செய்த பண்டத்தை எந்தத்தாயாரும் மகனுக்குஇட்டு சந்தோஷப்படுவாளா, வயிறுஎரிந்து துடிப்பாளா? இதென்ன பழமொழி? பார்வதி சொல்வது சரியானதுதானு? நீ இதற்குச் சரியான அர்த்தம் சொல்கிருயா?...

ஸரஸ்வதி:—அதென்ன பழமொழியோ! புதுமொழியோம்மா! உலகத்தில் மக்கள்வாயில் அடிபட்டு உலாவிவிடுவதால் அதற்கு ஒரு உண்மை, சிதறிய பதத்திலும் உண்டாகிவிடுகிறது. சிலதாய்மார்கள் மகனைவிட மருமகனை உயர்வாகக் கருதுவதையும் நாம் பார்க்கும்போது இந்த பழமொழி சரியானதுதான் என்று தோன்றுகிறது. இதற்கு வேறு எப்படிப் பொருள்இருக்கிறது சொல்லு பார்க்கலாம்.?

லக்ஷ்மி:—காமாலைக்கண்ணனுக்கு எதைப்பார்த்தாலும் மஞ்சளாகத் தெரிவதுபோல் சிதறியபழமொழிக்கு அதே ஸ்வரூபத்தில் பார்த்தால் அப்படித்தான் தெரியும். இந்த பழமொழியின் உண்மைப் பதம் எது தெரியுமா? மருமகனுக்கு என்று மரியாதையுடன் மாமியார் விருந்துசெய்வது உலகவழக்கம். தினப்படியில் நாம் ஏன் அனுவச்யமாய் விருந்துசமயல் செய்யப்போகிறோம்? மருமகன் சம்மந்தி என்றால் அது தனித்த மரியாதையல்லவா! அப்படி மரியாதையாயும் அன்பாயும் நாம் சமைத்தால்கூட அவர்கள் என்னமோ சங்கோஜத்தைவிட்டு தாராளமாகச் சாப்பிடமாட்டார்கள். மாமியார்வீடு, சம்மந்திவீடு, என்கிற சங்கோஜம் ஒருபுறம், கவுரவம் ஒருபுறம், இன்னும் எத்தனையோவித உணர்ச்சியில் சரியாகப் புசிக்கமாட்டார்கள்.

மருமகப்பிள்ளையுடன் தன்மகனையும் சேர்த்து உட்காரவைத்துப் பரிமாறும் தாயார், "மருமகனுக்குச் செய்ததை மகனுக்கிட்டு வயிறு அறிந்தாள்" என்பதுதான் சரியானது. மகனுக்குச் சாதாரணமாக தினப்படியில் ஏதோ செய்து ஏதோ பரிமாறி அனுப்புவதையும் வயிறுநிறையப் போடுவதையும் மட்டும் கவனிக்கும் தாயார், இந்த விருந்தில் இன்னின்ன பதார்த்தங்கள் நம்மகனுக்கு அதிகமாகப் பிடிக்கிறது; இன்னின்ன பலகாரங்களை அதிக ருசியுடன் சாப்பிடுகிறான்; இனி இப்படியே இவைகளை நாம்செய்து பரிமாறவேண்டும். மருமகன் சங்கோஜத்துடன் சாப்பிட்டான்; மகன் சுதந்திரத்துடன் தாராளமாகச் சாப்பிட்டான்...என்ற தத்துவத்தை உணர்ச்சியைப் பெற்ற தாய் அறிந்துகொள்கிறாள். விஷயம் இவ்வளவுதான். மருமகனுக்கு என்று செய்ததை மகனுக்கிட்டு வயிறறிந்தாள் —இஷ்டத்தை அறிந்தாள் —புரிந்ததா?...

பார்வதி:—அடாடாடா!... வயிறு அறிந்தாள் என்பதையா வயிறு எரிந்தாள் என்று விபரீதமாகப்பேசுகிறார்கள்? பேஷ்! இப்போது புரிந்தது லக்ஷ்மீ!...

ஸ்ரீமதி மங்கா

# "இவ்வளவுதானா?"

என்னுடைய ஆப்த நேசி ஒரு ஆங்கிலேயப் பெண். பேட்ருஷியா என்னும் பெயர்கொண்ட அவள் மிகவும் குணம் வாய்ந்தவள். என்னைக் கண்டால் சிரிப்பின் ஒலி எங்கும் பரவ, விரைவில் ஓடி வருவான் என்னுடன் பேச. அரைகுறையாக எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தை அவளிடம் உளறிக்கொட்டிக்கிளறிமூடுவேன் நான். அவளும் என் உச்சரிப்புப் பிழைகளைக் கண்டு சிரிக்காமல், தனக்கும் தமிழ் தெரியும் என்று கூறி, ஆங்கிலத்தைப்போல தமிழைப் பேசுவாள். நான் ஆங்கிலத்தை தமிழைப்போல பாட்டிமார்கள்மாதிரி நீட்டி, கூட்டிப்பேசி, எப்படியோ கருத்து விளங்கும்படி அவளுக்கு விளக்கிவிடுவேன்.

நாளடைவில் எங்கள் நட்பு வளர, அவள் ஒரு நாள் நமது இந்திய மண வாழ்க்கையைப் பற்றி என்னை வினவினாள். நம்மையும் மதித்து நம் நாட்டின் முக்கிய விஷயத்தைச் சொல்லச் சொன்னாளே என்று எனக்கு பித்து தலைக்கேறியது. அதனால் என்ன பேசுகிறோம் என்று கவனியாமல், நான் ஸ்வாரஸ்யமாக ஆங்கிலமும் தமிழும் கலந்த சொற்பொழிவில் இறங்கிவிட்டேன். அருகில் வேறு எவரும் இல்லாதபடியால், என்னைத் திருத்துவாரும் இல்லை; கண்டனம் செய்வாரும் இல்லையென்றதால் தைரியம் பிறந்தது. தவிர அந்த ஆங்கிலேயப் பெண் எதை நான் கூறினாலும் நம்புகிறவளே. ஆகையால் உற்சாகத்துடன் பேசலானேன்.

நான்:—"எங்களில் கல்யாணம் என்றால் மனதானது இந்த 'மணம்' என்பதற்கு ப்ராஸமான (Rhyming word ஆன) 'பணம்' என்பதின் மேல்தான் போகும். பணம் உண்டானால் மணம் உண்டு. 'பணத்திற்கு மணமா அல்லது மணத்திற்குப் பணமா' என்று சந்தேகம் தோன்றலாம். அந்த சந்தேகம் எனக்கும் உண்டு. அதைத் தீர்ப்பவர்தான் இல்லை.

இரண்டாவதாக, பணவிஷயம் திருப்தியாய்விட்டால், பெரியோர்களின் அந்தஸ்து நிலைமை ஒத்திருக்கிறதாவென்று பெண்வீட்டுக்காரரும் பிள்ளைவீட்டுக்காரரும் ஆராய்ந்தறிவார்கள்.

இதுவும் சரியாகிவிட்டாலோ, தெருக்கோடியிலிருக்கும் மகா கீர்த்தி பெற்ற 'சித்தி விநாயகம்' ஜோஸ்ய சிகாமணிகளைப் பார்த்து அவர் ஆசீர்வாதத்தைக் கேட்பார்கள். தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், தக்ஷிணை எல்லாம் ஜோஸ்யரின் மனதை உற்சாகமூட்டும். ஜோஸ்யர்வாளின் மனைவி பின்கட்டிலிருந்து எட்டிஎட்டிப் பார்த்துக்கொண்டு, 'கணவர் நல்வாக்கு கூறினால் நல்ல சன்மானம் கிடைக்குமே!' என்று நினைத்து, கணவர் புத்தி சரியாக இருக்க வேண்டுவாள்.

ஜோஸ்ய சிகாமணிகளும் தன்முகத்தை சாஸ்திர ஆராய்ச்சிக்காரரின் முகத்தைப்போல வைத்துக்கொண்டு ஜாதகக் கடிதாசியின்மேல் கண்களை நெட்டுவித்துவிடுவார் பாவம், ஜோஸ்யர். உச்சமடைந்த சுக்ரன் ஒரு ஜாதகனுக்கு உச்சிவேளையில் உணவுகூட உட்கொள்ள விடாமல் தவிக்கவிடுவதையும், அதே உச்ச சுக்ரன் ஒருவனுக்கு இந்திர போகத்தைக் கொடுப்பதையும் கண்டுள்ளார் ஜோஸ்யர். இந்த இரண்டுவித உச்ச சுக்ரனில், தற்போது வந்த ஜாதகம் எதைச் சேர்ந்தது என்பதை அறிய அவர் கடவுளா என்ன? இல்லை; ஆனால், தன்னை கடவுளின் செக்ரிடரி என்ற தோரணையில் சிகாமணிகள் தன் கைவிரல்களை நீட்டிக்கொண்டும், மடக்கிக்கொண்டும், மனக்கணக்கு ஒன்று போட்டவாறும் பலன் கூறப் பிரவேசிப்பார்.

ஒன்றன்பின் ஒன்ருக நவக்ரகங்களின் பெயர்கள் எல்லாம் வெளி வரும். அவைகளின் குணவிஷேஷங்களைப் பற்றி விஸ்தரிப்பார். முதலில் தோஷம் உண்டு என்று கூறி, பிறகு பரிகாரம் ஒன்று சொல்லி, கடைசியாக அந்த பிள்ளைக்கென்றே அந்த பெண் பிறந்திருப்பதாக ஜாதகங்கள் பளிச்சென்று காட்டுவதாகவும் கூறி, வெற்றிப் புன்னகை பூப்பார் கனபாடிகள்! வந்தவர்கள் நமஸ்காரங்களையும் இரட்டிப்பு தக்ஷிணையையும் அளித்துவிட்டு உவப்புடன் வீடு திரும்புவார்கள்.

ஆக, மணத்திற்கு, பணம், பெற்ருேர் அந்தஸ்து, ஜோஸ்யர் வாக்கு என்றனவெல்லாம் கூடி வந்துவிட்டன. உடனே பத்ரிகை கொடுக்க வேண்டியதும், மேளங்கொட்டுவதும் மணம் முடிப்பதும் வெகுவெகு விமரிசையாக நடந்தேறிவிடும்.

பிறகு இந்த வெற்றிகரமான செய்தியை விசாரிக்க வருவோரிடம் பெருமை பாராட்டிக்கொள்ள வேண்டியதுதான். அதற்கும் பிறகு, குழந்தைகள் வருஷத்துக்கு ஒன்று வீதம் பிறப்பதும், பிறந்த நாள் கொண்டாடுவதும், அப்போது உங்களைப்போலுள்ளவர்களை என்னைப் போலுள்ளவர்கள் கூப்பிடுவதும், நீங்கள் வருவதும்தான் தெரிந்தவிஷயம்" என்று மூச்சுவிடாமல் கூறினேன்.

ஆச்சரியச் சிரிப்புடன் அந்த ஆங்கிலப்பெண் வினவினள், "இதுவா உங்கள் நாகரிகம்?'

நான் பதிலளித்தேன்:—"மிஸ். பெட்ருஷியா! இதற்கென்ன குறை? நல்ல நாகரீகந்தான்! நல்லநல்ல ஜரிகைப்புடவைகளுண்டு; மணத்தின்போது நல்லநல்ல நகையுண்டு. (நகை என்னும் சிரிப்பு இல்லை!) நல்ல நல்ல சாப்பாடு உண்டு, வீடு உண்டு, வாசல் உண்டு, பிறகு "அப்பாவாச்சு, அம்மாவாச்சு, பாப்பாவாச்சு" என்ற விஷயம் உங்களுக்குத் தெரியும். இன்னும் பாக்கி சுகம் என்ன கிடக்கு?"

மிஸ் பெட்நஷியா:—ஓ! இதென்ன விசித்ரம்! உங்களில் ஓர் ஆண் பிள்ளை ஓர் பெண்பிள்ளையே கண்டு, நேஸம்வைத்து பிறகு கலியாணம் ஸெய்வது கிடையாதா? நான் கேளுக்கிறேன்?"

நான்:—"அதுவா?–காதல் கல்யாணம்; அது கிடையவே கிடையாது. அப்படிச்செய்தால் எங்கள் சமூகம் மறைந்துபோய்விடும். பிறகு நாங்களும் மறைந்துபோய்விடுவோம்."

ஆங்கிலப்பெண்;—"அது எப்படி? நீங்கள் நல்ல அறிவுடன் இருக்கையில், உங்களுக்குத் தெரியாமல் சமூகம் எங்கே ஓடிபோய்விடும்?

நான்:—"இதுமட்டுமா? இன்னும் சொல்லட்டுமா? நல்ல அழகான ஒரு பையனுக்கு, கருப்பான பெண்ணை, அவன் வேண்டாம் என்றபோதிலும், அவனுக்கே அவளை மணம் செய்வித்துவிடுவார்கள். அந்த மணமகன், "அம்மா! எனக்குப் பிடித்தமாயில்லையே! வேறு அழகான பெண்ணே கிடைக்கமாட்டாளா?" என்று கேட்டாலும் அவன் தாய் கூறுவாள், "பெண்டாட்டிக்கு அழகு எதற்கடா? நீ ஆபிஸிலிருந்து வந்தால் காபி கொடுப்பாள். ராத்திரியும் பகலும் சமைச்சுப்போடுவாள். அழகு இருந்தால்கூட, பிள்ளையும் குட்டியும் பெற்ருல், அழகு போகப் போகிறது. பெண்டாட்டிக்கு அழகு எதற்கு? பணக்கார இடம். பேசாமல் பண்ணிக்கொள். இன்னொரு பையனுகவிருந்தால், 'கண்டேன். கண்டேன் !!!' என்று பண்ணிக்கொள்வான்...காலேஜில் ப்ரொபஸர்களிடம் சவால் கொடுக்கும் அதே கெட்டிக்காரப் பையன், 'ஹிருதயம்' என்று தனக்கும் ஒன்று உண்டு என்பதைக் கூற பயப்பட்டும், வெட்கியும் நிற்பான்! அதே பயம் அவனை வென்று, பிறகு மனப்பொருத்தம் இல்லா மணத்திற்கும், இன்பம் இல்லா இல்வாழ்க்கைக்கும் அதிகாரி

யாக்கிவிடும். ஏன் இப்படி நேரிட்டது என்று அவன் நண்பர்கள் கேட்டால், பச்சைக்குழந்தைபோல அவனும் வெட்கப்படாமல், "அம்மா சொன்னாள்; நான் மணந்தேன்!" என்று கூறுவான். முடிவில் இவனையே நம்பிய மனைவியும் ஏங்குவாள். அவளிடம் கடுகளவு பற்றுதலையும் காட்டச் சக்தியற்ற இவனும் அவதிப்படுவான்."

இதுபோலவே, கல்விச்செல்வம் படைத்த பெண்ணை மணக்க விரும்பும் மணமகனை நோக்கி தாய் தந்தையர் கூறுவது இது:—"படித்த பெண்டாட்டி எதற்கடா? குஞ்சாலாடு செய்யத்தெரியணும். படிச்சுவிட்டு சம்பாதிக்கப்போறாளா என்ன?" இதைக்கேட்ட மணமகனும் குடும்ப வழக்கத்திற்கு மாறுதலை விளைவிக்கத் தயக்கமுற்று, 'தாய்சொல் மிக்க மந்திரமில்லை' என நடந்துகொள்ளுவான். தவிர, கல்வியை விரும்பாதவனுக்கு சூழ்வினையின் பயனாக படித்தபெண்ணைக் கட்டிவிட்டு, அவர்கள் புரியும் வாழ்க்கை-சதிரைக் கண்டு வியப்பார்கள்.

இப்படியாக, அழகுக்கும் குரூபிக்கும், மடமைக்கும் ஞானத்திற்கும், சங்கீதத்திற்கும் அபஸ்வரத்திற்கும, பொறுமைக்கும் அதிகோபிக்கும், நெட்டைக்கும், குட்டைக்கும், பலத்துக்கும், பலவீனத்திற்கும், மதிக்கும மதியீனத்துக்கும், மொண்டிக்கும் நொண்டிக்கும், சப்பைக்கும், தொப்பைக்கும், குணத்துக்கும் குணமின்மைக்கும், அமைதிக்கும் அவசரத்திற்கும், ராஜஸத்துக்கும் தாமஸத்துக்கும்—அதாவது இப்படிவாய்ந்த ஆண் பெண் இருவருக்கும் 'மஞ்சள் கயிறு' என்ற சுபகரமான பந்தத்தைக் கட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள்: பார்ப்பவர்களுக்கு பொழுது போக்கான கொண்டாட்டம்.

ஏன்? சில வேளைகளில், நாயும் பூனையும்போல தம்பதிகள் அமைந்துவிட்டால், இப்படியும் அப்படியும ஓட, அந்த மஞ்சள் கயிறு-Magic கயிறு, இவர்களோடு கூடக்கூட ஓடி, இவர்களை ஒரே ஸ்தானத்தில் வலுத்து வலுத்து இழுக்கும். அது அவர்களைக் கூட்டிவைத்து இழுக்க இழுக்க, அவர்கள் அலறி ஓடஓட பார்ப்பதற்கு விசித்ரக் காட்சி யளிக்கும். ஒரு புறம் நாய் ஓடிக் குரைக்க, மற்றொருபுறம் பூனை உறுமிக் கத்த, உடனே இருவரையும் எலக்டிரிக் ஸ்விட்ச் மாதிரி மஞ்சள்கயிறு ஒரே இடத்தில் நிற்கவைக்கும். கட்டுண்ட தம்பதிகளுக்குத் திண்டாட்டம். பார்ப்பவர்களுக்கு விநோதம்.

மற்றொருவிதம் எப்படி என்றால், எலிபோலப் பயந்து பயந்து பதுங்கி ஓடும் மனைவிகளைப் பூனைபோல புருஷர்கள் ஆட்டிவைப்பதும் வேடிக்கைக் காட்சியளிக்கும். எலிமனைவியோ ஓடுவாள், பூனைபுருஷனோ பின்னால் பாய்ந்துஓடுவான். ஆக, இதற்கெல்லாம் காதல் வந்து நிற்க அவசியம் எங்கிருக்கிறது?" என்று கேட்டேன் நான்.

மிஸ் பெட்ருஷியா; "மணம் செய்வித்த புதியதில்கூட அவர்களிடையே விளையாட்டு கிடையாதா?"

நான்:--"ஓ! உண்டு; கணவனைக்கண்டால் பேயைக் கண்டமாதிரி ஓடுவது, கேள்வி கேட்டால் பதில் கூறாது தலைகுனிய நிற்பது, கையைப்பிடித்தால், அலறி அடித்துக்கொண்டு நகர்வது... இதுதான் மணத்தின் நோக்கம்-அதாவது நாணம். மணத்திற்குமுன்பு வேண்டுவது அதற்குப் பிராஸமான பணம்! மணத்திற்கு பின்புவேண்டியது அதற்குப் பிராஸமான


| ஜகன்மோகினி | இந்தியா, ஸிலோன். | பர்மா. | வெளிநாடு. |
|---|---|---|---|
| தனிப்பிரதி | அணா 4. | 0—4—6. | 0—5—0 |
| வருடச் சந்தா | 3-0-0. | 3-8-0. | 3-12-0. |

நாணம் தெரிஞ்சுதா? நாணந்தான் குணம். ஆக, பணம், மணம, நாணம். குணம், பிறகுதான் தெரிந்திருக்கே, பிணம்!

காதல்! அதன் நிறம் கருப்பா என்பதையும், வெளுப்பா என்பதையும் அறியார் எங்கள் மக்கள். மூன்பெல்லாம் அவர்கள் காதல் என்ருலே, காதில் என்னவோவென்று நினைத்து, அதை காதாலும் கேட்கார். இப்போது காதல் நாவல்களைப் படித்தும், சினிமாக் காதலைப் பார்த்தும் உடைகளில் மட்டும் முன்னேறியிருக்கிறேம்.

வெளியிலே, பார்ப்பதற்கு காலில் செருப்பு, கையில் வாட்சு, கண்ணுக்கும் மூக்குக்கும் சேர்ந்து மூக்குக்கண்ணாடி, பின்னலுக்கு கொச்சு, முகத்துக்கு பவுடர், பாடி, ப்ரில்வைத்த ரவிக்கை, பூ போட்ட புடவை—இவை "நாகரீகம்" என்று தெரிந்துள்ளோம். ஆனால், உள்ளுக்குள்ளே, வம்புப் பேச்சும், சாணி ததும்பும் அடுப்பங்கரையும், சுகாதார மற்ற விடுதியும் இன்னும் பல பழய வாசனைகளையும் அப்படியேவைத்துக் காட்டுகிறேம்!

இத்தகைய நாகரீகத்துக்குக் குறைவு உண்டா? எங்கள் மண முறைக்கும் குறை உண்டா? Birth-Rate-ல் (ஜனப்பெருக்கில்) இந்தியா முதற் பரிசு பெறுவதை நீங்களே அறியீர்களோ? மணத்தின் நோக்கம், குழந்தைகள். நாகரீகத்தின் நோக்கம் (Dress) அலங்காரஉடை. இல்லையா?

மிஸ் பெட்நஷியா "(I See!) ஓ—அப்படியா!" என்ருள். அன்று இருவரும் விடைபெற்றுச் சென்றேம். அடுத்த இதழில் மணவாழ்க்கையை அவர்கள் எப்படி நினைக்கிருர்கள் என்பதைக் கூறுகிறேன்.

---


# குஷ்டம் ★ வெண் குஷ்டம்

## LEPROSY ★ LEUCODERMA.

இலவச பரீட்சை, சிகிச்சை செய்யப்படும்.

கடிதங்கள் உடனே கவனிக்கப்படவேண்டுமானல் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்களை புரிந்துகொள்ள முடியாது. அதனல் அவை திருப்பி அனுப்பப்படும்.

தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஆப்பிரிக்காவிலிருந்து பிஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & Co., (Regd)

GOPALAPURAM. (E. G. Dt.) — TANUKU, M. S. M.

## 9

“சர்மா மறுவிவாகம் செய்துகொண்டிருக்கிறாராமே! என்ன ஆச்சர்யம்! தலைக்கு மிஞ்சிய பெண்ணும் பிள்ளையும் இருக்கையில், தானா விவாகம் செய்துகொண்டார்? லக்ஷணமாய் ஒருபெண்ணைத் தேடி மகனுக்கு விவாகத்தைச் செய்துவைத்து, க்ருகலக்ஷ்மியைக் கொண்டுவந்து குடும்பத்திற்கு ஆதாரவும் சவுரவமும் தேடிவைக்காமல் சின்ன குழந்தையைப்போல் தான் விவாகம் செய்துகொண்டு வெட்கமில்லாமல் உலாவுகிறாரே!” என்று அக்கம்பக்கம் உள்ளவர்கள் கும்பல்கூடிக்கூடிப் பேசிக்கொண்டார்கள். நேரில் சென்று சிலர் கல்யாணம் விசாரிக்கவேண்டும் என்று ஆசை கொண்டார்கள். சிலர் போவதற்குப் பயந்தார்கள்.

சில துணிந்த மனிதர்களுக்கு, எதற்கும் அஞ்சாமல் நினைத்ததை முடிப்பதுதான் அவர்களது ஜென்மசார்த்தகம்; அந்த முறையில் சர்மாவின் எதிர்வீட்டுக்காரர்களில் ஒருவர் ஏதோ கர்மச்ரத்தையுடன் தடதடவென்று சர்மாவீட்டிற்கு வந்து “என்ன சர்மாஜீ! சந்தோஷ சமாசாரம் கேள்விப்பட்டேன். பகு த்ருப்தி பகு த்ருப்தி! ‘தம்பதிகளாகமுதல்முதல் மங்களகரமாய் வரும்போது ஒரு மஞ்சநீர் சுற்றாமல் வருவார்களா? எங்களிடம் சொல்லக் கூடாதா?’ என்று என்தாயாரும் சம்சாரமும் அங்கலாய்க்கிறார்கள். ஏன்! தேவகியாவது வந்து சொல்லியிருக்கலாமே?...உமக்கு வேண்டுமானால் நான்காம் கல்யாணம்; அந்தப் பெண்ணுக்கு இது தானே சார் முதல்கல்யாணம். அவர்களுக்குச் சுபமாகச் செய்யவேண்டாமோ?” என்று கேட்கும்போது சர்மாவின் சரீரமே சற்று படபடத்தது.

கதவுக்கு உள்ளே இருக்கும் கலாவதிக்கு, “நான் நான்காம் மனைவியா!” என்ற அதிர்ச்சி ஒரு ஷாக்கடித்ததுபோல் துள்ளச் செய்தது. “அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்கும் வீட்டிலிருப்பவர்களுக்கும்கூடத் தெரியாமல் இவர் விவாகத்தைச் செய்துகொண்டதுமின்றித் தன் மக்களையே இப்படித் தலைகால்தெரியாமல் அடித்து உபத்திரவிக்கும் மனிதரின் சுபாவம் எப்படி இருக்கும்?” என்று நினைக்கும்போது இரும்புப்பெட்டியில் சற்றுமுன்பு பார்த்த அத்தனை நோட்டுக்களும் அப்போது கொடுத்த இன்பம் இப்போது சற்று மனத்தைவிட்டு நழுவுவதாகவே தோன்றியது.

சொத்துக்கதிகாரி மலைபோல் பெண்ணும் பிள்ளையும் இருக்கையில் இதுமட்டும் நமக்கென்ன சாச்வதமா? மனிதவாழ்வுக்கு முக்கியமானது மனநிம்மதி, தெம்பு, உத்ஸாகமாய்க் கணவனுடன் குடும்பம் நடத்துவது, உத்தம மார்க்கத்தில் காலத்தைக்கடத்துவது;

இதுபோன்ற விஷயங்களில் என் கண்முன்பு காட்டிய பணத்தினால் எதைப் பெறமுடியும்?*...என்கிற ஒரு மகத்தான ப்ரச்னையும் பலமான கேள்வியும் அழுத்தமாக உண்டாகிவிட்டன.

சர்மா அங்குநின்றால் இன்னும் என்ன கேள்விகளை அம்மனிதர் கேட்டுவிடுவாரோ என்கிற ஆத்திரம், பயம் இவைகளினால் தூண்டப்பட்டு உடனே வெளியில் வந்துவிட்டார். வந்தவர் புதியபெண்ணைப்பார்க்கவேண்டுமென்கிற ஆசையால், அசடுவழியச் செல்லும் சர்மாவின் பின்னால் போகாமல், தைரியமாய் உள்ளே எட்டிப்பார்த்தார். சிறந்த அழகுடன் அப்சரஸ்போன்று நிற்கும் கலாவதியைப் பார்த்து ப்ரமித்துப்போய்,'அடபாவிப் பெண்ணே! உன்னழகை அத்புதமாகச் சித்திரித்த ப்ரம்மா உன்தலையில் இப்படியா எழுதிவிட்டார்? தேவகிதான் சிறந்த ரூபவதி என்று இதுவரையில் எண்ணி இருந்தது தவறு என்பது இப்போதல்லவா தெரிகிறது!''....என்று வியப்புற்று நிற்கையில், முன்னால் மூன்றடி நடந்த சர்மா பின்னால் திரும்பிப்பார்த்தார். தன் புதிய இளம் மனைவியை வந்தமனிதன் பார்ப்பதைக் கண்டதும் வயிற்றில் சுறீரென்று தைத்தது. தடதடவென்று வந்து எதிர்வீட்டுக்காரரைக் கையைப் பிடித்து அழைத்துச்சென்று, "என்சார்! வீட்டில் ப்ரஸவமாயிற்றே! இதுவா ப்ரஸவகாலம்?''......என்று எதையோ பேசி அவருடைய கவனத்தை மாற்றப்பார்த்தார்.

வந்தவர்:—என்ன சார்! கல்யாணம் செய்துகொண்ட உடனே நினைவுகூட மாறிவிட்டாற்போலிருக்கிறதே! குழந்தைபிறந்து 15 தினங்களாகின்றன; இப்போதுதான் ஏதோ கேட்கிறீர்களே!--என்றதும் சர்மாவின் அசட்டுத்தனம் பின்னும் அதிகரித்து முகத்தில் வழிந்தது. குப்புறவிழுந்தும் மீசையில் மண்படவில்லை என்பதுபோல்...''ஹி...ஹி...ஹி!...மன்னிக்கணும் சார்! நான் ஏதோ மறதியால் உம்மை ராமநாதன் என்று எண்ணிக்கேட்டேன். அவருக்கும் புத்ரோத்ஸவம் இப்போது நடக்கப்போகிறது சார்!...சரி.... நீங்கள் தயவுசெய்து மன்னிக்கவேணும். ஆபீஸுக்கு நாழிகையாகிவிட்டது....நான் வருகிறேன். பிறகு பேசுவோம்''....என்று கூறியபடியே கட்டாயமாய் வந்தவரை அனுப்பிவிட்டு "பொழுது போக்கற்ற தடியன் விசாரிக்க வந்துவிட்டான். முட்டாள் பயல்! என் வீட்டில் எது நடந்தால் இந்த நாயிக்கு என்ன வந்தது? வந்தவன் என்னுடன் பேசிவிட்டுப் போகாமல் உள்ளே எட்டிப்பார்க்கிறானே அதிகப்ரஸங்கி!'' என்று முணுமுணுத்தவாறு ஸ்நானம் செய்துவிட்டு வந்து, கலாவதியைத் தானே அழைத்துச் சென்று வீடு பூராவையும் காட்டி "இதுஇது இந்த இடம்'' என்று கூறிவிட்டு அவளையும் ஸ்நானம் செய்யச்சொல்லிப் பின் கூடஉட்கார்ந்து சாப்பிட அழைத்தார்.

---

*குறிப்பு:—படாடோபத்தின் பரிபவம் என்கிற புத்தகத்தைப் படித்தால், பணத்தினால் பெறமுடியாதவை எவை?—என்ற ப்ரச்னையும் விடையும் அத்புதமாகத் தெரியும்.

"நான் பிறகு சாப்பிடுகிறேன்" என்று கலாவதி மறுத்து விட்டதால், சர்மா திருகத்திருக விழித்தவாறு தான் சாப்பிட்டு மாடிக்குச் சென்றார். அவர் இரண்டுமாதம் லீவு வாங்கிக்கொண்டி ருக்கிறார் என்று யாருக்குத்தெரியும்? எதிர்வீட்டுக்காரனை அனுப்பு வதற்காக ஆபீஸுக்குப் போகவேணும் என்று பொய் சொல்லி யதும் ஒருவருக்கும் தெரியாது.

எதிர்வீட்டுக்காரன் கல்யாணம் விசாரிக்க வந்ததுபோல் இன் னும் யாராவது வந்துவிடப்போகிறார்களே என்று பயம் தோன் றியதால் யார் வந்தாலும் தான் வீட்டிலில்லை என்று சொல்லிவிடும் படி உத்திரவிட்டார். கலாவதி ஸ்நானம் செய்யவோ சாப்பிடவோ வெகுநேரம் வரவில்லை. அதுதெரியாத சர்மா அவள் போஜனத்தை முடித்துக்கொண்டு வந்திருப்பாள் என்று எண்ணி அவள் விடு திக்கு வந்தார்.

தன் மகனோ மகளோ சாப்பிட்டார்களா என்பதைச் சற் றும் கவனிக்கவே இல்லை. இங்கு வந்தபோது எப்படி இருந் தாளோ அதேபோல் கலாவதி ஒருமாதிரி ப்ரமைபிடித்தவள்போல் உட்கார்ந்திருப்பதைக் கண்ட சர்மா "ஏன் கலாவதி! இன்னும் குளித்துச்சாப்பிடவில்லை? மணி ஆகிவிட்டதே! எழுந்திரு, உடம் புக்கு ஆகாது. இரவெல்லாம்கூட ரயிலில் நீ தூங்காமலேயே விழித்திருந்தாயே. இப்போது சாப்பிட்டுவிட்டு சற்று களைப்பாறக் கூடாதா? எழுந்திரு; உன்னை இந்த வீட்டில் உபசரித்து அழைத் துப்போடுகிறவர்கள் யாருமில்லை. இந்த வீட்டிற்கு நீயே எஜமானி, நீயே சர்வாதிகாரி. நான்கூட இனி உன்கீழ் அடங்கியவன்தான். எழுந்து சாப்பிடவா!" என்று ஏதேதோ கூறினார்.

அதேசமயம் "அம்மா! வெந்நீர் ஆறிப்போகிறதே. எத்தனை நேரமாகக் கூப்பிடுகிறேனே" என்றாள் மாணிக்கம். இதைக் கேட்டதும் சர்மா சற்று அதிகாரக்குரலில் "ஏய் மாணிக்கம்! நீ இந்த வீட்டில் நெடுநாளாக இருப்பவள் என்றாலும் நீ ஒரு வேலைக்காரி என்பதை மறந்து உன் எஜமானியை அதிகாரம் செய்யவேண்டாம். அத்தனை சுதந்தரம் வகித்து நீ ஆட்சி செய்வ தாயிருந்தால் இன்றே வெளியேறலாம்." என்ற வார்த்தையை சற்றும் எதிர்பாராத விதம் கொட்டிவிட்டார்.

இதைக்கேட்ட மாணிக்கத்தின் இதயம் வெடித்துவிடும் போலாகிவிட்டது. தான் எத்தனையோ வருஷகாலமாய் இந்த வீட் டிலிருந்தும் இதுவரையில் இம்மாதிரியான வார்த்தை கேட்டதே இல்லையாகையால் மாணிக்கத்தின் கண்களில் ஜலம் குபீரென்று வந்தது; தொண்டையை அடைக்கும் துக்கத்தினால் பதில்பேசாமல் உள்ளே சென்றுவிட்டாள்.

ஏற்கெனவே தேவகியும் தேவநாதனும் சாப்பிடாத கவலை யுடன் மனம் புண்பட்டிருக்கையில் சர்மாவின் வார்த்தைபாணம் பழுக்கக் காய்ச்சிய கோலைப்பாய்ச்சியதுபோலிருந்தது. தான் வந்ததும் வராததுமாய் அடியும் வசையும் ஏதோ பயங்கரமாக

இருப்பதைப் பார்த்ததும் கலாவதிக்கு ஒன்றுமே புரியாது கண்ணைக்கட்டிக் காட்டில்விட்டதுபோல் தோன்றியது. புதிய வாழ்க்கை வாழ காலை வைத்தவுடனே இதுதானு ஆனந்தம்.? ஒன்றுமே விளங்கவில்லையே !?...என்று தனக்குள் பெருத்த குழப்பமடைந்து இடிந்துவிட்டாள். "நாம் ஏன் கல்யாணம் செய்து கொண்டோம்!" என்கிற எண்ணமே முதலில் உண்டாகியது. மனக்குழப்பத்தின் வேகத்தினல் முகத்தில் கவலையும், ஏக்கமும் தோன்றியதேயன்றி முகம் மலர்ந்து காணப்படவில்லை.

கிழவரின் துணைப்பிற்காக எழுந்து சென்றாள். வீடு புதியதாகையால் தானே ஒவ்வொரு இடமாகப்பார்த்துக்கொண்டே சென்றாள். சமையல் அறையில் மாணிக்கம் விம்மி விம்மி அழுதபடியே நின்றாள். சமையல்கார சங்கரன் மாணிக்கத்தைத் தேத்தரவு செய்துகொண்டிருந்தான்.

மாணிக்:—சங்கரா! மனிதர்களுக்கு மானந்தான் பெரிதேயன்றி வயிறு வளர்ப்பது பெரிதல்ல. நாயும் பன்றியும் வயிறு வளர்ப்பதுபோல் மனிதரும் வாழ்வது ஒரு வாழ்வா? அந்த மகா உத்தமியின் பழக்கத்திற்காகவும் அந்திகாலத்தின் வேண்டுகோளுக்காகவும் நான் இதே இடத்தில் சுதந்தரமாக இருந்தேனேயன்றி இவர்கள் கொடுக்கும் சம்பளத்தைப்பார்த்தா இருக்கிறேன். இன்றுதான் வந்துள்ள புதியபெண்ணின்முன்பு அவர் கூறிய வார்த்தைகள் என்னிதயத்தைப் பிளக்கின்றன. அந்தப்பெண்தான் என்ன மதிப்பாள்? 50 வயதுக்கு அழகான கல்யாணம் தான் செய்துகொண்டு விளையாடுகிறாரே! இதில் பிறரையும் மனம் நோகச் செய்யலாமா? லக்ஷணமாக மகனுக்குக் கல்யாணத்தைச் செய்து ஒரு க்ரகலக்ஷ்மியைக் கொண்டுவந்து குடும்பத்தைக் கண்ணியமான முறையில் நடத்த மூளையில்லாமல் சாரங்கதரன் சரித்திரம்போல் தானே விவாகம் செய்துகொண்ட லக்ஷணத்தில் பழகிய மனிதர்களைக்கூட இப்படித்தான் உதாசீனம் செய்யச் சொல்லுமா?...

சங்க:—மாணிக்கம்! இத்தனை வயதாகியும் உலகத்தின் போக்கு உனக்குத் தெரியவில்லையா! நம் கண்ணாலேயே எத்தனை விசித்திரங்களைப் பார்க்கிறோம். காலம் கலியல்லவா! தனக்கு இறகு முளைக்கும்வரையில் பக்ஷிகள் தாய்ப்பறவையை எதிர்பார்க்கின்றன. பிறகு தானே பறந்துபோகின்றன. இந்த முறையை எத்தனை மனிதர்கள் கையாளவில்லை? ஆதியில் ஒவ்வொன்றுக்கும் பிறரை அரவணைத்து அன்பாயிருந்த சிலர் செல்வமும், பட்டமும் பதவியும் பெருத்துவிட்டபிறகு அன்பு,பழையமாதிரி நடத்தை,விச்வாசம்,மரியாதை சகலமும் மறந்து, பார்த்தால்கூடப் பார்க்காதமாதிரி போகிற கனதனவான்களை நாம் பார்க்கவில்லையா! சிறிய கல்யாணங்களுக்குக்கூட அழைப்பதை நிறுத்திவிடுவதையும் அன்னியர்போலவே பழகுவதையும் பார்க்கவில்லையா! சொந்தம், சுற்றம், சிநேகம் என்கிற முறையிலுள்ளவர்களிடமே உலகம் இப்படி இருக்கையில் நீயோ

சம்பளத்திற்கு வேலை செய்யும் வேலைக்காரி; உன்னைச் சொல்வதில் என்ன அதிசயம்?

மாணிக்:—நீ சொல்வது முற்றிலும் உண்மை. காலத்தின் கோலமாகிய திரை பழய சினேகிதம் அன்பு முதலியவைகளை மறைத்துவிடுகிறது. ஏன்? பழய நினைப்பைக்கூட சில இடத்தில் மறைத்துவிட்டதை நாம் பார்க்கவில்லையா! அளப்பரிய அன்புடன் பார்த்த மனிதர்களிடம் அணுப்ரமாணம் ஏதாவதொரு வித்தியாஸம் கிடைத்தாலும் அதையே மலையாகத் தூண்டிவிட்டுக்கொண்டு அதையே வ்யாஜமாக வைத்து வாழ்க்கைப்பாதையையும் சிலர் மாற்றிவிடுகிறார்கள். நீ சொல்வதுபோல் வேலைக்காரியாகிய என் கதியைச் சொல்லவேண்டுமா? நான் மகா ரோஷக்காரி என்பதை அவர் மறந்து புதுவெள்ளத்தில் சிக்கி உளறிவிட்டார். அததன் விதிப்படி எல்லாம் நடக்கிறது. இனி நான் அரைக்ஷணங்கூட இங்கு நிற்கமாட்டேன்...என்று புலம்பியபடியே சொன்னாள்.

சங்:—மாணிக்கம்! வில்லம்பு பட்டால் ரணம் ஆறிவிடும்; சொல்லம்பு பட்டால் ஆறாது. அதை நான் அறிவேன். பாவம்! உலகமறியாத இளங்குழந்தை தேவகியை நீ விட்டுவிட்டுப் போய்விட்டால் அதன் கதி என்னவாகும்? மூத்தாள் இளையாள் கதை வீணாகிப்போகுமா? புதிய எஜமானி காலவைத்த நிமிடமே தலைக்குத் தலை பிள்ளையின்மீது தணிகரமாக அடி விழுந்துவிட்டது. இத்தனை வருஷமாக சகல கஷ்டதுக்கங்களையும் சகித்துக்கொண்டிருந்த உன் மீது சொல்லம்பு பாய்ந்துவிட்டது. இப்படியிருக்க இனிமேல் ஆட்சி தெரிந்தே இருக்கிறது. தேவகிக்காக நீயும் சற்று பொறுத்துக் கொண்டிரு. பிறகு போய்விடலாம்...என்று ஹிதமாயும் மெல்லிய குரலிலும் சொன்னான்.

கலாவதிக்கு முற்றிலும் ஸ்பஷ்டமாகப் புரியவில்லை என்றாலும் தன்னைப்பற்றி ஏதோ வித்யாஸ அபிப்ராயமுண்டாகிப் பேசுவதாயும், தன் கணவன் செய்துள்ள கொடுமைக்காக மாணிக்கம் போய் விடுகிறேன் என்று சொல்வதாயும் நன்றாகப் புலனாகிவிட்டது. உள்ளே வரவுமில்லை; பதில் பேசவும் இல்லை. குளிக்கப்போவதற்குச் சென்றவள் திரும்பி நேரே மாடிக்குச்சென்றாள்.

மாடியையும் புதிதாகப் பார்த்துக்கொண்டே போனாள். தேவகி கட்டிலில் குப்புறப் படுத்து விக்கி விக்கி அழுவதையும், தேவநாதன் விடுதியில் அவன் புலம்புவதையும் பார்த்ததும் கலாவதிக்கு ஒன்றுமே புரியாது மனது கலங்கிக்குழம்பித் தத்தளிக்கிறது. தான் காலவைத்தவுடனேயே தலைக்குத் தலை பிள்ளைக்கு அடி விழுந்தது, என்று சமையல்காரன் சொல்லியவார்த்தைகள் பளிச்சென்று இவள் காதில் ஒலித்து இதயத்தில் பாய்ந்தன. ராஜ வடிவமுள்ள இப்பிள்ளையும், ரதியைப்போன்றுள்ள இப்பெண்ணும் பயித்தியம் என்று தன்கணவன் சொல்லியது உண்மையாக இருக்குமா? என்கிற ஒரு புதிய சந்தேகமும், கணவனிடம் நம்பிக்கையற்ற உணர்ச்சியும் தோன்றியதால் ஜன்னலால் பார்த்த

படியே அசையாது நின்றுவிட்டாள். அவளுக்கு சகலமும் விளங்காத புதிர்போல் தோன்றியது.

---

## 10

"கலாவதி சாப்பிட்டாளா? சரியா சாப்பிட்டாளா?" என்று பார்ப்பதற்காக சர்மா பின்பக்கத்து மாடிப்படி வழியாக இறங்குவதற்கு வந்தார். அப்போது கலாவதி தன்மகன் விடுதியின் ஜன்னலால் பார்த்துக்கொண்டுகிற்பதைக் கண்டு தீயைமிதித்தவர்போல் துள்ளிக்குதித்தவாறு தடதடவென்று வந்து, கலாவதி திடுக்கிடும்படி அவள் கையைப்பிடித்து அன்பாக அழைத்துச்சென்றவாறு... "கலாவதீ! நான் உனக்குச்சொல்லியதை மறந்துவிட்டாயா? பயித்தியங்கள் நிற்கும் இடத்தில் நீ நிர்ப்பயமாய் வேடிக்கைபார்ப்பதுபோல் நிற்கிறாயே! அவன் குணமும் மாதிரியும் உனக்குத் தெரியாது. திடீரென்றுவந்து உன்னையப்படியே மென்னியைப்பிடித்தால் என்ன செய்வாய்?" ...என்றபோது கலாவதிக்குக் களுக்கென்று சிரிப்பு வந்துவிட்டது.

இச்சிரிப்பைப்பார்த்ததும் சர்மாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. ஒன்றுமே விவரம்புரியாமல் ஒரு க்ஷணநேரம் விழித்தார். "ஏன் கலாவதி சிரிக்கிறாய்"? என்றார். "ஒன்றுமில்லை. பயித்தியங்களிடத்திலேயே அவஸ்தைப்பட்ட என்னை பகவான் பயித்தியங்களிடத்திலேயே கொண்டுசேர்த்தாரே என்று எண்ணும்போது சிரிப்புவந்துவிட்டது." என்றாள்.

கிணறுவெட்டப் பூதம்கிளம்பியதுபோல் ஒருபொய்யைவேண்டுமென்று சொன்னதில் உண்மையாவே விபரீதம் விளைந்துவிட்டதோ! என்கிற பயமும் உண்டாகியதால் "என்னகலாவதீ! நீ பயித்தியங்களுடன் அவஸ்தைப்படுகிறாயா? உன்வீட்டில் யாருக்குப்பயித்யம்?" என்று அதிர்ச்சியுடன் கேட்டார்

கலா:—(சற்று அலக்ஷியமாகவே)...யாருக்கென்ன? எங்க தாதாவுக்கு, பிறகு தகப்பனாருக்கு, என்மூத்த சகோதரிக்கு எல்லோருக்கும் பயித்தியந்தான். என்பிதாவின் பயித்தியத்தின் மூர்க்கத்தனத்தினால் அடிபட்டுத்தான் என்தாயார் இறந்தாள். பாம்பரையாகப்பயித்தியம் இருப்பதை அறிந்துதான் என்னை யாரும் மணக்க முன்வரவே இல்லை. நான் கன்னியாகவே இருந்துவிடத்துணிந்தேன். ஏதோ, கல்யாணத்தரகரின் தயவால் நான் உங்களையடைந்தும் பயித்தியங்களின் மத்தியிலேயே என்காலம் கழிக்கும்படி விதி தொடர்ந்துவிட்டதை எண்ணித்தான் சிரித்தேன்.

சர்மா:—உன்தகப்பனார் இப்போது இறந்து...

கலா:—இறக்கவில்லை. பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறார். தரகர் உங்களிடம் இறந்துவிட்டதாகச்சொன்னாரா?

சர்மாவுக்கு இடிவிழுந்ததுபோலாகிவிட்டது. "தாய்தந்தையற்ற பரதேசி அழகிய யுவதி அவளுக்கு திக்கில்லாததால் தன்னிடமே

வைத்திருப்பதாயும் தானே கல்யாணம்செய்துகொடுப்பதாயும் கூறியல்லவா அந்த மனுஷ்யன் ஏமாற்றி இருக்கிறான்!" ...என்று சற்று இவர் யோசிப்பதைப் பார்த்த கலாவதி "என்னயோசனை? பரம்பரையாகப் பயித்தியமிருப்பதால் இவளுக்கும் எங்கு பைத்தியம் பிடித்துவிடுமோ என்று பயப்படுகிறீர்களா?......பரவாயில்லை. இரண்டுபேர்களுடன் மூன்றாவது நம்பராக இருந்தால் போகிறது. பகவான் சரியான இடத்தில்தான் சேர்த்திருக்கிறார்." என்றாள்.

இதைக்கேட்ட சர்மாவுக்கு முதலில் இருந்த மனத்துடிப்பும் வேகமும் சற்று அடங்கியதாகவே தோன்றியது. கலாவதி குளித்தாளா! சாப்பிட்டாளா என்று கேட்பதைக்கூட மறந்து, "இரும்புப் பெட்டிசாவியை இவளிடமிருந்து உடனே வாங்கிக்கொள்ள வேண்டும்; இவளிடம் அது இருப்பது ஆபத்துத்தான். ஒருவேளை பரம்பரைச் செல்வமான பயித்தியம் இவளுக்கும் பிடித்துவிட்டால் என்ன செய்வது? ஒரு மாசு மறு இல்லாத தன் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பயித்தியம் என்று துணிந்துசொல்லியது இப்படியா பூதம் கிளம்பியது?" என்கிற எண்ணத்தில் தம்பித்தார்.

சிலவினாடிகள் சென்றபிறகுதான் கலாவதி குளிக்கவில்லை, சாப்பிடவில்லை என்பது நினைவுக்கு வந்தது. "கலாவதீ! முதலில் நீ குளித்து, சாப்பிட்டுவிட்டுவா" என்று மிகவும் கனிவுடன் கூறினார். உடனே கலாவதி எழுந்து இரண்டடி வைத்ததும் சர்மா... "கலாவதீ! இரும்புப்பெட்டிச் சாவியை இப்படிக் கொடுத்துவிட்டுப்போ...வெந்நீர் அறையில் மறந்துவைத்தால் ஆபத்தாகும்"என்று இந்த சமயம் சாவியை வாங்கிக்கொள்வதற்காகக் கேட்டார்.

"உம் சாவியை நானா வைத்துவிட்டு மறப்பேன்? இதோ பாருங்கள் திருமாங்கல்யத்துடன் சேர்த்துத் தங்கச்சங்கிலியில் கோர்த்துவிட்டேன். இதைவிட்டு இனி அசையவே அசையாது. இதைப்பற்றி பயப்படவேண்டாம். நானா இதை மறந்துவைப்பேன்?" என்று கூறியபடியே வெந்நீர் விடுதிக்குச் சென்றுவிட்டாள். "பரம்பரையாகப் பயித்தியமாயிருக்கும் குடும்பத்தில் பிறந்தவளா இவள்! இவளிடம் சாவியகப்பட்டுவிட்டதே!" என்ற கவலையொருபுறம் புதிதாகப்புகுந்துகொண்டது.

தலையைத் தடவியவாறு மாடி வராந்தாவில் நின்று கீழே உள்புறம் உற்றுப்பார்த்தார். கீழே முன்கட்டுஹாலில் மாணிக்கம் தேவகியைக் கட்டியணைத்து முத்தமிட்டு "கண்மணீ! நான் சொல்லியதெல்லாம் நினைவிருக்கட்டும். நான் உன் தாயாரின் மரணத்தறுவாயில் கூறிய வார்த்தைக்காகத்தான் இத்தனை காலமும் இருந்தேன். உன் பிதாவின் வாயினாலேயே 'போய்விடு'என்று சொல்லிய பிறகு மானங்கெட்டு நான் அரைக்ஷணங்கூட இருக்கமாட்டேன். நீ அழாதே! உன் சிறிய தாயாரிடம் பணிவாய் அன்பாய் மரியாதையாய் நடந்துகொள்ளம்மா! அண்ணாவை நீதான் அக்கரையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். கண்மணீ! நல்லகாலம் பிறந்து யாருக்காவது உன்னை மணம் செய்துவைத்தால் அதன்பிறகு உன்

புக்ககத்தில் வந்து உன்னைப்பார்க்கிறேன். அண்ணாவிடம் சொல்லு" என்று தன் புடவையை உதறிக்காட்டிவிட்டு தடதடவென்று செல்வதைக்கண்டார்.

ஆனால், பேசிய பேச்சுமட்டும் ஸ்பஷ்டமாகக் காதுகேட்க வில்லை. அவள் அழுததும் தேவகி அழுததும் அவள் சென்றதும் தூரவிருந்துபார்த்ததில் மாணிக்கம் தான் சொல்லுவதற்காகக் கோபித்துக்கொண்டு சென்றதாக எண்ணாமல் தன்னுடைய மனைவி யைக்கண்டு பொறாமையினால் போவதாக எண்ணினாரேயன்றி வேறு தோன்றவில்லையாதலால் மாணிக்கத்தையோ, தன்மகளையோ கூப்பிடாமல் மவுனமாகத் திரும்பிச்சென்றார். அவர் பார்த்ததும் சென்றதும் தேவகிக்குத் தெரியாதாகையால் தேம்பித்தேம்பிப்புலம் பியபடியே கூடத்தில் ஒரு பலகையில் உட்கார்ந்தாள். அவளை ஆற்றுவாருமில்லை; தேற்றுவாருமில்லை. அவளுடைய பரதேசித் தனம் அப்போதுதான் நன்றாகத் தெரிந்தது.

கலாவதி குளித்துவிட்டு கூடத்தில் வரும்போது தேவகி விம்மி யழுங்குரல் கேட்டு அசந்துபோய் அருகில் வந்தாள். அவளை யறி யாத ஒரு பச்சாத்தாபம் உண்டாகியதால் "குழந்தாய்!...அம் மணீ!" என்று யாழ் இசைப்பது போன்ற குரலில் கூப்பிட்டு மெல்லத் தலையைக்கோதித் தடவினாள். தேவகி தலை நிமிர்ந்து பார்த்தாள். எங்குமில்லாத துக்கம் பொங்கிவிட்டதால் "அம்மா!" என்று கன்று கதறுவதுபோல் கதறியவாறு கலாவதியைச் சேர்த் துக்கட்டிக்கொண்டாள்.

கலாவதியே ப்ரமிப்படைந்தாள்; கண்ணீரும் வந்துவிட்டது. "அம்மணீ! அழாதே! உன் தாயாருடைய ஸ்தானத்திற்கு நான் வந்துவிட்டதும் உலகத்திலுள்ள சில இளையமனைவிகளைப்போல் நானும் நடந்துகொள்வேன் என்று நீ நினைக்காதேம்மா! நான் வய தில் சிறியவளாயினும் உலகானுபவம் சுமாராக அறிந்திருக்கிறேன். எழுந்து சாப்பிடவாம்மா! நான் வந்து இன்னும் சிலமணிநேரங் கூட ஆகவில்லை என்றாலும் உங்கப்பாவின் போக்கை நான் வெகு நன்றாகத்தெரிந்துகொண்டேன். எழுந்திரம்மா!" என்று அன் பொழுகக் கூறி எதையோ எண்ணியவளாய் மாடிக்கு ஓடினாள்.

தேவநாதன் குப்புறப்படுத்துப் புலம்புவதைக் கண்டதும் கலாவதிக்கு மனது துணுக்குற்றது. சுபமாக விவாகத்தைச் செய்துகொண்டு வந்த நிமிஷமே இம்மாதிரி மூலைக்குமூலை அழுவ தைப்பார்த்ததும், தன் வாழ்நாளே இப்படித்தான் ஸாரமற்றதாகப் போய்விடும் என்று துணிந்துசெய்துகொண்டும் இன்னும் மோச மான நிலைமையில் போய்விழுந்துவிடுமோ என்கிற ஒரு புதிய திகில் உண்டாகிவிட்டது.

தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்பார்கள். தன்னுடன் பிறந்த சகோதரனானாலும் சரி, வயிற்றில் பிறந்த பிள்ளைகளானாலும் சரி ஒருவரம்பு தாண்டிவளர்ந்துவிட்டால் உறவுமுறைக்குமீறி அருகில் சென்று பேசுவதற்குச் கூச்சமும் ஒருவிதமான மரியாதையும்

உண்டாகிவிடுகின்றன. முன்பின் என்றுமே பார்த்திராத ஒரு யுவனுடன் தான் எப்படிப் பேசுவது? அதிலும் அவன் பயித்தியம், மூடன், தூர்த்தன் என்றுவேறு சர்மா சொல்லியிருப்பதால் என்ன செய்வது?...என்கிற ஒருபெரிய குழப்பமும் தர்மசங்கடமான நிலைமையும் உண்டாகிக் கலாவதி தியங்கித்தியங்கி நின்றுள். மறுபடியும் தன்னைத்தானே சற்று தேற்றிக்கொண்டு "தேவநாதா!" என்று தனது மதுரகண்டத்தில் அன்பு த்வனிக்கக் கூப்பிட்டாள்.

திடுக்கிட்டவனாய்த் தேவநாதன் திரும்பிப் பார்த்தான். புதிய பெண் தன் அறையில் நிற்பதைக்கண்டதும் அவன் உள்ளத்தில் திகிலும் பயமும் உண்டாகித் தூக்கிவாரிப்போட்டது. சடக்கென்று எழுந்தான்; இதற்குள் கலாவதி "அப்பா! சாப்பிடவா! என்பொருட்டு நீங்கள் பட்டினி இருந்தால் பகவானுக்குப் பொறுக்காது; வாப்பா!" என்று இனிய இசைபோல் கூப்பிட்டதும் பதில் பேசத்தெரியாமல் சரீரம் நடுங்கியவாறு நின்றுன்.

மீண்டும் கலாவதி மிகவும் பரிவுடன் தேவநாதனைப்பார்த்து "குழந்தாய்! நான் மாற்றுந்தாய் என்கிற பீடத்தை ஆரோகணிக்கும் விதி இருக்கிறது என்று தெரிந்திருந்தால் நான் இத்தகைய பொன் விலங்கைப் பூட்டிக்கொண்டு அசல் விலங்கை (மிருகத்தை)ப்போல் பொன்கூண்டில் வசிக்கும் பாதகத்தைச்செய்ய ஒப்புக்க மாட்டேன். நான் வெறும் மனைவி என்கிற ஸ்தானத்தைமட்டுத்தான் வகிக்கப்போவதாக உன்பிதா கூறி ஏமாற்றியதால் என்னுடைய மிகமோசமான நிலைமைக்கு ஓர் பரிகாரம் உண்டாகியதாக எண்ணி ஏமாந்தேன். என்னுல் நீங்கள் எத்தகைய ச்ரமமும் படும்படி நான் நடக்க விரும்பவில்லை. வாருங்கள். உங்களிருவருக்கும் நான் பரிமாறிவிட்டு நானும் சாப்பிடுகிறேன்" என்று ஆணி அடித்ததுபோல் கூறும்போது, சர்மா "இவள் சென்று வெகுநேரமாகிவிட்டதே! இன்னும் வரவில்லையே!" என்று தேடிக்கொண்டு வந்தார்.

மாடியிலேயே அவள் தனித்து தேவநாதனுடன் பேசுவதைப் பார்த்ததும், எரிமலையே தன்தலைமீது தடாரென்று விழுந்துவிட்டது போன்ற அதிர்ச்சியுண்டாகித் தம்பித்தார். "சற்றுமுன்பு ஒருதரம் வந்து நின்றுள்; இப்போது நேரே உள்ளேயேபோய்ப் பேசவாரம்பித்துவிட்டாளே...இவளாகப் பேசப்போனுளா? அல்லது அந்த தடியன் வலிய அழைத்துப் பேசுகிறுனு? ஒன்றும் புரியவில்லையே? இதென்ன செய்கை?" என்று பலமான சந்தேகம் தோன்றியதால், தான் என்ன செய்வதென்று தெரியாமல் வாசற்படியருகில் வந்து நின்றுர்.

இவரைக் கண்டவுடனே தேவநாதனின் சப்த நாடியும் படபடத்து நடுங்கவாரம்பித்தன. உடனே கலாவதியை நோக்கி, "தாயே! உங்களுக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம்; தயவுசெய்து இங்கு வாதிருக்கும்படி வேண்டுகிறேன்" என்று கூறிவிட்டு தடதடவென்று வெளியே போய்விட்டான். கண்களில் நெருப்புப்பொறி

பறக்க நிற்கும் சர்மாவைக் கண்ட கலாவதி கடுகளவுகூடப் பயப்படாமல் அந்தநெருப்புக்குமேல் நெருப்புப் பறக்கும் சீற்றத்துடன் விழித்துப்பார்த்தாள். வாய்திறந்து பதில் பேசக்கூட விரும்பவில்லை. ஆழ்ந்த யோசனையுடன் தன் அறைக்கு வந்தாள். அவள் இதயம் படும் வேதனையை அளவிட்டே கூறமுடியாது தவித்தது.

சர்மாவுக்கு இந்த நிமிஷந்தான் கலாவதியின்மீது கோபம் வந்தது. தன்னுயிரினும்இனிய இரும்புப்பெட்டியின் சாவியையும் தான் வாங்கிக்கொண்டு தன்மகனிடம் திருட்டுத்தனமாகத் தானே பேசச்சென்றதுமல்லாமல் அவன்எதிரில் தன்னைவிழித்துப் பார்த்தபார்வையும், பிறகு தன்னறைக்குச் சென்றுவிட்டசெய்கையும் அவரைக் கலக்கின. பின்தொடர்ந்து கலாவதியின் அறைக்கு வந்தார். தாங்கள் ஆனந்தமாளிகையில் வசிக்கப்போகும் சந்தோஷத்துடன் வந்து சிலமணிநேரங்கூட ஆகவில்லை. இதற்குள் இத்தகைய பெரும்புயலடித்து மனத்தைக் கலக்கும் இவள் மனுஷியா? ராட்சஸியா? என்ற பெரிய சந்தேகம் உண்டாகிவிட்டது.

கலாவதி தன் தனிவிடுதியில் கதவைத் தாளிட்டுக்கொண்டுவிட்டதால் த்ரிசங்குசொர்க்கத்திற்கும் சர்மாவின் வாழ்க்கை நிலைமைக்கும் வித்யாஸமே உண்டாகவில்லை. "கலாவதி! கலாவதி! என்று கதவைத் தட்டினார். கலாவதி பதிலே,பேசவுமில்லை; கதவைத் திறக்கவுமில்லை. இச்செய்கை சர்மாஜீயின் இதயத்தை செம்மட்டி கொண்டடிப்பதுபோ லிருந்தது.

## 11

வீட்டைவிட்டு வெளியே சென்ற தேவநாதன் இன்னதென்று கூறத்தரமற்ற விசனத்துடன், எங்கு செல்வதென்று தெரியாமல் கால்போனபோக்கில் நடந்தான். கோபுரத்தின் தரிசனம் அவன்கண்களில் பட்டவுடனே,''எவ்வளவு துயரத்தையும் தீர்க்கும் சர்வேச்வரன் இந்தஇடத்தில் கோயில்கொண்டெழுந்தருளி இருக்கையில் நீ ஏன் இத்தகைய குழப்பத்துடன் போகிறாய்? எங்கு போனால்தான் உன் துன்பம் தீரும்? இந்த ரக்ஷகனின் அருளல்லாது வேறு எதனால்தான் உன்னைத் தேற்றமுடியும்? வா! உள்ளேவா எம்பெருமானின் திருவடிகளைத்தொழுதுவேண்டு" என்று கோபுரத்தின் சிகரத்தில் ஜம்மென்று பறக்கும் த்வஜமும் கோபுரதரிசனத்தின் கம்பீரத்தோற்றமும் அறைகூவி அழைப்பதுபோலும் உபதேசம் செய்வதுபோலும் தோன்றியதால், சடக்கென்று கோயிலுக்குள்ளே சென்றான்.

உச்சிகால பூஜைசமயமா யிருந்ததால் சிலரே நடமாடினார்கள். சமீபத்தில் தங்கள்வீட்டில் கல்யாணம் செய்துகொண்ட தம்பதிகள் வெகு உத்ஸாகத்துடனும் ஆனந்தமாக நிறைந்த இதயத்துடனும் ஸ்வாமிதரிசனம் செய்வதைக் கண்ட தேவநாதனுக்கு இந்தஜோடிகளுக்குப்பக்கத்திலேயேதன்பிதாவின்தம்பதி ஜோடிகள்

சடக்கென்று கண்முன்பு தோன்றியது. "கல்யாணம் செய்து கொண்டு வந்ததும் வராததுமாய் எத்தனை அமளி நடக்கின்றது! என்ன கல்யாணம் வேண்டிக்கிடக்கிறது? மனமொத்த இன்ப வாழ்வுக்காக விவாகமா? அல்லது மிருகாவேசத்திற்காகக் கல்யாணமா!" என்று ஒரு க்ஷணம் எண்ணி இவர்களையே பார்த்துக் கொண்டு நிற்கையில், தற்செயலாக அந்தப் பெண் தேவநாதனைப் பார்த்துவிட்டாள்.

மனித ஸ்வபாவத்தின் வழக்கப்படி குளிர்ந்த நகைமுகத்துடன் வணக்கம் செய்தபின் "என்ன அண்ணா! சவுக்யமா! அக்கா வரவில்லையா! அக்கா க்ஷேமமாயிருக்கிறார்களா! ஏதோ போதாத காலத்தினால் அன்று உண்டான மனஸ்தாபம் தீரவே இல்லையே அண்ணா! நான் தேவகியைப் பார்க்கவேண்டுமென்று வெகு ஆவலாக இருக்கிறேன். வந்தால் உன்பிதா என்ன சொல்வாரோ என்று பயந்து வராமலிருக்கிறேன். இன்றிரவே நான் ஊருக்குப் போகிறேன். என் கணவருக்கு லீவு ஆய்விட்டது... ஆமாம்!... அப்பா என்னமோ......கல்யா...ணம்...செய்துகொண்டதாகக் கேள்விப்பட்டேன்...

என்று தானே படபடவென்று முன்னால் பேசிவிட்டு இழுத்தாப்போல் இதையும் கேட்டதால் தேவநாதனுக்கு வெறுப்பும் கோபமும் தகப்பனார்மீது பின்னும் மூண்டன. அந்த வேகத்தில் "ஏம்மா மெல்லபயந்து இழுத்துப்பேசுகிறாய்! இதில் ரகஸியமோ ஸந்தேகமோ ஒன்றுமே இல்லை. என் தகப்பனார் உன்னைவிடச் சிறு பெண்ணை மணந்துகொண்டு கம்பீரமாக இன்று காலையில்தான் அழைத்து வந்திருக்கிறார். அப்பாவின் கல்யாணப் பரிசுதான் இதோ எனக்குக்கிடைத்தது" என்று அவன் கன்னம்வீங்கப் புடைத்த விரல்களின் தழும்பு இருப்பதை ஆவேசத்தில் காட்டிவிட்டான்.

இதுவரையில் மவுனமாக நின்ற இவள் கணவன் ஆச்சரியமுற்று "என்ன சார்! தலைக்குமிஞ்சிய மகனை உங்களையா இப்படி அடித்திருக்கிறார்? இதென்ன அக்ரமம் ஸார்? இந்த மூளைகெட்ட மனிதன் செய்கைகளை நான் கல்யாணத்திலேயே பார்த்து அறிந்து கொண்டேன் சார்! பணமிருந்தால் என்ன உத்யோகப் பதவி இருந்தால்தான் என்ன? குணமும் நேர்மையும் வேண்டாமா? உங்களுக்கு இந்தப் பரிசு கிடைத்ததுபோல் உங்கள் சகோதரிக்கும் கிடைத்ததா?" என்றான்.

"அண்ணா! எனக்கு என்னபதில் சொல்வதென்றே தெரியவில்லை. இப்படியா நடந்திருக்கிறது. என் மாமாவுக்கு மனைவி இறக்கும்போது 30வயதுதான் ஆயிற்றாம். தன் மக்களின் க்ஷேமத்திற்காகத் தான் த்யாகம்செய்து தனது மக்களைக் காப்பாற்றினர். தலைக்குமேலான பெண்ணும் பிள்ளையும் மலைபோலிருக்கையில் இப்படியா ஒருவர் செய்வார்? இந்த சமயத்தில் நாங்கள் வந்தால் எங்களுக்கும் இதே மரியாதைதான் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. தேவகியை நான் விசாரித்ததாகச் சொல்

ளுங்கள். அவளுக்கு நீங்கள்தான் ஆதரவு. ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவளைப் பார்க்கவேணும்போலிருக்கிறது. நான் ஊருக்குப்போய் கடிதம் எழுதுகிறேன்....என் அண்ணு? அந்த புதிய பெண்ணைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா! அவள் எப்படிப்பட்டவள்? நல்லவளா? கெட்டவளா? எப்படி இருக்கிருள்?"—என்று வரிசையாக அடுக்கிக்கொண்டு போனுள்.

தேவ:—எனக்கு அதைப்பற்றி ஏதவுமே தெரியாதம்மா! எனக்கிருக்கும் கவலை எல்லாம் தேவகியைப்பற்றியதேதான்.

பெண்:—அண்ணு! அப்படி ஏதாவது வீட்டில் உபத்திரவம் உண்டாகுமானல் தேவகியை என் அம்மாவிடம்கொண்டுவிடுங்கள். என் தாயாரும் உன் தாயாரும் உயிரும் உடலும்போல் ஆதியிலிருந்தவர்களாம். உன் தகப்பனுருடைய குணம் பூராவும் அம்மாவுக்குத் தெரியும். இந்த சில்லரை மனஸ்தாபத்தை அவர்கள் பொருள் படுத்தமாட்டார்கள். அம்மாவுக்கு இந்தவிஷயம் தெரிந்தால் மிகவும் வருத்தப்படுவார்கள். அவள் தானுகவே வந்து தேவகியை அழைத்துச் செல்வாள். நானும் ஊருக்குக்குப் போய்விடுவதில் அம்மா மிகவும் சந்தோஷத்துடன் தேவகியை வரவேற்பாள். நீங்கள் யோசித்துச் செய்யுங்கள் அண்ணு!

தேவ:—செல்வீ! இந்தயோசனையையே நானும் செய்து கொண்டிருந்தேன்; நீயும் சொல்கிருய். மத்தியில் ஏற்பட்ட பகையினல் உன்பிதா என்ன சொல்வாரோ என்றுதான் சற்று அஞ்சுகிறேன்.

பெண்:—அப்படி நினைக்கவேண்டாம் அண்ணு! நான் அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்லிவிட்டுப் போகிறேன். அப்பாவுக்கு உடம்பு சரியில்லாததால் நான்குமாதம்லீவு வாங்கிக்கொண்டு க்ராமத்திற்குப் போகப்போகிருர். தேவகிக்கும் க்ராமம் என்ருல் மிகவும் ஆசைஉண்டு; அது எனக்குத் தெரியும். படிப்புக்குச் சற்று பாதகம் ஏற்படும். இருந்தாலும் பாதகமில்லை. அவள் மனநிம்மதியாக இருக்கலாமல்லவா? நீ யோசனையே பண்ணவேண்டாம். இப்படியே செய்துவிடு அண்ணு!

'எல்லாம் நல்லதற்கே' என்பது பழமொழி. அதை தேவநாதன் சிறுவனுயிருப்பினும் அடிக்கடி நினைத்துச்செய்பவன். ஆகையால் இப்பொழுதும் அந்தப்பெண் சொல்லியதையப்படியே ஆமோதித்தான். அனுவச்யமாய் தன்பிதா த்வேஷித்துக்கொண்ட இடத்தில் அன்பையே வளர்க்கவேண்டும்; அதற்கு இதுதான் உபாயம் என்று நிச்சயித்துக்கொண்டான்.

"செல்வீ! உன் யோசனையை நான் மிகவும் வரவேற்கிறேன். நீயும் தேவகியும் ஆதியில் பழகிய சிநேகம் மறையாமலிருப்பதற்கும் இதுவே சாதனம். உனக்கு மிக்க ஆசீர்வாதம். நான் வருகிறேன்." என்றுகூறி விடைபெற்று, தடதடவென்று சென்று ஸ்வாமிதரிசனம் செய்துவிட்டு வெளியேவந்தான், கலங்கித் தவித்த

உள்ளத்திற்கு ஏதோ சிறிது ஆறுதல் கிடைத்ததுபோல் ஒரு த்ருப்தி உண்டாகியது.

## 12

நேரே வீட்டிற்கு வந்த தேவநாதன் தன்னுயிர்ச் சகோதரியைப் பார்த்தான். அவள் கேட்பாரற்ற அனாதை நிலைமையில் புலம்பிப்புலம்பி அப்படியே தூங்கிவிட்டதைக் கண்டதும், அவன் இளம் வாலிபனாயினும் வயிற்றில் தாங்கமாட்டாத சங்கடம் செய்து வதைத்தது. உண்மையில் தூங்குகிறாளா? அல்லது மயக்கம் வந்திருக்குமா?...என்கிற சந்தேகங்கூட உண்டாயிற்று.

தூங்குகிற தங்கையின் தலையை அன்புடன் தடவிவிட்டுப் பின் தன்னறைக்கு ஆவேசத்துடன் சென்றான். மனத்தில் தோன்றியபடி எல்லாம் ஒரு நீண்ட கடிதத்தை எழுதி கவரில்போட்டு அதைத் தன் பிதாவின் தனியறை மேஜைமீது வைத்தான். மறுபடியும் வந்துபார்க்கும்போதும் தேவகி தூங்கிக்கொண்டே இருந்தாள்.

சகோதர வாத்ஸல்யத்தின் வேகம் அவன் உள்ளத்தைப்பற்றி உலுக்கியது. காலை முதல் ஆகாரம் இல்லாமல் அடியும்பட்டு அழுதத் துடிக்கும் குழந்தையைச் சற்றும் கவனிக்காமல் புதுமோகத்தில் விழுந்துழலும் இத்தகைய பிதாவிடமா என்னருமைக் கண்மணியை, புத்தியறிந்த பெண்ணை விட்டுவைப்பது? தாயிக்குத் தாயாகப் பார்த்துக்கொண்டிருந்த மாணிக்கத்தையும் விரட்டியடித்தாயிற்று. சமயல்காரனும் தோட்டக்காரனும் ட்ரைவரும் ஒரே ஆண்பிள்ளைகளின் கூட்டத்து மத்தியிலா இந்த இளம் சிறுமியை விட்டுவைப்பது? போதும்! போதும்! வீணான விபத்தைவிலை கொடுத்து வாங்குவதைவிட விரோதிகளின் காலில் விழுந்து சினேகத்தைச் செய்து கொள்ளலாம், உபகாரம் பெறலாம்"....என்ற ஒரே வீரவைராக்யம் தோன்றியதால், தடதடவென்று தேவகியின் தனி விடுதிக்கு வந்து அவளுடைய உடைகள், புத்தகங்கள் முதலியவைகளை பெட்டிகளில்வைத்துக்கொண்டு தேவகியிடம் வந்தான்.

அப்போதுதான் கண்விழித்துப் புலம்பிக்கொண்டிருந்த தேவகியிடம் வந்து, "கண்ணம்மா! என் அழுகிறாயம்மா! இனி நாம் அழுதாலும் ஆற்றுகிறவர்கள் கிடையாது, பட்டினியாகச் செத்தாலும் கேட்கிறவர்கள் கிடையாது. தேவகி! நான் சொல்வதை நீ கட்டாயம் கேட்டுத்தானாக வேண்டும். இன்றுதான் விவாகத்தைச் செய்துகொண்டு வந்திருக்கையிலேயே நமக்கு இன்றே இப்போதே இத்தகைய தண்டனையெனின், இனி நீடித்த நாட்கள் இங்கிருக்கமுடியாது என்பது விளங்கிவிட்டது. நான் இனி அரை க்ஷணங்கூட இங்கிருக்கமாட்டேன். உன்னையும் இங்கு விட்டுப் போகமாட்டேன். நம்மைப்படைத்த ஆண்டவன் எந்த நிமிஷத்திலும் எந்த இடத்திலும் வைத்து நம்மைக் காப்பாற்றுவார். உனக்கு இனி இவ்விடத்தில் ஆதாரவே இல்லை என்பதையறிந்து நான் உன்னை இங்கு விடமாட்டேன். எனக்கு இனி படிப்பு

வேண்டாம் ஒன்றும்வேண்டாம். நான் எங்காவது உத்யோகம் தேடிக்கொள்ள ப்ரயத்தனம் செய்கிறேன். அப்படி காலவித்யா ஸத்தினால் கிடைக்கவில்லை என்றால், நான் கூலிவேலையாவது செய்து மூட்டை தூக்கியாவது சம்பாதித்து உன்னைக் காப்பாற்றி ஒரு ஏழைச் சிறுவனுக்கு மணம் செய்தகொடுத்துவிட்டுப் பிறகு நான் நிம்மதியாக இருப்பேன். மக்களுக்கு முக்யமானது மானம் கண்ணியம், சத்யம்; இவைகளை இழந்து உன்னத நிலைமையில் வாழ் வதைவிடப் பிச்சை எடுத்தாகிலும் மேல்குறித்த சன்மார்க்கத்தில் பிறர் மதிக்க வாழுவது ஆயிரம்பங்கு மேலானதாகும். உனக்கு உலகானுபவம் அதிகம் போதாதாகையால் நீ விஷயம் புரியாமல் புலம்புகிறாய். உன்னுடைய பிற்கால வாழ்க்கையின் சிறப்புக்கு கட்டிடத்திற்கு இப்போது போடும் அஸ்திவாரந்தான் சிறந்த தாகும். உனக்குப் படிப்பில்லாவிட்டால் பாதகமில்லை...நம் பாரத நாட்டின் நாரீமணிகளின் புகழும் பெருமையும் குன்றாத முறையில் மானத்துடன் வாழ்க்கை நடத்தி பகவானின் முக உல்லாஸமாக நடந்துகொண்டால் போதும். அதைத்தான் நான் விரும்புகிறேன். நீ உடனே கிளம்பு. இனி அரைக்ஷணங்கூட இந்த வீட்டிலிருக்க நான் விடமாட்டேன். எழுந்திரம்மா: இளங்காதலர்களின் வெளி நாட்டமே காணவில்லை. அவர்கள் வெளிவரும்போது பார்த்துக் கொள்வதற்காகக் கடிதம் எழுதிவைத்துவிட்டேன். நீ புறப் படம்மா!'' என்று தன் இதயக் கடலில் அடிக்கும் கொடிய புயல் தோன்றக் கூறினான்.

இதைக் கேட்ட தேவகிக்குத் திடுக்கிட்டு உடம்பு நடுங்கியது. ''வீட்டைவிட்டு வெளியேறுவதா? அண்ணா! இதென்ன வார்த்தை? நமக்கு எங்கு போக்கிடம் இருக்கிறது? யாரிருக்கிறார்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே அண்ணா! அந்தப் புதிய பெண் இப் போதுதான் என்னிடம் வந்து அன்பாகப் பேசிச் சென்றாள், அண்ணா!'' என்று அவள் சொல்லிமுடிப்பதற்குள், ''அடப்பேதைப் பெண்ணே! உனக்கு விஷயம் எதுவுமே தெரியாதம்மா! அந்த பெண்ணிடம் நம்மைப்பெற்ற பிதா என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா! நம்மிருவருக்கும் பயித்தியம் பிடித்திருப்பதாயும், நாம் அவளை இம்ஸித்து ஏதாவது செய்துவிடுவோம் என்றும் நம்மிடம் அவளைச் சேரவே கூடாது என்றும் வாய் கூசாமல் மனந் துணிந்துசொல்லியிருக்கிறார். இதை என்காதினால் நானே கேட் டேன். அத்தகைய பிதாவிடம் இனி இருந்து அவமானமும் சிறுமை யும் படுவதைவிட நாம் நமக்கு விரோதி என்று நினைத்துள்ள... அவர்கள் வீட்டிற்கு முதலில் போவோம். அந்தப் பெண்ணை இப் போதுதான் கோயிலில் கண்டு ஏற்பாடு செய்துகொண்டு வந்து விட்டேன்: காலைமுதல் இன்னும் சாப்பிடாத உன்னை இன்றே திரும்பிப் பார்க்காத மனிதர், இனிமேல் எப்படி நடப்பார் என் பதை நாம் தெரிந்துகொண்டாயிற்று. கிளம்பு. நேரமாகிறது'' என்று கூறி அவள் கையைப் பிடித்து எழுப்பி நிறுத்தினான்.

தங்களைப் பயித்தியம் என்று சொன்னார்?...என்பதை நினைக்க அவள் உள்ளம் மீண்டும் கொதித்தது. தன்னுடைய நிராதரவான நிலைமையும், அண்ணனும் வெளியே போய்விட்டால் தன் கதி எத்தகைய பயங்கரத்தில் முடியும் என்பதையும் ஒரு க்ஷணம் யோசித்தாள். அவளுடைய கண்முன்பு எதிர்காலத்தின் பயங்கரந் தான் பனிச்சென்று புலப்பட்டது. சிறுமியாயினும் உடனே உறுதியும் தெளிந்த ஞானமும் உண்டானதால் மறுபேச்சின்றி அண்ணனுடன் கிளம்பினாள். அவளுடைய பெட்டியை தேவநாதன் எடுத்துக்கொண்டான். சமையல்காரனை அழைத்து, "எங்களைத் தேடவேண்டாம். நாங்கள் போகிறோம்" என்று சொல்லிவிட்டு, ஒருவாடகை வண்டியமர்த்தி அதில் தங்கையையும் ஏற்றிக்கொண்டு தானும் சென்றுவிட்டான்.

சமயல்காரனுக்கு ஒன்றுமே புரியவில்லை. சர்மாவின் போக்கும் அந்த விபரீதத்தினால் விளையும் பயங்கரச் சம்பவங்களும் இவனுக்கு அடங்காத வியப்பைக் கொடுத்தன. 'மாணிக்கம் போயாயிற்று என்று பார்த்தால், வீட்டுக் குழந்தைகள் கூடவா வெளியேறும்படியாகிவிட்டது?' என்று அடங்காத வியப்பும் திகைப்பும் அடைந்தான். சர்மாவின் மதிகெட்டதனத்தை எண்ணி எண்ணி அவர்மீது வெறுப்பும் குழப்பமான எண்ணமுமே தோன்றியது.

தேவநாதனைத் தடுக்கவேண்டுமென்று எண்ணிப் பார்ப்பதற்குள் வாடகைக் கார் பறந்துவிட்டதால், ஏதோமாதிரியான வேதனையுடன் நின்றான். இதே வீட்டிற்கு அவன் வந்து பல வருஷங்களாகிவிட்டதால், அவன் உள்ளம் பல வருஷகால அனுபவங்களை எண்ணிப் பெருமூச்சுவிட்டது. ப்ரமை பிடித்தவன் போல் நிற்கையில், ஒரு ஆங்கிலோ-இந்தியப் பெண்மணி ஸைகிலில் வந்திறங்கி "மிஸஸ் கலாவதி சர்மா எங்கே?" என்று அவர்களுடைய உச்சரிப்பில் கொச்சைக் கொச்சையாகக் கேட்டாள்.

அப்போதுதான் புதிய எஜமானியம்மாளின் திருநாமம் கலாவதி என்பது தெரிந்தது. இந்தச் சட்டைக்காரி எதற்காக இவளை இப்போதே தேடிக்கொண்டுவந்தாள் என்ற சந்தேகம் உண்டாகிவிட்டதால், "நீங்கள் யாரம்மா? என்னசொல்லவேண்டும்? அந்தம்மாள் மாடியிலிருக்கிறார்கள்" என்றான்.

வந்தவள்:—நான் இங்கிலீஷ் உபாத்தியாயினி. கலாவதிக்கு ட்யூஷன் சொல்லிக்கொடுக்க வந்திருக்கிறேன்...என்று கூறியவாறு உள்ளே வந்தாள்.

இந்தத் தகவலை எப்படி அவர்களிடம் தெரிவிப்பது என்று சமயல்காரன் சற்று தியங்கியபடி நின்றான். பிறகு தைரியத்துடன் மாடிக்குச் சென்று "சார்! சார்! யாரோ ஒரு டீச்சரம்மாள் வந்திருக்கிறார்கள். யாரோ கலாவதியம்மாளாமே அவர்களைப் பார்க்க வேண்டுமாம்" என்று வேணுமென்றே கூறினான்.

அப்போது - கலாவதியின் தனி அறைக்கதவு சடக்கென்று திறக்கப்பட்டது. "யாரையா அது?...கலாவதி நான்தான், வேறு

யாருமில்லை. இப்போது ஒருவரையும் பார்க்கமுடியாது என்று சொல்லியனுப்பிவிடும்'' என்று கூறிவிட்டு மறுபடியும் கதவைத் தாளிட்டுக்கொண்டாள். இதைக்கேட்ட சமயல்காரனுக்கு பின்னும் வியப்பு அதிகரித்தது. "சரிதான் மூன்றுபேர் வெளியேறியது போல் நானும் வெற்றிகரமாக வெளியேற வேண்டியதுதான் போலிருக்கிறது'' என்று நினைத்தபடியே சட்டைக்காரியிடம் வந்து "அவர்களால் இப்போது பார்க்கமுடியாதாம்; உங்களைப் போகச் சொன்னார்கள்'' என்றான்.

சட்டைக்காரிக்குக் கோபம் வந்துவிட்டது. "கொஞ்சங்கூட மரியாதையில்லாமல், தாமே வரச்சொல்லிவிட்டுத் தாமே போகச் சொல்வதாவது. நான்ஸென்ஸ்'' என்று திட்டியவாறு போனாள்.

பின்னும் அரைமணிக்கெல்லாம் ஒருபெரிய தம்பூராவைத் தூக்கிக்கொண்டு ஒரு பாட்டுவாத்யாரம்மாள் வந்திறங்கி "கலாவதி சர்மா இருக்கிறார்களா?''என்றாள்.

"சரிதான். இந்தப் புதுமனைவியைச் சந்தோஷப்படுத்துவதற்காகவும்,உத்ஸாகமாகப் பொழுதுபோக்கச்செய்வதற்காகவும் இந்த கிழம் ஏற்பாடு செய்கிறதுபோலிருக்கிறது. பேஷ்! இல்லற இன்ப வாழ்க்கையின் சாதனத்திற்கு இவைகள்ஏற்பாடுபோலும்!'' என்று எண்ணியவாறு உள்ளே ஓடி..."அம்மா! யாரோ!பாட்டுவாத்தியாரம்மாளாம். பெரிய உலக்கையைப் போன்ற தம்பூராவுடன் ப்ரஸன்னமாகி இருக்கிறார்கள்; தங்களை அழைக்கிறார்கள்'' என்று முன்னைவிடச் சற்று தைரியமாகவே கூறினான்.

கலாவதி சற்று கோபத்துடன் வெளிவந்து "ஐயா! கலாவதி இன்னும் ஊரிலிருந்து வரவில்லை என்று சொல்லி அனுப்பிவிடும்'' என்று கூறிவிட்டு மறுபடியும் உள்ளே சென்றுவிட்டாள். சமயல்காரன் இந்த நாடகத்தின் மர்மம் ஒன்றும் புரியாமல் வந்து "அந்த அம்மாள் இன்னும் ஊரிலிருந்து வரவில்லையாம்'' என்றான்.

அதே சமயம்,ஒரு தையல் மெஷின்,ஒரு சிறிய பெட்டி இவை களுடன் இன்னொரு வாத்யாரம்மாளும் வந்துசேர்ந்தாள். இ லைப்பார்த்த சமயல்காரன் "சரிதான் இன்னொருதரம் படியேற் ஸேவைக்கு யார் போகிறார்கள்?'' என்று முணுமுணுத்தவா உள்ளே போய்விட்டான். ஒருவருமே இல்லாத வீட்டைப்பார் கையில், அவனுக்கு மிகவும் விரிச்சென்று இருந்ததோடு துக் மாகவும் தோன்றியது.

---


வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1-4. 3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1-8.
2. மதமா, மனமா 1-4. 4. ராணி சீலாவதி 1-0.

(600 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த குசுமமலர் மாலை ரூ. 9.

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமம்
ஸ்ரீ. ஆ. அண்ணங்கராசாரியர் உரையுடன் பாராயணபதிப்பு ரூ-


நந்தவனம்

## இந்த மாதம்

# ஆவணித் திங்கள்.

ஆழ்வார்களுள் ஒருவரும் அவதரிக்கப் பெறாத இத்தமாதம் அக்குறைதீர ஆழ்வார்களுக்கு 'உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை' என்னும் தாரக போஷக போக்யம் எல்லாமாயிருந்த கண்ணனே அவதரிக்கப்பெற்ற தனிச் சிறப்புடையது. ஆசார்யஸார்வபௌமர் பெரியவாச்சான்பிள்ளையும் திருவவதரித்ததும் இம்மாதமே. இருவரும் ஆவணி ரோகிணியிலே உதித்தவர்கள்.

கண்ணன்: ஸர்வேச்வரனாயிருந்ததோடு த்ருப்தியடையாமல் ஆசார்யத்வத்தையும் ஏறிட்டுக்கொண்டவன். "லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்" என்ற குருபரம்பரையில் முதலிலே நிற்பவனான ஸ்ரீதரனே, கண்ணனாய் ஸ்ரீ கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்து, ஆசார்யத்வத்தின் பெருமையை ப்ரகாசிப்பித்தான். இவனே 'நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத்து ஒருமூர்த்தி!'

பெரியவாச்சான்பிள்ளை: இவர் திருவவதாரம் சோழமண்டலம் சங்கநல்லூரில்; பூர்வசிகைக் குலம்: திருநாமங்கள்: அபயப்ரதராஜர், ஸ்ரீமத் க்ருஷ்ணர்; இவரது ஆசார்யர்—நம்பிள்ளை: இவர் ..ளிச்செய்தவை:— திருவாய்மொழி வ்யாக்யானம் - 24-..ரப்படி, மற்ற மூவாயிரவ்யாக்யானங்கள், பரந்தரகஸ்ய..ரணம், மாணிக்கமாலை, நவரத்னமாலை, பாசுரப்படி ராமாயணம், ..கலப்ரமாணதாத்பர்யம், உபகாரரத்னம், கத்யத்ரய வ்யாக்யானம், ..ளவந்தார்ஸ்தோத்ரவ்யாக்யானம், அபயப்ரதான வ்யாக்..ானம், சரமரகஸ்யம், அநுஸந்தானரகஸ்யம், நிகமனப்படி ..தலியன. இவரது சொல்வன்மையின் சீர்மையை "அதிமதி..ட்பமும் அரும்பெரும் பாண்டித்தியமும் ஒருங்கு நிரம்பிய உத்தம..த்துவான், ரசிகசிகாமணி, வ்யாக்யான சக்ரவர்த்தி, 'தனி சுலோகி' ..னும் வான்மீகத் தனிச்சுலோக மாபாடிய நூலாசிரியர் பெரிய..சான்பிள்ளை" (கம்பராமாயண இன்கவித்திரட்டு—செந்தமிழ்: ..குதி-26—பக்கம் 265.) என்ற திருவாளர் வெ. பா. சுப்பிர..ய முதலியார் பாராட்டுரை வஜ்ரலேபமாக நிலைநாட்டும்.

"பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரிய வ்யாக்கியைகள் செய்வால்—அரிய,
அருளிச் செயற்பொருளை ஆரியர்கட்கு இப்போது
அருளிச்செயல் ஆய்த்து அறிந்து"

..) உபதேச ரத்தினமாலைப் பாசுரம் நித்ய அநுசந்தேயம். இத்..ப அரிய விளக்க விரிவுரைகளில்லையேல், நம்மைப்போல்வார் ..ார்களின் திவ்யஸூக்திகளின் ஆழ்பொருளை எங்ஙனே அறிய..ாம்?

— ஸ்ரீவைஷ்ணவ தாஸன்.

..GANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI ..is printed and published by V. M. PARTHASARATHY ..Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5. ..g Editor: V. M. SRINIVASAN, M. A., B. L.,

Jaganmohini (September. 1949.) Regd. No. M. 2210

## கணேச ஜயந்தியும் மோகினி ஜயந்தியும்
## 26வது பிறந்த நாள் கொண்டாட்டம்

சென்ற சனிக்கிழமை (27-8-49) மோகினி காரியாலயத்தில் மோகினிபீடத்தில் அளவற்ற அன்புள்ளவர்களில் முக்கியஸ்தர்களான பலர் கூடி மோகினியின் 26-வது பிறந்தநாளைக்கொண்டாடினர். காயனபடு கீர்த்தனபடு ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய் அவர்கள் தலைமை வகித்தார். அவ்வமயம் கலாநிதி பி. ஸ்ரீ., பண்டித திருவாலி ராமானுஜாசாரியர், வி. கிருஷ்ணபாய், M. O. அழகியசிங்காச்சாரியர், வா. ஸ்ரீ. சின்னஸ்வாமி ஐயங்கார் முதலியோர் மோகினிக்கும் மோகினி வாசகர்களுக்கும் வாழ்த்துக்கூறி மோகினியின் ஜனனதின ஆராத்ய தெய்வமான ஸ்ரீவிஷ்வக்ஸேன அம்சமான கணேசனுக்கும், அவருக்குச் சக்தியளிக்கும் ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் மங்களாசாஸனம் செய்து சொற்பொழிவாற்றினர். வந்தனோபசாரத்துடனும் ராம்துன் பஜனையுடனும் விழா இனிது முடிவடைந்தது.